www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 12 | மே,யூன் 2005 | பக்கம்12 | விலை 12/- | சுழற்சி 80

## அதிகார ஆதிக்கப் போட்டியால் பொதுக்கட்டமைப்பு கைவிடப்படுமா?















சுனாமிப் பேரலையின் பாரிய அழிவுகள் இலங்கையின் கரையோரங்களில் இடம் பெற்றன.அவற்றில் வடக்கு கிழக்கு கரையோரங்களே மிகப் பெரும் அழிவுகளைக் கண்டது. இதனால் வடக்கு கிழக்கு மக்களுக்கும் பிரதேசங்களுக்கும் உதவ வேண்டும் என்ற அடிப்படையில் வெளிநாடுகள் நிதியும் பொருட்களும் அனுப்பி வைத்தன. உடனடி உதவிகள் மட்டுமன்றி நீண்டதிட்டங்களின் அடிப்படையில் நிவாரணம் புனரமைப்பு புனர்வாழ்வு இயல்புவாழ்க்கை ஏற்படுத்தப் பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. தெற்கு மேற்கு கரையோரங்களில் அவை வெவ்வேறு நிலைகளிலும் அரசியல் சமூக செல்வாக்கு அடிப்படையிலும் ஒரளவுக்குத்தானும் விடயங்கள் இடம் பெற்று வருகின்றன.

ஆனால் வடக்கு கிழக்கு கரையோர மக்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள் மந்தகதியில் அல்லது உருப்படியாக எதுவுமே இடம் பெறவில்லை. இதனால் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என இருக்கும் நிலையில் இரு தரப்பினரும் இணங்கி ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கி அதன் கீழ் நிவாரணம் புனரமைப்பு புனர்வாழ்வு என்பனவற்றை முன்னெடுக்கலாம் என்றே முன் மொழியப்பட்டது. நோர்வே இருதரப்பிற்குமிடையில் அனுசரணையாளராகச் செயற்பட்டது.

ஜனாதிபதி இப் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத் இணங்கினார். புலிகள் இயக்கமும் அதனை ஏற்றுக் கொண்டது. பொதுக் கட்டமைப்பிற்கான வெளிப்படுத்தப்படாத பேச்சுவார்த்தைகள் இரு தரப்பிலும் இருந்து வரும் சமாதானச் செயலகங்கள் மூலம் இடம் பெற்றன. ஆனால் சுனாமிப் பேரழிவு இடம் பெற்று ஐந்து மாதங்கள் சென்ற நிலையிலும் முன்மொழியப்பட்ட பொதுக் கட்டமைப்பு நடைமுறைக்கு வந்தபாடில்லை. காரணம் அதில் ஏற்பட்டுள்ள இழுபறியும் அதிகார ஆதிக்கப்போட்டி காரணமான எதிர்ப்புமேயாகும். இதனால் இப் பொதுக்கட்டமைப்பு என்பது கைவிடப்படுமா? என்ற கேள்வியை உருவாக்கியுள்ளது. அதன் காரணமாக ஏற்கனவே நடைமுறையில் இருந்து வரும் புரிந்துணர்வு - யுத்த நிறுத்த ஒப்பந்தம் குலைந்து மீண்டும் யுத்தம் வெடிக்கக் கூடிய அபாயம் தோன்றியுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

மேற்படி பொதுக் கட்டமைப்பை ஜனாதிபதி எத்தகைய எதிர்ப்பின் மத்தியிலும் கொண்டு வருவதாக அடிக்கடி உறுதி கூறி வருகிறார். ஆனால் ஐ.ம.சு.மு. அரசாங்கத்தின் இருப்பிற்கு காரணமாகி நிற்கும் ஜே.வி.பி இப்பொதுக் கட்டமைப்பை எதிர்ப்பதில் கர்ண கடூரம் காட்டிவருகிறது. பொதுக்கட்டமைப்பு வழங்கப்பட்டால் அரசாங்கத்தில் இருந்து விலகுவதாக அச்சுறுத்தி வருவதுடன் தென்னிலங்கை மக்கள் மத்தியில் தீவிர பேரினவாதப் பிரசாரத்தையும் நடாத்தி வருகிறது.

பொதுக்கட்டமைப்பு என்பது எதிர்கால சமாதானத் தீர்வுக்கான ஆரம்ப நடவடிக்கை என்று ஜனாதிபதி எடுத்துக் கூறி வருகிறார். அதே வேளை ஜே.வி.பி இப்பொதுக்கட்டமைப்பு தனிநாட்டுக்கான முதல்படி என வர்ணித்து பிரச்சாரம் செய்து வருகிறது. அவர்களுக்கு சற்றும் சலிக்காத வகையில் பிக்குமாரின் ஹெல உறுமய கட்சியினர் வீதியில் இறங்கி ஊர்வலம் நடாத்துகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க நிற்கிறது. பொதுக்கட்டமைப்பு விடயத்தில் உறுதியானதும் திட்டவட்டமானதுமான முடிவைத் தெரிவித்து தென்னிலங்கை மக்களை அறிவுறுத்தத் தயாரில்லாத நிலையில் சந்தர்ப்பவாதமாக நடந்து வருகிறது. முன்னுக்குப் பின் முரணாகப் பேசி வருகிறது. பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு என்று கூறிப் பின் அரசாங்கத்திற்குள் ஒருமித்த கருத்து இல்லாததால் அது பற்றி அரசாங்கத்துடன் கலந்து பேசுவதை நிராகரிப்பதாகக் கூறுகிறது. கடைசியாக பொதுக்கட்டமைப்பினுள் உள்ளடங்கியுள்ள விடயங்களை வெளிப்படுத்துமாறு புதுக்கதையை ஐ.தே.கட்சி அவிழ்த்து விட்டுள்ளது.

இவற்றை கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக்கட்சி ஜே.வி.பி ஹெல உறுமய யாவும் பேரினவாதச்சேற்றில் இருந்து வெளியேற முடியாத எருமைகள் போன்றே நிற்கின்றன. அக்கட்சிகளின் பிரதான இலக்கு என்றும் போல் ஆட்சியும் அதிகாரமும் ஆதிக்கமுமே அன்றி நாடு மக்கள் எதிர்காலம் பற்றியவை அல்ல. நாடு வேகமாக அந்நிய மூலதனத்தாலும் அவற்றின் மறைமுக அரசியல் சமூக பண்பாட்டு ஊடுருவல்களாலும் மறு கொலனித்துவமாக்கப்பட்டு வருவது பற்றி மேற்படி கட்சிகளுக்கு துளியளவும் அக்கறையோ கவலையோ கிடையாது. அந்நியருக்கு நாட்டையும் மக்களையும் காட்டியும் கூட்டியும்

தொடர்ச்சி 2ம் பக்கம் ➡

## விழிப்புடன் எழுகிறது மலையகம்

தொழிற்சங்க அங்கத்துவம், பாராளுமன்ற அங்கத்துவம் கொண்ட மலையக அமைப்புக்களின் மக்கள் விரோத நடவடிக்கைகள் தொடர்ந்து அம்பலமாகி வருகின்றன. மே 15 ஆம் திகதி எதிர்ப்பு தினத்திற்கு பரவலாக மலையக மக்களின் அனைத்து தரப்பினரும் வழங்கிய ஒத்துழைப்பு மலையகத்தலைமைகளுக்கு பாரிய அடியை கொடுத்துள்ளது. இந் நிலைமை மாற்று அரசியல் தலைமையின் தேவையை மேலும் உணர்த்தியுள்ளது. அதனால் இ. தொ.காவும், ம.ம.மு யும் போட்டி போட்டுக்கொண்டு பல அதிரடி அரசியல் நடவடிக்கைகளில் இறங்கவுள்ளன. மேல்கொத்மலைத்திட்டத்தை எதிர்த்து மலையகமெங்கும் கடைகள் பூட்டப்பட்டன வாகனங்களிலும் கடைகளிலும் பொது இடங்களில் கறுப்பு கொடிகள் போடப்பட்டன. தொழிலாளர்கள் வேலைக்கு செல்லவில்லை. தோட்டங்களில் மட்டுமன்றி ஏனைய தொழிற்சாலைகளுக்கு மரக்கறி தோட்டங்களில. வேலைக்கு செல்லவில்லை.

அழிவு நிறைந்த மேல்கொத்மலை திட்டத்தை தொடர்ந்து ஆதரித்து வந்த ம. ம. மு தலைமை மே. கொ.



மே 15ம் திகதி மலையகத்தில் மேல்கோத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் நடாத்திய மாபெரும் ஆர்ப்பாட்டத்தைப் படத்தில் காணலாம்.

த். எதிரான நடவடிக்கைகள் உக்கிரமடைந்தால் மே 14 ஆம் திகதி அப் போராட்டத்தை ஆதரித்து அறிக்கை விட நிர்ப்பந்திக்கப்பட்டது. மே 15 எதிர்த்து நடவடிக்கைகளை ஆதரிப்பதாக அறிக்கைவிட்டாலும் அவற்றில் ம.ம.மு பங்கெடுக்கவில்லை. ஆனால் ம.ம.மு தனியாக எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடுகளை செய்துவருவதாக தெரிகிறது. இது சரிந்து போயுள்ள அதன் அரசியல் இருப்பைசரிசெய்யும் நோக்கிலேயே செய்யப்படவுள்ளது.

மே 15 எதிர்ப்பு நடவடிக்கை இ. தொ.க, ம.ம.மு போன்றவற்றின் ஒத்துழைப்பில்லாமல் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளன அதனால் அவ் விரு அமைப்புகளும் ஆட்டம் கண்டுள்ளன. ஆத்திரமடைந்துள்ள இ. தொ.கா தலைவர்கள் மேல்கொத் மலைத்திட்டத்தை இ.தொ.கா வால் மட்டுமே தடுத்து நிறுத்த முடியும் என்று அதன் தோட்டக்கமிட்டித் தலைவர்களுக்கு எடுத்துக் கூறி வருகின்றனர். சாதாரணமான வெகுஜன அமைப்பாகவோ என். ஜீ. ஓ வை போன்றோ அன்றி புதிய ஜனநாயக கட்சியின் பிரதான பங்களிப்புடன் அமைக்கப்பட்டு மே. கொ.எ.மக்கள் இயக்கம் முன்னெடுக்கப்படுகிறது. அதில் அரசியல் வித்தியாசமான பல அமைப்புகள் இருக்கின்ற மே. கொ. திட்டத்தை எதிர்ப்பது என்ற பொதுநோக்குடனும் வேலைத்திட்டத்துடனும் ஐக்கியப்பட்டு செயற்படுகின்றன. பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் பங்களிப்பும் இருப்பதுடன் இடதுசாரி கட்சிகளினது ஆதரவும் இருக்கிறது. வெகுஜனப்போராட்டங்களின் வெற்றியுடன் சரியான திசையிலான அரசியல் அணிவகுப்பும் அவசியமாகிறது. பிழையான மக்கள் விரோத தலைமைகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவது மட்டுமன்றி அவற்றுக்கு மாறாக சரியான அரசியல் தலைமைத்துவத்தை கட்டிவளர்ப்பதிலேயே மக்களின் வெற்றி தங்கியிருக்கிறது.

மலையகத்திலுள்ள மக்கள் விரோத தலைமைகளுக்கு எதிரான அனைத்து அரசியல் கட்சிகளும் தொழிற் சங்கங்களும் ஏனைய வெகுஜன அமைப்புகளும் தனிநபர்களும் குறைந்தபட்ச தேசிய ஜனநாயக பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஐக்கியப்படுவது அவசர தேவை ஆகும். அவ்வமைப்புகளிடையேயான வித்தியாசங்களை கணக்கில் எடுக்கும் அதே வேளை பொதுநோக்கத்திற்காக விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும்.

தொடர்ச்சி 6ம் பக்கம் ➡

படிப்பகம்

www.padippakam.com



# வடக்கில் வீதிகள் அகலப்படுத்துவது
## யாருடைய நன்மைக்காக தேவைக்காக?

யாழ்-குடாநாட்டில் ஐந்து பிரதான வீதிகளான பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை வீதி, பாலாலி வீதி, காரைநகர் வீதி, ஊர்காவத்துறை வீதி, என்பன பல மில்லியன் டொலர் செலவில் அகலப்படுத்தி மீள் அமைப்புச் செய்வதற்கு தீர்மானிகக்கப்பட்டுள்ளது. நான்கு வாகனங்கள் பயணிக்கக் கூடிய அளவுக்கு தற்போதைய வீதிகள் அகலப்படுத்தப்படும் என அரசாங்க அதிபரின் தலைமையில் கூடிய திட்டக் குழு அறிவுத்துள்ளது. அதன்படி தற்போதைய வீதியின் நடுவில் இருந்து இருபுறமும் பதினைந்து பதினைந்து மீற்றர் தூரம் அகலப்படுத்தப்படவுள்ளது. இதனால் இருபுறமும் உள்ள வீடுகள் காணிகள் யாவும் சுவீகரிக்கப்படவள்ளன. முன்பு சட்ட ரீதியாகக் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படும் எனவும் காணிகளுக்கு சந்தைப் பெறுமதியான விலை கொடுக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. இதனால் மேற்படி ஐந்து வீதிகளின் இருமருங்கிலும் வாழ்ந்து வரும் மக்கள் பாரிய பாதிப்புக்களை அடையப் போகிறார்கள் ஒரு பரப்பு அரைப்பரப்பில் வீடு கட்டி வாழ்ந்து வந்தவர்கள் முற்றாகவே தமது வாழ்விடத்தை இழக்கப் போகிறார்கள் நஷ்டஈடு சுவீகரிப்புக்குரிய விலைவழங்கல் என்பதெல்லாம் யானைப் பசிக்குச் சோழப்பொரி போன்றது தான்.

இத்தனைக்கும் மத்தியில் இந்த வீதிகள் அகலப்படுத்துவதன் பின்னால் மறைந்துள்ளவிடயங்கள் பல்வேறு கேள்விகளின் ஊடே ஆராயப்படுவது அவசியம் இந்த அகலப்படுத்தலுக்கு காட்டப்படும் காரணம் நாளாந்தம் இடம் பெறும் வீதி விபத்துக்களாகும். மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது அகலப்படுத்தலால் விபத்து கள் குறையும் என்பது சரிபோலத் தென்படலாம். ஆனால் அதனைக் காட்டி தமது அகலப்படுத்தும் உள் நோக்கங்களை மறைப்புச் செய்வதையே காணுதல் வேண்டும்.

முதலாவது இந்த வீதி அகலப்படுத்தலுக்கு மும்மரம் காட்டிநிற்பவர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியினர். யப்பானியர்கள் உட்பட அந்நிய மூலதனக் காரர்களின் கையில் உள்ள இந்த வங்கிதான் மேற்படி ஐந்து வீதிகள் அகலப்படுத்துவதற்கு பல மில்லியன் டொலர்களை அள்ளிக் கொடுக்கிறது. இது வடபகுதி மக்களுக்கு வழங்கப்படும் பெரும் உதவி போன்று காட்சி தருகிறது. இன்று யுத்தமாக்கப்பட்ட இனப்பிரச்சினைக்கு தீர்வோ சமாதானமோ எட்டப்பட வில்லை. எந்த நேரமும் யுத்தம் மீண்டும் வெடிக்கலாம் என்ற நிலை நிலவுகிறது. வடபுலத்து மக்களது விவசாயம் மீன்பிடி சிறு தொழில்கள் யாவும் அழிந்தும் சீர்குலைந்தும் உள்ளன. எஞ்சிய நிலையில் செய்யப்படும் விவசாய உற்பத்திகள் தாராள அந்நிய இறக்குமதியால் நாசமடைந்துள்ளன. இந்நிலையில் வீதிகளை மட்டும் அகலப்படுத்தி செப்பனிடப்படுவது வேகமாக செய்ய முனைனிற்கின்றனர்.

உண்மையாக நோக்கின் நாடு முழுவதையும் மறு கொலனித்துவமாக்கி வரும் அந்நிய ஏகபோக மூலதனத்தின் தேவைக்காகவே இவ் வீதி அகலப்படுத்தலாகும். இங்குள்ள நமது உற்பத்திகளை விரிவுபடுத்தி அவற்றை எடுத்துச் செல்வதற்காக அல்ல தமது பொருட்களை இங்கு இலகுவாகக் கொண்டு வந்து விற்று கொள்ளை லாபம் பெறுவதற்காகவேயாகும். உதாரணமாக இன்று வீதிகளில் ஓடும் வாகனங்கள் யாவும் யப்பானிய இந்திய வாகனங்களாகும். இவற்றுக்கு வடபுலத்து வெளிநாட்டுப் பணப்புழக்கம் நல்ல சந்தையாக விளங்குகிறது. இந்த வாகன இறக்கு மதிக்கு வீதிகள் குறுகலாக இருப்பது பெரும் இடையூறாகும். வாகன இறக்கு மதியைக் கட்டுப்படுத்து என்ற முழக்கம் மக்களிடத்து இருந்து வருவதற்கு முன்பு வீதிகளை அகலப்படுத்தி விட்டால் அந்த முழக்கத்திற்கு தேவையே இல்லாது போய்விடும் என்பதை அந்நியர்கள் நன்கு அறிவார்கள்.

இவ் வீதி அகலப்படுத்துவதில் உள்நாட்டின் பெரும் ஒப்பந்தகாரர் விடாதைபிடி என நிற்கிறார்கள். காரணம் லட்சக் கணக்கில் ஏப்பம் விடுவதற்கே உதாரணம் A9 வீதியை ஒப்பந்த மெடுத்த வர்கள் நான்கு வருடங்களுக்கு உத்தரவாதம் கொடுத்தே வீதி அமைத்தார்கள். ஆனால் ஒரு வருடத் திற்குள் வீதி குண்டும் குழியுமாகி இப்போது ஒட்டுப் போட்டு கண்துடைப்பு நடைபெறுகிறது. ஆனால் விழுங்கப்பட்ட பணம் அந்தளவு தான்.

வீதிகள் அகலப்படுத்தப்படுவது முற்றிலும் தவறோ நிராகரிக்கப்பட வேண்டியதோ அல்ல. அது மக்களி னதும் அப்பிரதேசத்தினதும் தேவை நன்மைகளை அடிப்படையாகக் கொண்டதாக அமைதல் வேண்டும். ஒரு பிரதேசத்தின் உற்பத்தி விறியோ கம் சார்ந்ததாக இருத்தல் வேண்டும் அவ்வாறான தேவைகளின் போது அகலப்படுத்தப்படும் வீதிகளின் அகல அளவு நியாயமானதாக அமைதல் வேண்டும். AB தரத்தை யுடைய இவ் வீதிகளை அகலப்படுத்த இருபுறமும் பதினைந்து மீற்றர் என்பது தேவைக்கும் சூழலுக்கும் அதிகமானதாகும். யாருடைய காணி வீடுகள் பொது இடங்கள் போனால் நமக் கென்ன என்ற நிலையில் அந்நியரின் ஆலோசனைக்கும் அவர்களது ஒதுக்குப்பட்ட பணத்திற்காகவும் நமது மக்களின் விருப்பங்களையும் தேவை களையும் மதிக்காது அவற்றை அமுக்கி அதற்கு மேலால் வீதி அகல தமாக்கி அமைப்பது என்பது அந்நிய ஆதிக்கத்திற்கு அடிமையாகி நிற்கும் போக்கேயாகும்.

இவ்வாறு அகலப்படுத்தப்படும் வீதிகள் தொடர்ந்து யாரால் பராமரிக்கப்படும்? வீதிகளில் உள்ள குழிகளுக்கும் உடைந்த கரைப்பகுதிகளுக்குமே வருடக்கணக்கில் கல்லு தார் மண் போடமுடியாத நிலையில் அகலமாக்கப்படும் வீதிகளில் இருமருங்கும் காடு கலட்டாகவே விடப்படும் நிலையே ஏற்படும்.

எனவே நமது சூழல் உற்பத்தி மக்களது போக்கு வரத்து போன்றவற்றை கவனத்தில் கொண்டும் உப வீதிகள் பல வற்றை அபிவிருத்தி செய்து போக்கு வரத்து நெரிசலைக் குறைப்பது பற்றியும் சிந்தித்து வீதி அகலப்படுத்தல் பற்றி முடிவுகள் எடுக்கப்படல் வேண்டு அந்நிய மூலதனத்தினது சுரண்டல் வர்த்தகம் கொள்ளை லாபம் போன்ற வற்றுக்காக வீதிகளை அகலப்படுத்தி ஏற்கனவே நொந்து அழிந்து மீளவும் வாழ முற்பட்டுள்ள மக்களை இரையாக்க எடுக்கப்படும் முடிவு களை மக்கள் எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டும்.

**வி. அரவிந்தன்**

# நாலும் நடக்கும் உலகிலே

நற்குணன்

## இப்போதாவது தெரிகிறதே!

தேசிய விடுதலைப் போராட்டத்தின் போக்கில் கவனிக்கப்படாத முரண்பாடுகள் பற்றி வெகுகாலம் முன்பிருந்தே புதிய ஜனநாயகக் கட்சி சுட்டிக்காட்டி வந்துள்ளது. சென்ற ஆண்டும் புதிய பூமியில் ஒரு விரிவான கட்டுரை வெளியானது. இப்போது அதைப் புதிதாகக் கண்டுபிடித்தது ஒருவர் கட்டுரை மாதிரி ஞாயிறு வீரகேசரியில் ஒருவர் எழுதியிருக்கிறார். முன்பு இந்த விடயங்களைப் பற்றி புதிய ஜனநாயகக் கட்சி பேசியபோது, சாதி, பிரதேசப் பிரச்சனைகள் எல்லாம் தீர்ந்து விட்டன என்று தான் பதில் வரும். இப்போதாவது உண்மை விளங்குகிறது என்று பாராட்ட வேண்டும். என்றாலும் இது முன்பே தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டது என்று ஏற்றுக் கொள்ளும் நேர்மை வேண்டாமா?

நேர்மையாக இந்த மாதிரி விடயங்களை எல்லாம் ஒத்துக் கொள்ளப் போனால் இரவல் சரக்கு எல்லாவற்றையுமல்லவா ஒத்துக் கொள்ள வேண்டுமே! பிறகு நிபுணர்களாக இருப்பது எப்படி?

## வந்தாலும் போனாலும் கதை ஒன்றுதான்!

முதலில் மேல் கொத்மலை திட்டத்துக்கு எதிர்ப்பாகத் தான் அரசாங்கத்திலிருந்து வெளியேறியதாக அமைச்சர் முத்து சிவலிங்கம் சொன்னார். பிறகு அரசாங்கத்தில் மறுபடி சேர்ந்து கொண்டார்கள். இப்போது மேல் கொத்மலை திட்டம் பற்றி அரசாங்கமும் ஐப்பானும் தீவிரமாக இருப்பதால் எதிர்த்துப் பயனில்லை என்பதால் அதை ஆதரிக்கிறதாக இப்போது அமைச்சர் சொல்லுகிறார்.

இவர்கள் எதிர்த்தாலும் ஆதரித்தாலும் அரசாங்கம் நினைத்தது தான் நடக்கும் என்றால் இவர்கள் எல்லாரும் ஏன் பாராளுமன்றத்துக்குப் போக வேண்டும்?

## கால்வாயில் அமிழும் அரசியற் தலைமைகள்

இந்தியச் சூழலியல் நிறுவனம் பாக்கு நீரிணையை ஆழப்படுத்துவதால் பாரிய கேடு இல்லை என்று அறிக்கை தயாரித்து அளித்துள்ளார்கள் என்பதால் விரைவில் வேலை தொடங்கும் என்று அமைச்சர் டி.ஆர்.பாலு அறிவித்திருந்தார்.

இலங்கைக்குப் பாதிப்புண்டு என்ற கவலை இலங்கையின் பல் வேறு நிபுணர்களாலும் கடற் படையினராலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைச் சுற்றுச் சூழல் அளவுக்கு இந்தியாவின் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

என்றாலும் தமிழகத்தில் உள்ள சில சுற்றுச் சூழலிய அமைப்புக்களையும் இடதுசாரிக் குழுக்களையும் விட்டால் யாருமே கவலைப்படாத அளவுக்குத் தமிழக அரசியல் சீரழிந்து விட்டது.

இலங்கையிலோ இப்பிரச்சனை பற்றி ஆட்சியாளருக்கோ எந்த எதிர்க்கட்சிக்குமோ அக்கறை இல்லை. பெரியளவில் மக்களைப் பாதிக்கும் எந்தப் பிரச்சனை பற்றியும் பாராளுமன்ற அரசியல் வாதிகட்கு அக்கறை இல்லை என்றால். நாட்டின் அரசியல் இனிமேற் பாராளுன்றத்துக்கு வெளியில் மட்டுமே முன்னெடுக்கப்பட முடியும்.

# இ. தொ. கா அடியாட்களின் காடைத்தனம்

இ. தொ. கா. வின் அடியாட்கள் பக்தனை பொலிஸ் நிலையபொறுப்பதிகாரியை தாக்கியதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அவர் கொட்டகலை நிறுவனத்திற்கு வரவழைக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளார். ஆறுமுகம் தொண்டமான் அவரை வரவழைப்பதாக கூறி அவரை வரவழைத்து இ.தொ.கா அடியாட்கள் அவரை தாக்கியுள்ளனர். அந்த பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியால் போகாவத்தையில் கசிப்பு காய்ச்சுவதாக கைது செய்யப்பட்ட இ.தொ.கா ஆதரவாளர்கள் ஐந்து பேரை விடுவிக்கும்படி அந்த அடியாட்கள் கேட்டுள்ளனர். அதற்கு பொறுப்பதிகாரி இணங்காதபடியாலேயே அவர் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார். அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அந்த அடியாட்களில் குற்றச்செயல்களில் ஈடுபட்டதன் காரணமாக சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட தமிழ் உபபொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரவார் என தெரிவிக்கப்படுகிறது.

தாக்கப்பட்ட பொறுப்பதிகாரி ஆறுமுகம் தொண்டமானின் கீழ்ப்படிவான சேவைகனாகவே இருந்துள்ளார். இ. தொ. கா விற்காக பல பாரபட்சங்களை காட்டினார் என்றும் அதனால் பலருக்கு நீதி மறுக்கப்பட்டதாகவும் விமர்சனங்கள் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளன. தற்போது இ. தொ. கா வை சேர்ந்த கசிப்பு உற்பத்தியாளர்களையும், விற்பனையாளர்களையும் விடுவிக்கவில்லையென்றே அப்பொலீஸ் அதிகாரி தாக்கப்பட்டுள்ளார்.

மே 15 ஆம் திகதி நடைபெற்ற மேல்கெத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் எதிர்ப்பு தின நடவடிக்கைகளை பத்தனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தடுத்து நிறுத்தவில்லை என்று இ. தொ. கா தலைமை கோபத்துடன் இருந்ததாம்.

பொலிஸ் நிறுவனம் என்பதே ஆளும் வர்க்கத்தின் நலனை பாதுகாப்பதாகவே இருந்துவருகிறது. அவ்வர்க்கத்திற்கு அடிமை சேவகம் செய்யமறுக்கும் போது அல்லது தவறும் போது பொலிஸ் நிறுவனத்தை சேர்ந்தவர்களும் பாதிக்கப்படுவர் என்பது இச்சம்பவம் சாட்சியமளிக்கிறது.

இ.தொ.கா என்ற நிறுவனம் தொழிலாளர்களின் நிறுவனம் என்று கூறப்பட்டாலும் அதன் தலைமை குற்றவாளிகளினதும் அடியாட்களினதும் கசிப்பு வியாபாரிகளினதும் கூடாரமாகவே இருக்கிறது.

இந்த அடாவடித்தனத்திற்கும் காடைத்தனத்திற்கு மக்களே பாடம் படித்துக் கொடுக்க வேண்டும்.

# திருகோணமலை பதற்றத்திற்கு ஜே. வி. பி, ஹெலஉறுமய பின்னணியா?

ஜே.வி.பி, ஹெலஉறுமய ஆகிய கட்சிகள் சிங்கள மக்கள் மத்தியில் பேரினவாத வெறியை ஊட்டுவதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக சிங்கள மக்களுக்கும் தமிழ்மக்களுக்குமிடையே மோதல்களை ஏற்படுத்த திட்டமிட்டு செயற்பட்டுவருகின்றன. கடந்த ஒரு வருடகால திருகோணமலை மாவட்ட ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் இனமோதலை தூண்டும் பல நடவடிக்கைகளின் ஈடுபட்டு வருகின்றார்.

அதில் ஒரு நடவடிக்கையே திருகோணமலை பஸ்தரிப்பு நிலையத்தில் புத்தர் சிலையை வைத்து பதற்ற நிலையை ஏற்படுத்தியதாகும். அந்த புத்தர் சிலையை அகற்றும்படி திருகோணமலை நீதவான் தீர்ப்பளித்திருந்தபோதும் அது இன்னும் அகற்றப்படவில்லை. இன்னும் பல இடங்களில் பல சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

வெசாக் தினத்திற்கு சில நாட்களுக்கு முன்பிருந்து தொடங்கப்பட்ட பதற்றம் நீடிக்கிறது. குண்டு வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன. பலர் காயமடைந்துள்ளனர். இவ்வர்றான இனமோதல்கள் தொடருமாயின் மீண்டும் யுத்தம் தொடங்கப்படலாம். நாட்டை மேலும் அழிவுக்கு இட்டுச் செல்லும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டியமைப்பதற்காக ஏற்படுத்தப்படவுள்ள அரசாங்க- புலிகள் இயக்க பொதுக்கட்டமைப்பினை ஜே.வி.பி, ஹெலஉறுமய எதிர்த்து வருகின்றன. பொதுக்கட்டமைப்பு ஏற்படுவதை தடுக்கும் வகையிலேயே திருகோணமலையில் பதற்றத்தை அவை ஏற்படுத்தியுள்ளன. இவற்றுக்கு எதிராக செயற்பட வேண்டும். தமிழ் மக்களிடமிருந்து மேற்கொள்ளப்படும் ஒரு தலைபட்சமான செயற்பாடுகள் போதுமானவை அல்ல. ஜே.வி.பி, ஹெலஉறுமய இனவாதிகளுக்கு அப்பால் சிங்களமக்களும் தமிழ்மக்களும் இணைந்து எடுக்கும் நடவடிக்கைகளினூடாகவே ஜே.வி.பி, ஹெலஉறுமய இனவாத நடவடிக்கைகளை முறியடிக்க முடியும்.

**அதிகார ஆதிக்கப்....**

1ம் பக்க தொடர்ச்சி..

கொடுப்பதி லேயே அக்கறையாக இருந்து ஆட்சி ஆதிகாரம் செலுத்த போட்டி போட்டு வருகிறார்கள்.

ஜனாதிபதி நிதி அமைச்சர் வெளிவிவகார அமெச்சர் என்போருக்கு சுனாமிப் பேரழிவுக்கான உதவி வழங்க உத்தரவாத மளிக்கப்பட்ட நிதியைப் பெற்று விட வேண்டும் என்ற வேகம். அதற்காகப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்புக்கு வருவதை ஏற்றுக் கொள்ள வேண்டியே உள்ளது. அதனாலேயே பொதுக் கட்டமைப் ஏற்படுத்துவது. என மும்மரம் காட்டி நிற்கிறார்கள்.

இத்தகைய பொதுக் கட்டமைப்பை அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியம், யப்பான் என்பன ஆதரிக்கின்றன நடைமுறைக்கு கொண்டுவருமாறு வற்புறுத்துகின்றன. அதேவேளை இந்தியா வெளிப்படையாகவே புலிகள் இயக்கம் பற்றி அதிருப்தி வெளியிட்டு பொதுக் கட்டமைப்புக்கு தமது எதிர்ப்பை மறைமுகமாகக் கூறிவருகின்றது. இந்தியாவின் எண்ணம் ஜே.வி.பி யின் கடும் எதிர்ப்பில் உள்ளடங்கி நிற்கிறது. பொதுக் கட்டமைப்பில் மட்டுமன்றி இலங்கை மீதான ஒவ்வொரு பிரச்சினையிலும் அமெரிக்க இந்தியப் போட்டியானது முன்னெழுந்த நிற்கிறது. இலங்கையின் பிரதான ஆளும் வர்க்க கட்சிகளும் புலிகள் இயக்கமும் இந்தப் போட்டியில் இருதரம்பிலும் அணி பிரிந்து நின்றும் வருகின்றன.

இதனை ஒரு அரசியல் அவலநிலை என்றே கூறுதல் வேண்டும். இது முழு நாட்டிற்கும் மட்டுமன்றி சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்திற்கும் அபாயநிலையாக மாறி வருவதையே உணர முடிகிறது. பாதை மாறிப்போனால் சேர வேண்டிய ஊருக்குப் போக முடியாது என்பதை ஆட்சி அதிகாரத்தில் உள்ள ஆளும் வர்க்கத்தினர் உணரப் போவ தில்லை. ஆனால் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டியது காலத் தேவையின் அவசியமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# இலங்கைச் சட்டத்தரணிகளை வலைவீசும் அமெரிக்கா

இரண்டு பெரிய அமெரிக்க சட்டத்துறை சார்ந்த கம்பெனிகள் தம்மிடம் வரும் சில சட்ட வேலைகளை இலங்கைச் சட்டத்தரணிகளின் ஊடாகச் செய்யத் திட்டமிட்டுள்ளன.

அமெரிக்காவில் இயங்கும் மனிதவள கம்பனியொன்றின் அதிகாரிகள் அண்மையில் இலங்கை வந்திருந்தனர். டேவிட் ஜே. கல்பன்ஸ்கியின் கூற்றுப்படி "ஏற்கனவே இந்தியச் சட்டத்தரணிகளிடம் சில வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எம்மிடம் 15000 சட்டத்துறைசார் நிபுணர்கள் உள்ளனர். சட்டத்துறைக் கம்பனிகளிடம் தொடர்பு கொண்ட போது அவர்கள் இலங்கைச் சட்டத்தரணிகளுடன் சேர்ந்து வேலை செய்ய விருப்பம் தெரிவித்துள்ளார்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

கல்பன்ஸ்கி, இலங்கையில் சட்டத்துறை சார்ந்த கம்பனிகளின் பிரமுகர்களிடம் தொடர்பு கொண்டு அமெரிக்க சட்டம் பயின்ற இலங்கைச் சட்டத்தரணிகளுடன் ஒரு இணைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டுள்ளார். அமெரிக்காவின் நியூமற்றிக்ஸ் கம்பனியான குளோபல் ரெக்னோலஜி மனேஜ்மன்ட் சேவிசஸ் கம்பனி ஏற்கனவே இலங்கையில் ஒரு காரியாலயத்தைக் கொண்டுள்ளது. அந்தக் கம்பனியை இந்த செயற்திட்டத்தின் இணைப்பாளர்களாக நியமித்துள்ளது.

மேற்கூறப்பட்ட கம்பனியின் பங்காளர்களாக றுக்மல் பர்னாந்து, சேஷா இராமநாதன் இருக்கின்றனர்.

இலங்கையில் கல்வியறிவுடையவர் அதிகம் இருப்பது, வேலையை மிகவும் விரைவாக செய்யும் திறமை, என்பன இலங்கைச் சட்டத்தரணிகளிடம் இருப்பதால் இந்தியாவை விட இலங்கை சாதகமாய் உள்ளது எனக் குறிப்பிடுகின்றனர்.

அமெரிக்காவில் அனுபவம் குறைந்த ஒரு சட்டத்தரணி ஒரு சிறு வேலைக்குக் கூட பெரிய கட்டணத்தை அறவிடுகிறார். இலங்கைச் சட்டத்தரணிகளிடம் ஒரு பகுதி வேலையை ஒப்படைப்பதன் மூலம் அமெரிக்க கம்பனிகள் 60 வீத செலவைக் குறைக்க முடியும்.

அமெரிக்க சட்ட முறைகளில் இலங்கைச் சட்டத்தரணிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக சிரேஷ்ட சட்டத்தரணிகள் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பவுள்ளதாக கல்பென்ஸ்கி அறிவித்துள்ளார். இலங்கைச் சட்டத்தரணிகள் ஒரு மாதத்திற்குள் அமெரிக்கச் சட்டத்துறை மாற்றங்களை கற்கக் கூடிய திறனுடையவர்கள் என இலங்கையின் கோப்பறேற் சேம்பர்ஸ் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிற்கான சட்டத்துறையில் இலங்கைச் சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்வதன் மூலம் அமெரிக்காவிற்காகப் பேசுவதற்கென ஒரு புத்திஜீவிக் கூட்டமொன்று உருவாகப்போகிறது. இது ஒரு வகைப்பட்ட அமெரிக்க ஊடுருவல்.

அமெரிக்கச் சட்டத்துறையை புரிந்து அமெரிக்க கம்பனிகளுடன் வேலை செய்வதற்கு ஆங்கிலப்புலமை வேண்டும். இலங்கையில் ஆங்கிலப் புலமையுள்ள சட்டத்தரணிகள் மேட்டுக்குடியினரே. இலங்கையின் மேட்டுக்குடியினர் ஒரு சில தனிநபர் விலக்காக, அமெரிக்க நிலைப்பாட்டை வரவேற்பவர்களாக இருந்து வருகின்றனர். அமெரிக்க கம்பனிகளிடமிருந்து டொலர்களை வாங்கும் போது அவர்களின் விசுவாசம் மேலும் பல மடையும். அமெரிக்கத் திறந்த பொருளாதாரத்தில் நாம் அமிழ்ந்து சுமார் மூன்று தாசப்தங்கள் கடந்து விட்டன. பாண் இலங்கை மக்களின் தேசிய உணவாகிவிட்டது. பிஸ்ஸா, மக்டனால்ட்ஸ் ஆகாகோவென்று வியாபாரம் ஆகின்றன. உள்ளூர் தயாரிப்புகளை விற்பதில் வியாபாரிகள் பெருஞ் சிரமப் படுகின்றனர். இலங்கையின் சட்டத்தரணிகளையும் நிபுணர்களையும் அமெரிக்க சட்டத்துறை பயன்படுத்துவதால் ஒப்பீட்டு வகையில் டொலர் பெறுமதி மூலம் அதிக வருமானம் பெற்றாலும் அமெரிக்க சட்டத்தரணிகள் பெறுவனவற்றில் கால் பங்கைப் பெற்றே வேலை செய்ய வேண்டி ஏற்படும். அதனால் குறைந்த வேதனத்தில் கூடிய வேலை வாங்கும் முதலாளிய நடைமுறை சட்டத்துறையினரிடமும் வந்து சேரும். அதேபோல் அமெரிக்க வழிபாடும் அதிகரிக்கும். அது இலங்கையின் அரசியலில் அதிக பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும். யாரைத் தான் விட்டுவைக்கப்போகிறது அமெரிக்காவும் அதன் பூகோளமயமாதல் நிகழ்ச்சித்திட்டமும். எல்லாம் அவர்கள் செயலாகவே மாறி வருகிறது.

# இலங்கை இனப் பிரச்சினையில் அமெரிக்காவின் இரட்டை வேடம்

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை யுத்தமாகிக் கொள்வதற்கு மறைமுகமாக நின்று செயல் பட்டு தமது ஏகாதிபத்திய நலன்களைப் பாதுகாத்துக்கொள்வதில் அமெரிக்கா உரியவாறு காய்களை நகர்த்தி வந்தமை அரசியல் விபரமறிந்த யாவரும் அறிந்த ஒன்றேயாகும். இவ்விடயத்தில் சுய நிர்ணய உரிமைக்காகப் போராடி வரும் தமிழ் மக்களுக்கு முன்னால் ஒருவகை வேடமணிந்தும் பௌத்த சிங்களப் பேரினவாதிகளுக்கு வேறு ஒரு வித வேடமணிந்தும் செயலாற்றி வந்துள்ளது அமெரினக்கப.

இப்போது எவ்வித வேடமும் போடாமலே இருபுறத்தையும் ஏமாற்றும் வகையில் அமெரிக்கா நடந்து கொள்ள ஆரம்பித்து விட்டது. புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாதப் பட்டியிலில் தொடர்ந்து வைத்திருந்து வருவதுடன் பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளுக்கு ராணுவ பயிற்சி தள பாட விநியோகம் ஆயுத விற்பனை எனப் பன்முக ராணுவ உதவிகளைச் செய்து வருகின்றது. அடுத்தடுத்து ராணுவ உயரதிகாரிகளை இங்கு அனுப்பி ராணுவ உயர் மட்ட ஆலோசனைகள் நடாத்தி வருகிறது வெள்ளை மாளிகை.

அதே வேளை தமிழ் மக்களையும் புலிகள் இயக்கத்தையும் கண்துடைப்புச் செய்வதற்கு அவ்வப்போது நடவடிக்கை எடுக்கவும் தவறவில்லை. அண்மையில் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் கிளிநொச்சிக்குச் சென்று புலிகள் இயக்கப்பிரமுகர்களைச் சந்தித்துச் சென்றார். அவரது கிளிநொச்சிப் பயணத்தை தமிழ் ஊடகங்கள் ஆ! ஊ! என்று ஊதிப் பெருப்பித்துக் காட்டி அமெரிக்கா ஆதரவு தருகின்றது என்றன. அவ்வாறு வருகைதந்த காங்கிரஸ் உறுப்பினர் டெனி டேவிஸ் ஒரு குடியரசுக் கட்சியைச் சேர்ந்த கறுப்பின மக்களின் பிரதிநிதியாவார். அந்த வகையில் அவருக்கு தமிழ் மக்களின் அவல நிலையை விளங்கிக் கொள்ளமுடியும் என்பதற்கு அப்பால் எதுவுமே இல்லை. என்பதே உண்மையாகும் அந்தக் கறுப்பின காங்கிரஸ் உறுப்பினர் கூட அமெரிக் ஏகாதிபத்தியத்தின் ஒரு பிரதிநிதியே ஆவார்.

அவ்வாறு அந்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் கிளிநொச்சிக்குச் சென்ற அதே காலப் பகுதியில் அமெரிக்காவின் ஆசிய பசுபிக் பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி கொழும்புக்கு வருகை தந்து உயர் மட்ட ராணுவ ஆலோசனை நடத்தினார். பின்பு பலாலிக்குச் செல்லவும் ஏற்பாடாகி இருந்தது.

அண்மையில் இலங்கை வந்திருந்த தென்னாசியப் பிராந்தியத்திற்கான உதவி இராஜாங்கச் செயலர் கிறிஷ்டினா ரொக்கா அரசாங்க உயர் மட்டத்தினருடன் பேச்சுவார்த்தை நடாத்திய அதே வேளை தமிழீழக் கோரிக்கையைத் தாம் எதிர்க்க வில்லை என்றும் கூறிச் சென்றார். அதனைச் சில கூட்டமைப்பு பா.உக்கள் தலையில் தூக்கிவைத்து அதோ இதோ என்று கொண்டாடினர்.

எனவே அமெரிக்காவின் இரட்டை வேடத்தையும் சாராம்சத்தில் அதன் உலக மேலாதிக்கத்திற்காக எத்தனை வேடங்களையும் போடத் தயங்காது என்பதையும் மக்கள் அண்மைய நடவடிக்கைகளால் புரிந்து கொள்கின்றனர். அதிக காலம் அத்தகைய ஏமாற்றுக்களை அமெரிக்காவால் செய்ய முடியாது.

ஏனெனில் அமெரிக்காவின் சுயரூபம் உலக மேலாதிக்கத்திற்கான அடிப்படை நோக்கமுடையதேயகும். இதனைத் தமிழ் மக்கள் ஊடகங்கள் தரும் ஒரு தலைப்பட்ச அணுகுமுறைக்கு அப்பால் உண்மைகளைக்காண வேண்டும்.

# சட்டவிரோதமா?

மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவும் சட்டவிரோதமானதென அட்டனில் தொழில்பார்க்கும் சிரேஷ்ட்ட சட்டத்தரணி ஒருவர் கூறியுள்ளார். மே மாத நடுப்பகுதியில் அட்டனில் நடைபெற்ற சமஷ்டி பற்றிய நூல் வெளியீட்டில் பேசும் போதே அவர் அவ்வாறு கூறியுள்ளார். மே.கொ.தி.எ.மக்கள் இயக்க நடவடிக்கைகள் யாவும் சட்டவிரோதமான தென்றும், அந்நடவக்கைகளில் ஈடுபடுவோதை பற்றிய தவல்களை அரச தகவல் சேகரிக்கும் நிலையம் சேகரிப்பதாக தெரிவித்துள்ளார்.

ஒரு விடயம் பற்றி கருத்துக்களை தெரிவிக்கவும், விருப்பமில்லாதவிடத்து எதிர்ப்பை தெரிவித்தகவும் இலங்கை பிரஜை ஒருவருக்கு இருக்கும் ஜனநாயக உரிமைகள் பற்றி அச்சட்டத்தரணி படிக்கவில்லையா? மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வேலை செய்யும் போதும் கூட அவருக்கு தெரிந்து கொள்ள முடியவில்லையா?

மலையகத்தில் மக்களின் பங்களிப்புடனான மாற்று அரசியல் தலைமைத்துவம் வளர்ச்சியடைந்தால் இவரைப் போன்ற 'ஏட்டுச்சுரக்காய்கள்' பாராளுமன்ற சபைக்கு நியமிக்கப்பட முடியாதுதானே!

மலையக தலைமைகள்தான் மலையகத்தமிழர்கள் என்றால் படித்தவர்கள் எனப்படுவோரும் கூட மலையகத்தமிழ் மக்கள் தலைகளில் இன்னும் மிளகாய் அரைக்கப்பார்க்கிறார்களே.

# பெருந்தோட்டங்களை அழிக்கும் கம்பெனிகள்

தேயிலையை பிடுங்கிவிட்டு கிழங்கு செய்கையையும், மலர்ச்செய்கையும் தோட்டக்கம்பெனிகள் செய்து வருகின்றன. இதனால் தேயிலை பெருந்தோட்ட பொருளாதாரம் முற்றாக அழிக்கப்படுகிறது. தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாக கூறியே பெருந்தோட்டக்கம்பெனிகள் 50 வருடகால குத்தகைக்கு கொடுக்கப்பட்டன. அக்கொம்பெனிகள் பல முகாமைத்துவ கம்பெனிகளிடம் தோட்ட அலுவல்களை பிரித்துக் கொடுத்துள்ளன.

தோட்டங்களில் வீதிகள் தொழிலாளர்களுக்கான குடியிருப்பு, நீர்ப்பாசன வசதிகள், சுகாதார வசதிகள் போன்றவற்றிற்கு எவ்வித கவனஞ் செலுத்தாத கம்பனிகள், லாபமொன்றையே கருத்தில் கொண்டு செயற்படுகின்றன. தோட்டங்களிலுள்ள மரங்கள், மண், நீர், கற்கள் உட்பட பல வளங்களையும் கம்பெனிகள் விற்று தீர்க்கின்றன. இவற்றை கண்காணித்து கட்டுப்படுத்த அரசாங்கத்திடம் எவ்வித ஏற்பாடுகளும் இல்லை. ஏனைய பயிர்ச்செய்கைகளுக்காக தோட்டக் காணிகளை தனிப்பட்டவர்களுக்கு உப குத்தகைக்கு விடப்படுகின்றன.

பெருந்தோட்டப்பயிர்ச்செய்கை அழிக்கப்பட்டு, பெருந்தோட்ட பொறிமுறை செயலாற்றதாக்கப்படும் போது தொழிலாளர்கள் தொழில்ரீதியான உரிமைகளை இழந்து தொழில்ரீதியான பாதுகாப்பற்றவர்களாக்கப்படுவார்கள்.

பெருந்தோட்ட பயிர்ச்செய்கையல்லாத தேயிலையுடன் தொடர்பற்ற ஏனைய பயிர்ச்செய்கையுடன் தொடர்புள்ள வேலைகளுக்கு அமர்த்தப்படும் தொழில்லாளர்களுக்கு வேலைநேரம், தொழில்உரிமைகள், சம்பளம் என்பன நிச்சயமற்றதாகவே இருக்கிறது. இதனால் தொழிலாளர் வர்க்கம் பலவீனப்படுத்துவதுடன் அவர்களின் மலையகத்தமிழ் தேசிய இனத்துவ வளர்ச்சியும் தடுக்கப்படுகின்றது.

இதனால் தொழிலாளர்களே பெருந்தோட்ட பொருளாதாரத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டியுள்ளது. அவர்களது தொழிற்சங்கத்தலைமைகள் பெருந்தோட்டங்களை அழிக்கும் கம்பெனிகளின் எடுபிடிகளாகிவிட்டன.

# சுனாமி ஆணைக்குழு விசாரணை வெறும் கண்துடைப்பா?

சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றியும், அப்பாதிப்புக்களுக்கு அரச அதிகாரிகளினதோ, அரச நிறுவனங்களினதோ கவலையீனம் காரணமாக இருந்ததா என்பது பற்றியும் ஆராய்வதற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறனர்.

பண்டாரநாயக்க சர்வதேச மண்டபக் கட்டிடத்தில் சுனாமி விசாரணைகள் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

சுனாமியால் பெராலிய என்ற இடத்தில் ஏற்பட்ட புகையிரத விபத்தில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களின் கூட்டமைப்பின் சார்பில் அவ்விசாரணை ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமான சமர்ப்பணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த அமைப்பின் இணைப்பாளர் பிரியந்த என்பவர் அந்த புகையிரத விபத்திலிருந்து உயிர் தப்பி இருந்தார். அவரது மனைவியும் மாமியும் அவ்விபத்தில் உயிரிழந்தனர்.

அவரை விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் அவரது காரியலயத்திற்கு அழைப்பித்து அவரது முறைப்பாட்டை விசாரிக்கும் அதிகாரம் அவ்வாணைக்குழுவிற்கு இல்லையென்று தெரிவித்துள்ளார். சுனாமி எவ்வாறு ஏற்பட்டது என்றும் அதனைப் பற்றி இலங்கையிலுள்ள அரசாங்க திணைக்களங்கள் அறிந்திருந்தனவா? அவர்கள் அறிவிக்க தவறினார்களா என்றும் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதே 'இவ்விசாரணைக்குழுவின் பொறுப்பாகும். என்றும்' தெரிவித்தார்.

சுனமியால் ஏற்பட்ட ஒவ்வொரு சம்பவங்கள் பற்றியும், அவ்வொவ்வொன்றுக்கும் பொறுப்பு யார் என்பது பற்றியும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் அதிகாரம் அவ்வாணைக்குழுவிற்கு இல்லையாதலால் பொரலியய புகையிரத விபத்து பற்றி விசாரணை செய்ய முடியாது என்று அவ்வாணைக்குவின் செயலாளர் தெரிவித்தார்.

பிரியந்த என்பவர் தம்பையா அ. சோசியேட்ஸிற் சட்ட நிறுவனம் ஊடாக உயர் நீதி மன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். அரசாங்கம் அவரது மனைவி யையும், மாமியையும் பாதுகாக்கும் கடமையிலிருந்து தவறிவிட்டாதாக குற்றம் சாட்டியிருந்தார. அதவாது புகையிரதம விபத்துக்குள்ளாவதிலி ருந்து தடுத்திருக்க முடியாவிட்டால் அதில் பிரயாணம் செய்த பிரயாணி களை காப்பாற்ற தவறிவிட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சுனாமி பற்றி விசாரணை செய்வதற்கு ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பதால் அதன் முன்சென்று சாட்சியங்களை அளித்து மேலதிக சாட்சியங்களுடன் புதிய மனுவொன்றை தாக்கல் செய்யும்படி அதனை விசாரித்த பிரதமநீதியரசர் சரத்என் சில்வா, நீதியரசர்கள் திலகவர்தன, உதாலகம ஆகியோர் கேட்டுக் கொண்ட தற்கிணங்க அம்மனுவை பிரியந்த வாபஸ்பெற்றுக் கொண்டார்.

மேலதிக சாட்சியங்களை பெறும் நோக்கில் பிரியந்தவும், ஏனையோரும் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பணங்களை செய்திருந்தனர். ஆனால் பெராலிய புகையிரத விபத்து பற்றி விசாரிக்க அதிகாரம் இல்லையென்று அவ்வாணைக்குழுவின் செயலாளர் கூறியதனால் அவர்களின் எதிர்பார்ப்பு வீணாகியுள்ளது.

அவ்வாறெனின் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை அறிந்து கண்துடைக்கும் நோக்கிலேதான் ஆணைக்குழு விசாரணை மேற் கொள்ளப்படுகிறதா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

புகையிரத திணைக்களத்தினால் புகையிரத விபத்து பற்றி உள்ளக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டது. அதன் விபரங்களும் வெளியிடப்படவில்லை.

இவ்வாறான செயல்களின் மூலம் அரசாங்கம் மக்களின் எதிர்பார்ப்பிற்கு துரோகமிழைக்கிறது. புகையிர விபத்தில் ஒரே நேரத்தில் அதிகமானோர் கொல்லப்பட்டனர். அதனால் பாதிக் கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப் பட்டுள்ளது.

அரசாங்கம் சுனாமியால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து விசாரிப்பதற்கும் தற்போது விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக் குழுவிற்கு அதிகாரங்களை வழங்க வேண்டும். அல்லது இன்னுமொரு ஆணைக்குழு விசாரணையை மேற் கொள்ள வேண்டும்.

பாதிப்படைந்த மக்களை ஏமாற்றக்கூடாது.

படிப்பகம்

# மேல்கொத்மலைத்திட்டமும் அரசியலும்

**- அழகேசன் -**

அபிவிருத்தித்திட்டம் என்ற பேரில் மேல்கொத்மலை நீர்த்தேக்கத்திட்டத்தை நிறைவேற்ற ஐ. தே. கட்சி அரசாங்கம் துரிதமாக செயற்பட்டது. மக்களின் எதிர்ப்பு காரணமாக அதனை நடைமுறைப்படுத்தவில்லை. தற்போதைய ஐ. ம. சு. மு. அரசாங்கம் நடைமுறைப்படுத்தப் போவதாகக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது. அதற்கு எதிராக பல அமைப்புகள், தனிநபர்களை உள்ளடக்கிய வெகுஜன இயக்கமொன்று அமைக்கப்பட்டுள்ளது. மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் என்ற அமைப்பை ஏற்படுத்துவதிலும் அதற்கூடாக வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதிலும் புதிய- ஜனநாயக கட்சி முக்கிய பங்கு வகித்து வருகிறது.

எனினும் இந்த திட்டத்தை எதிர்த்து போராட்டங்களை முன்னெடுப்பதுடன் புதிய- ஜனநாயக கட்சி அரசியல் நடத்துவதாக சில பத்திரிகை நிருபர்கள் எழுதியுள்ளனர். மேல்கொத்மலைத்திட்டத்தை நிறை வேற்றுவது ஐ.தே.கட்சியினதும் ஐ.ம.சு. முன்னணியினதும் அரசியல் என்றால் அதனை எதிர்ப்பது புதிய- ஜனநாயக கட்சியின் அரசியல் என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ளமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் ஆதிக்க அரசியலின் சாமரைகள்.

இயற்கையை மாற்றி அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு கம்யூனிஸ்ட்டுகள் எதிரானவர்களல்லர். ஆனால் இயற்கையை மாற்றுவது என்பதற்கும் அபிவிருத்தி என்பதற்கும் கம்யூனிஸ்ட்டுக்கள் பாட்டாளி வர்க்க நலன்சார் அர்த்ததையே கொண்டுள்ளனர். ஏகாதிபத்திய நாடுகளும், உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம் ஆசிய அபிவிருத்தி வங்கி உலகவர்த்தக நிறுவனம் போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்களும் அபிவிருத்தி என்ற பேரில் அவற்றின் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலை இலங்கை போன்ற நாடுகளில் முன்னெடுப்பதற்காக திணிக்கின்ற திட்டங்களை ஏற்றுக்கொள்வதி ல்லை. நீர்மின்சக்தியை பெறுவதற்காகவும், நீர்ப்பாசனத்திற்காகவும் பல நீர்த்தேக்கத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றினால் பெறப்பட்ட நீர்மின்சக்தி எல்லா சாதாரண மக்களின் வாழ்விடங்களுக்கும் வழங்கப்படவில்லை. எல்லா மக்களின் வாழவிடங்களுக்கும் வழங்குவதற்கு அந்நீர்மின்சக்தி போதாது என்று கூறுப்படுகிறது ஆனால் கொழும்பிலும், கொழும்பிற்கு அருகிலுள்ள நகரங்களிலும் விளம்பரங்களுக்காகவும் தொழிற்சாலைகள், ஹோட்டல்கள் மேட்டுக்குடியினரின் வீடுகள் போன்றவற்றிற்கு இருக்கும் ஆடம்பரமான குளிர்சாதன வசதி போன்றவற்றிற்கும் அதிகமான நீர்மின் சாரம் பயன்படுத்தப்படுகிறது.

நீர்மின்சக்தியை விட செலவு குறைந்த மின்சக்தியை பெறுவதற்கு வழியில்லை என்று கூறப்படுகிறது. நீர்மின்னுக்கு பதிலாக எத்தனையோ மாற்றுவழிகளை நமதுநாட்டு நிபுணர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். பாரிய நிலப்பரப்பை நீருக்குள் மூழ்கடிப்பது பாரிய நீர்தேக்கத்திட்டங்களுக்குள் நீரைத்தேக்கி வைப்பது போன்றனவற்றால் சூழலுக்கும் இயற்கைக்கும் மக்கள் வாழ்விற்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்துவதற்கு சாட்சியங்கள் இருக்கின்றன. இலங்கையில் ஏற்கனவே அமைக்கப்பட்ட நீர்த்தேக்கத்திட்டங்களினால் சூழலுக்கு ஏற்பட்டுள் பாதிப்புகளை அறிவோம். நிலத்திற்கு அடியில் நீரை கொண்டுச் செல்லும் குழாய்கள் அமைக்கப்படும் போது நிலநடுக்கம் ஏற்படும். அதனால் மண்சரிவு, மண்ணரிப்பு, நில அதிர்வு காலநிலை பாதிப்பு போன்றன ஏற்பட்டுள்ளன. பாரிய நீர்த்தேக்கத்திட்டங்களினால் எதிர் பார்க்கப்படும் நீர்மின்சக்தி கிடைப்பதில்லை. அதுவும் 30 வருடங்களுக்குப் பிறகு கிடைக்கின்ற நீர்மின் சக்தி கிடைக்கப்போவதில்லை. அதற்குப் பிறகு அந்நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை வடித்துவிட்டாலும் அம்மண்ணில் பிரபோசனமான பயிர் விளைச்சலை பெறமுடியாது என்பதும் நிருபிக்கப்கட்டுள்ளது. பாரிய நீர்த்தேக்கத்திட்டங்களினால் மண் வளம், காலநிலை, தாவரங்கள் உயிரினங்கள் அழிவிற்குள்ளாகின்றன. பாரிய நீர்மின் நிலையங்களிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சு மக்களின் வாழ்விற்கும், ஓசோன்படலத்திற்கும் பாரிய தீங்கை ஏற்படுத்தும். இவை சூழலியியல் பாதிப்பாகும்.

எனவே இயற்கையை மாற்றி அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதை ஆதரிக்கும் அதேவேளை கம்யூனிஸ்ட்டுக்கள் இயற்கையை அழிப்பதை ஏற்பதில்லை. அதனால் இவ்வாறான பாரிய நீர்தேக்கத்திட்டங்களை ஏற்றுக்கொள்வதில்லை.

மேல்கொத்மலை நீர்த்தோக்கத்திட்டம் என்பது மத்திய மலைநாட்டில் மிகவும் வளமான நிலப்பகுயில் அமையவிருக்கிறது. ஏற்கனவே அமைக்கப்பட்ட நீர்த்தேக்கத்திட்டங்களினால் பாரிய வளமான நீர்ப்பரப்பு திட்டங்கள் நீருக்குள் மூழ்கடிக்கப்பட்டன. அத்துடன் அதன் விளைவாக அவ்விடயங்களில் வாழ்ந்த தோட்டத்தொழிலாளர்கள் மலையகத்தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். பாதிக்கப்பட்ட பெரும்பான்மை சிங்கள இனத்தவர்களுக்கு ஓரளவிற்கேனும் நிவாரணம் வழங்கப்பட்டது. அத்திட்டங்களை சுற்றி சிங்கள பேரினவாத குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவ்விடங்களில் பாதுகாப்பு படை முகாம்கள் அமைக்கப்பட்டன. நீர்த்தேக்க அபிவிருத்தி திட்டங்கள் என்ற பேரில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களினால் மலையகத்தமிழ் மக்களுக்கு எதிராக இனச்சுத்திகரிப்பு நோக்கங்கமும் நிறைவேற்றப்பட்டன. 30, 40 வருடங்களுக்கு முன் மேற்கொள்ளப்பட்ட நீர்த்தேக்கத்திட்டங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் 'நிவாரணங்கள்' வழங்கப்படவில்லை. இங்கு நீர்த்தேக்கத் திட்டங்களால் தோட்டத்தொழிலாளர்கள் என்ற பேரில் பாதிக்கப்படுகின்றபோது வர்க்கரீதியான, ஒடுக்குமுறைகளுக்கும், மலையகத்தமிழ் மக்கள் என்ற தேசிய இன அடையாளம் பாதிக்கப்படுகின்ற போது இன ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளாகின்றனர். மேல்கொத்மலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டால். சூழலியல் பாதிப்புகள் மட்டுமன்றி மலையகத் தமிழ்மக்கள் செறிவாக வாழ்கின்ற நுவரேலியா மாவட்டத்தில் குறிப்பாக தலவாக்கலையில் அவர்களின் குடி சனசெறிவு குறைக்கப்படும். இதனால் தேசிய இனத்துவ வளர்ச்சி பாதிக்கப்படும். தேசிய இன ஒடுக்குமுறையுடன் நடைமுறைப்படுத்தவுள்ள மே. கொ. திட்டத்தை ஏற்க முடியாது.

வளமான நிலப்பரப்பை நீரில்மூழ்கடிக்க கூடாது என்று கூறும்போது சிலர் வளமான நிலப்பரப்பில் பயிர் செய்து நட்டமடைவதைவிட நீரில் மூழ்கடித்து நீர்மின்னை பெற்று தொழிற்சாலைகள் அமைத்து லாபமடையலாம் என்ற முதலாளித்துவ நியாயம் கற்பிக்கின்றனர். மனிதனை மனிதன் சுரண்டிக் கொள்கின்ற லாபத்தை விட அனைத்து மக்களின் உணவு, உடை, உறையுள் போன்ற அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதற்கு நிலம் அவசியம் நிலம் இல்லாமல், அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் ஒரு சிலர் லாபம் சம்பாதிப்பது அபிவிருத்தியாகாது. அந்த அபிவிருத்தி தேவையுமில்லை. மேல்கொத்மலைத்திட்டத்தினால் பாரிய வளமான நிலப்பரப்பு நீரில் மூழ்கடிக்கப்படுவதால் அங்கு வாழ்கின்ற மக்களுக்கு இருப்பிடத்திற்கும், பயிர்ச்செய்கைக்கும் அங்கிருந்து விரட்டியடிக்கப்படுவர். அங்கு பேரினவாத குடியோற்றங்கள் ஏற்படுத்தப்படும்.

அப்பகுதி பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு 25 இற்கு மேற்பட்ட பாதுகாப்பு படை முகாங்கள் ஏற்படுத்தப்பட்டு அப்பகுதி இராணுவபயமாக்கப்படும். இதனால் அப்பகுதியின் ஜனநாயக இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும்.

இலங்கை தோட்டத்தொழிலாளர்களின் மலையகத்தமிழ்மக்களினது போராட்ட கேந்திரமான தலவாக்கொல்லை அழிக்கப்படும். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தொடர்ந்து முயற்சி செய்துவந்த ஐ. தே. கட்சி தலைவர்களில் ஒருவரும் பேரினவாதியுமான காலஞ்சென்ற காமினிதிஸாநாயக்கவின் பேயர் அவ்விடத்திற்கு சூட்டப்பட்டுள்ளது. தலவா புல்வெளி என்ற தலவாக்கொல்லை காமினிதிசாநாயக்கபுரவாக இருக்கிறது.

இவற்றைவிட இத்திட்டத்திற்கு கடனுதவி வழங்கப்போகின்ற ஜப்பான் ஏகாதிபத்தியம் இப்பிரதேசத்தில் அதனது ஆதிக்கத்தை நிலை நாட்டவிருக்கிறது. இத்திட்டத்தினால் கிடைக்க விரும்பதாக கூறப்படுகின்ற நீர்மின்னின் அளவு 150 மெகாவார்ட்ஸ் மட்டுமே. இப்பிரதேசத்தில் ஜப்பான் அமைக்கவிருக்கின்ற (டயர், பெற்றரி, ஆடைதொழிற்சாலைகள்) தொழிற்சாலைகளுக்கே அம்மின்சக்தி போதுமானதாக இருக்கும். இப்பகுதியில் ஜப்பானியர்களுக்கு மட்டும் பயிற்சியளிக்கக் கூடிய நீர்மின்னியல் கல்வி நிறுவனம் அமையவிருக்கிறது. அத்திட்டம் ஜப்பானிய நிபுணர்கள் தொழில் புரிவார்கள். இதன்மூலம் ஜப்பானிய ஏகாதிபத்திய பிடி இறுக்கப்படும் வாய்ப்புகளே அதிகம். நாங்கள் திருப்பி செலுத்த வேண்டிய வட்டியுடன் கூடிய கடனில் நன்மை அடையப் போவது ஜப்பானியர்களாவர்.

இவ்வாறான அடிப்படைக்காரணங்களினாலேயே புதிய- ஜனநாயக கட்சி அதனை எதிர்க்கிறது. வேறு சிலர் வேறு சில காரணங்களுக்காக எதிர்க்கலாம் அவ்வெதிர்ப்புகளை ஒருமுகப்படுத்தும். நோக்கிலேயே மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக வெகுஜனப்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எதிர்ப்பியக்கங்கள் கம்யூனிஸ்ட்டுகளில் அரசியல் நடவடிக்கைகளின் அடிப்படையாகும். அதனையே மேல்கொத்மலைத்திட்டம் தொடர்பாக புதிய- ஜனநாயகட்சி செய்துவருகின்றது. மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான போராட்டம் அரசியலற்றதல்ல.

அத்திட்டத்தினால் பாதிக்கப்படப் போகின்ற பிரதேசத்திலும், மக்கள் மத்தியிலும் இருக்கின்ற அரசியல் தலைமைகள் எனப்படும். இ. தொ. கா, ம. ம. மு என்பன மக்களின் நலனை கருத்திற்கொள்ளாதபடியால் (மக்கள் நலனை முதன்மைப் படுத்தும் அமைப்புகளுமல்ல) தொடர்ந்து மக்கள் நலன்சார் இயக்கங்களை முன்னெடுத்து வந்த புதிய- ஜனநாயக கட்சி மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிராக எடுத்துவரும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மத்தியப் படுத்தப்பட்டுள்ளன. இதனூடாக அப்பகுதியிலும் அம்மக்கள் மத்தியிலும் அரசியல் தலைமைத்துவத்தை பலப்படுத்த வேண்டிய தேவை புதிய- ஜனநாயகக்கட்சிக்கு ஏற்பட்டுள்ளது மலையகத்தில் தொழிற்சங்கவாத, ஒட்டு அரசியலுக்கு முடிவுகட்டும் வகையில் புதிய- ஜனநாயக கட்சி அதன் வர்க்க அரசியலை மேலும் முன்னுக்குதள்ள வேண்டிய வரலாற்று கடமையை கொண்டுள்ளது.

## மே 15 எதிர்ப்பு தினம்

மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் விடுத்த அழைப்பை ஏற்று மலையகமெங்கும் மே.கொ.திட்டத்திற்கு எதிரான எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. மலையகத்தின் நகரங்களில் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்கு செல்லவில்லை. அன்று ஞாயிற்றுக்கிழமை யாகையால் ஒன்றரைநாள் வேலைக்குப் போகவில்லை. மரக்கறி தோட்டத் தொழிலாளர்கள் ஆடை தொழிற்சாலைகள் போன்றவற்றில் வேலை செய்வோரும் வேலைக்கு செல்லவில்லை. பொது இடங்கள், வாகனங்கள், வீடுகள் கடைகளில் கறுப்பு கொடிகள் போடப்பட்டிருந்தன

இவ்எதிர்ப்பு தினத்தில் ஆர்ப்பாட்டமும் சத்தியாக் கிரகமும் தலவாக்கொல்லை அட்டன் வீதியில் டெவன் நீர்வீழ்சிசிக்கு அருகில் காலை 10.30 மணியிலிருந்து 2மணிவரை நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தியாகி சிவனுலெட்சுமணன் புதைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு ஊர்வலமாக சென்று மலர் அஞ்சலி செலுத்தினர். 1977ஆம் ஆண்டு தோட்டக்காணிகளை சுவிகரித்து பேரினவாத குடியேற்றங்களை ஏற்படுத்தி தோட்டத் தொழிலாளர்களை தோட்டங்களிலிருந்து வெளியேற்றும் திட்டத்திற்கு நடைபெற்ற போராட்டத்தில் யொக்ஸ்போட் தோட்ட இளைஞன் சிவனுலெட்சுமணன் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டான் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் ஊர்வலமாக டெவன் நீர்வீழ்ச்சிக்கு வந்தடைந்தனர் அங்கு மே.கொ.திட்டத்தை எதிர்த்து கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் புதிய-ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளரும் மே.கொ.தி.எ.மக்கள் இயக்கத்தின் அமைப்பாளருமான இ.தம்பையா



ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார நவசமசமாஜக்கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண, புகையிரத ஊழியர் கூட்டமைப்பின் தலைவர் சரத்பெர்னாண்டோ இடதுசாரி மக்கள் நிலையத்தின் அமைப்பாளர் பற்றிக் பெர்ணான்டோ, இலங்கை ஜனநாயக தொழிலாளர் முன்னணியின் உப்தலைவர் கணபதி கணகராஜ் மேல்மாகாண மக்கள் முன்னணியின் அமைப்பாளர் பிரபா கணேசன் புதிய பண்பாட்டு அமைப்பின் லா.பிரபாகரன் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

இவ்வெதிர்ப்பு தினத்தை தடுத்துநிறுத்த இதன் அமைப்பாளர்களை கைது செய்ய பொலிஸார் எடுத்த முயற்சி கைகூடவில்லை. குறிப்பாக பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் எஸ்.இராஜேந்திரனை கைது செய்ய பொலிஸார் முயற்சி செய்தனர் அதுவும் கைகூடவில்லை. கடைகளை திறக்கும்படி பொலிஸார் கேட்டுக்கொண்ட போதும் கடைகள் திறக்கப்படவில்லை கொட்டகலை நகரில் முச்சக்கரவண்டி சாரதி சிவா என்பவரை பத்தனை பொலிஸார் காலையில் கைது செய்து பி.ப 2 மணிக்கே விடுதலை செய்துள்ளனர். அவர் வாகனங்களுக்குப் பொது இடங்களிலும் கறுப்பு கொடிகளை போட்டார் என்றே கைது செய்யப்பட்டுள்ளர். ஆர்ப்பாட்டக்காரர்களை பேரினவாத சக்திகள் தாக்கப்போவதாகவும் இ.தொ.கா.வின் அடியாட்கள் தாக்கப்போவதாகவும் வதந்திகள் பரப்பப்பட்டன.

இவற்றையெல்லம் மீறி தூரஇடங்களிலிருந்தும் வாகனங்களை வாடகைக் கமர்த்திக் கொண்டும் (பஸ் போக்கு வரத்து குறைவாக இருந்தது) டெவன் நீர் வீழ்ச்சிக்கு அருகில் வந்து மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

பிரதான தொழிற்சங்கங்களின் ஆதரவின்றி மிகவும் வெற்றிகரமாக மே15 எதிர்ப்பு தினம் மலையகத்தில் முன்னெடுக்கப்பட்டது இதுவே முதற்தடவையாகும் என்பதால் இவ்எதிர்ப்பு தினம் முக்கியத்துவம் வாய்ந்த தாக அமைந்தது.

இதனையடுத்து யூன் 3 ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## தோட்டக்கோவிலில் வழிபட சாதிரீதியான தடை

பண்டாரவளை நாகவத்தை, மெய்யப்பன் டிவிசன் தோட்டக்கோவில் திருவிழாவிலும், வழிபாடுகளிலும் பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்கள் சாதிரீதியாக தடுக்கப்பட்டுள்ளனர்.

கோயிலின் வருடாந்த திருவிழாவிலும், வழிபாடுகளிலும் மேல்சாதி எனப்படுவோரின் ஆதிக்கம் தொடர்ந்து நிலைநாட்டப்பட்டு வருகிறது. அதனை எதிர்த்து ஒடுக்கப்பட்ட மக்கள் குரல் எழுப்பி வந்ததுடன் இங்கு வருட திருவிழாவை நடத்துவதிலும் சப்பரம் தூக்குவதிலும் வழிபாடுகளிலும் சமத்துவமான பங்களிப்பை கேட்டுள்ளனர். அதற்கு இணக்கம் தெரிவிக்கப்படவில்லை அத்தோட்ட கோயில் கமிட்டியின் தலைவர் பண்டாரவளை தமிழ் மாகவித்தியாலய அதிபர் தலைமையில் சாதிய ஆதிக்கம் நிலை நாட்டப்பட்டுவருகிறது தோட்ட நிர்வாகத்தினர், பொலிஸார் போன் றோர் மேல் சாதி எனப்படுவோரின் ஆதிக்கத்திற்கு ஆதரவாக இருப்பதால் ஒடுக்கப்பட்டோர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. வருடாந்த திரு விழா, வழிபாடுகளில் அவர்களுக்குரிய பங்கு மறுக்கப்பட்டுள்ளது. இதனால் ஒடுக்கப்பட்டோர் தேயிலை மலையில் இருக்கும் காட்டுமாரியம்மன் கோவிலில் தனியாக திருவிழாவொன்றை நடத்த திட்டமிட்டுள்ளார்கள். அத்துடன் தோட்டக் கோவிலுக்கு கொடுத்து வந்த நிதியுதவியை நிறுத்துவதெனவும் தீர்மானித்துள்ளனர்.

இதுவிடயத்தில் ஒடுக்கப்பட்டவர்களும் அங்கம் வகிக்கும் தொழிற்சங்களான இ.தொ.கா, ம.ம.மு என்பன இதனைக் கண்டும் காணமாமல் இருந்து வருகின்றன.

www.padippakam.com



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை.

# புதிய பூமி

පුදිය පූමි Puthiya Poomi

சுற்று 12 மே,யூன் 2005 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 80

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2435117,பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## அரங்கேறும் மதவெறி

திருகோணமலை நகரின் மையப்பகுதியில் மணிக் கூட்டுக் கோபுர எதிரே இரவோடு இரவாக புத்தர் சிலை ஒன்று நாட்டப்பட்டது. மே 15ம் திகதி காலையில் திருமலை நகரம் பரபரப்படைந்ததுடன் பதற்றமும் பெறத் தொடங்கியது நாலரை அடி உரச்சிலை நன்கு வடிக்கப்பட்டு மூன்றடி உயர கொங்கிறீட் பீடத்தில் வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் மேலே கூடாரமும் போடப்பட்டது. புனித பௌத்த நாட்கள் எனப்படும் வெசாக் தினக் கொண்டாட்டங்கள் இடம் பெறுவதற்கு பத்து நாட்கள் முன்னதாகவே இப் புத்தர் சிலை திருகோணமலை நகரின் மையப்பகுதியில் ஊன்றப்பட்டிருக்கிறது.

இப் புத்தர் சிலை நாட்டல் என்பது புனிதத்தைப் போற்றும் வகையிலோ அல்லது வழிபாட்டுத் தேவை அடிப்படையிலோ வைக்கப்பட்ட தொன்றல்ல. அல்லது பௌத்த மத பீடத்தின் விதி முறைகளுக்கு அமைய முன் அனுமதி பெற்று நாட்டப்பட்டதாகவும் இல்லை. இவ் வகையில் நோக்கும் போது முற்றிலும் திட்டமிட்ட உள் நோக்கங்களுடன் செய்யப்பட்டுள்ள நச்சுத் தன நடவடிக்கையாகவே காணப்படுகின்றது. நிச்சயம் இன வர்க்கத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பேரினவாத வெறி கொண்டவர்களும் அவர்களை உசுப்பி உற்சாகம் கொடுத்து வரும் அயல் ஆதிக்க சக்திகளும் இப் புத்தர்சிலைக்குப் பின்னால் மறைந்து நிற்கின்றனர் என்பது மறுக்கப்படமுடியாத ஒன்றாகக் காணப்படுகிறது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் ஒரு நூற்றாண்டு கால வளர்ச்சியில் பௌத்த மதத்தை சிங்கள பௌத்த பிக்கு மார்களும் அவர்களது பீடங்களும் எவ்வாறு பயன்படுத்தி வந்தனர் என்பது வரலாறு. ஆளும் வர்க்க கட்சிகளும் அரசாங்கங்களும் அதற்கு அடிபணிந்து இன்றைய யுத்தம் வரை அதனை முன்னெடுத்து வந்தமை உலகறிந்தவைகளேயாகும்.

இந்தியாவில் மதவெறி எவ்வாறு இந்துத்துவ அடிப்படைவாதத்துடன் இந்திய அரசியலிலே ஆதிக்கம் பெற்று வந்துள்ளமையை அவதானிக்கும் எவரும் அதனோடு இலங்கையின் பௌத்த மத செல்வாக்கு அரசியலில் ஆற்றி வந்த பங்கைத் தெளிவாகக் காணவே செய்வார்கள் இலங்கையில் பௌத்தமதம் அரசியலில் தீர்மானிக்கும் இடத்திலும் பேரினவாதப்பரம்பலிலும் முன்னிலை வகித்த போதிலும் அப்பட்டமான மத வெறியாக தலை விரித்தாடியது இல்லை.

ஆனால் இந்தியாவில் இந்துத்துவம் வெறிகொண்டு அரசியல் நோக்கச் சன்னதமாடியதன் ஊடாக இலங்கையிலும் மதஅடிப்படைவாதம் வெறியாகி வளர்ச்சி பெற ஆரம்பித்தது. இதற்கு இந்தியா உந்து கோலைக் கொடுத்தது. அதன் விளைவே பாராளுமன்றத்தில் பௌத்த பிக்குமார் சிஹலஉறுமய கட்சி மூலம் உட்புகுந்து கொண்டமையாகும். அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றும் ஒவ்வொரு உரையும் இனவெறி மதவெறியைத் தூண்டுபனவாக அமைந்து வருவதைக் காணலாம்.

இத்தகைய பேச்சுக்கள் நடந்தேறு வதற்கான ஒரு களமாகவே திருகோணமலை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. முற்றிலும் பேரினவாத விஸ்தரிப்பு நோக்கத்தோடும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை முறியடிக்கும் போக்கிலும் திருமலை புத்தர் சிலை நாட்டப்பட்டிருக்கிறது. இதனால் இனங்களுக்கிடையில் பதற்றமும் மோதலும் உருவாகி இரத்த ஆறு ஓடுவதையும் அவ் ஆற்றில் தமது அரசியல் படகுகளை இலகுவாக வலித்துச் செல்லலாம் எனவும் பேரினவாத அரசியல் சக்திகள் எதிர்பார்த்து நிற்கிறார்கள். இதற்கு இந்திய மேலாதிக்க கொள்கை வகுப்பாளர்கள் வரைபடம் வழங்குவதில் முன்னிற்கிறார்கள் அண்மையில் திருகோண மலைக்குச் சென்ற இந்திய உயர் இராஜதந்திரி ஒருவர் கிழக்கு மாகாணத்திற்கும் இந்தியாவிற்குமிடையே பாரம்பரிய தொடர்புகள் இருந்து வந்ததாக வற்புறுத்திக் கூறியதன் பின்னணி என்ன என்பதை சிந்திக்க முனையும் எவரும் உள்நோக்கைப் புரிந்து கொள்வர்.

இந்தியாவில் மதவெறி பல சந்தர்ப்பங்களில் தன்னை வெளிப்படுத்தி இரத்த ஆறு ஓடவைத்து வந்துள்ளது. குறிப்பாக கடந்த இரண்டு தசாப்தங்களில் பாபர்மசூதி இடிப்பிலும் குஜராத் படுகொலைகளிலும் இந்துத்துவ மதவெறியே முன்னிலை வகித்தது. இங்கே அத்தகையதோர் அரங்கேற்றத்தை திருமலை புத்தர் சிலை நாட்டுதலின் ஊடாக நிறைவேற்றிக் கொள்ளவே பௌத்த சிங்கள பேரினவாதிகள் முன்னிற்கிறார்கள் அதே வேளை புரிந்துணர்வு யுத்த நிறுத்த சூழலை முறியடித்து மீண்டும் யுத்தத்தை மூட்டும் எரிகொள்ளியாகவும் இப் புத்தர் சிலையைப் பயன்படுத்த நிற்கிறார்கள்.

இந்தியாவில் காவியுடையும் கையில் சூலாயுதமும் நெற்றி நிறைப் பொட்டுடனும் இந்துத்துவ வெறியர்கள் இஸ்லாமியர் மீது ஏனைய இனமதத்தவர் மீதும் பாய்கிறார்கள். இங்கு மஞ்சள் காவியுடை தரித்து கையில் விசிறி குடைகளுடன் பாராளுமன்றத்திலும் வீதியிலும் இறங்கி பௌத்த பிக்குகள் மதவெறி ஆட ஆரம்பித்திருக்கிறார்கள்.

அந்த மதவெறியின் அப்பட்டமான அரங்கேற்றமே கடந்த மே 15ம் திருகோணமலை நகரில் அரங்கேறி நிற்கிறது.

ஆளும் வர்க்கத்தினர் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்போர் இன மத பேதங்களை வளர்த்து அதன் ஊடே அரசியல் பிழைப்பு நடத்துவோர் என்ன பதில் தீர்வு கூறப்போகிறார்கள்.

இம் மதவெறிக்குப் பலியாகப் போவது மக்கள் பாழாகப் போவது நாடு. பயனடையப் போகிறர் வர்கள் இனம் மதம் மொழியின் பெயரால் வெறி கிளப்பி தத்தமது சொத்து சுகம் பதவி பெறுவோர் மட்டுமே.

**-ஆசிரியர் குழு-**



## தேசிய இன விடுதலைப் போராட்டமும் முஸ்லீம் தேசிய வாத நிலைப்பாடும்

இலங்கையில் சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத்தமிழ்த் தேசிய இனங்களும் ஏனைய பறங்கிய, மலாய் வேடுவ சமூகங்களும் இருந்து வருகின்றன என்பது இன்றைய யதார்த்தம். இத் தேசிய இனங்களின் இருப்பும் தொடர்ச்சியும் வளர்ச்சியும் வரலாற்றின் வெவ்வேறு கால கட்டங்களின் ஊடாக நிலையாக்கம் பெற்று வந்திருக்கிறது. பௌத்தம், இந்து, இஸ்லாமிய கிறிஸ்தவ மதங்களும் சிங்கள தமிழ் ஆங்கில மொழிகளும் இலங்கை மக்களுடையதாக இருந்து வருகின்றன. இவையனைத்தும் இலங்கைத் தீவின் பன்மைத்துவ சமூகத்தன்மையைப் பிரதிபலித்தும் நிற்கின்றன.

ஆனால் மேற்கூறிய பன்மைத்துவம் கொண்ட சமூக வளர்ச்சிப் போக்கினை மறுத்து வருவதிலேயே பௌத்த சிங்கள பெரும் தேசியவாத வெறி கொண்டோர் சன்னதம் ஆடி வருகின்றனர். பௌத்தசிங்கள இனம் ஒன்று தான் இந்நாட்டின் உண்மையான உரிமையாளர்கள் என்றும் அவர்களது விருப்பு வெறுப்பின் அடிப்படையிலேயே சகல தீர்மானங்களும் முடிவுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் இப் பௌத்த சிங்களப் பெரும் தேசியவாதிகள் பெரும் குரல் வைத்து வந்துள்ளனர். ஏனைய தேசிய இனங்களையும் சமூகங்களையும் வெறும் சிறுபான்மையினர் எனவும் அத்தகையோர் ஆட்சியிலும் அன்றாட வாழ்விலும் சமத்துவமான உரிமைகளோ கோரிக்கைகளோ இன்றி இரண்டாம் தர நிலையில் கொடிசெடிகளாக வாழ்ந்து விட்டுப் போகட்டும் என்ற பேரினவாத வெறித்தன நோக்குடனேயே இப் பெரும் தேசிய வாதிகள் நடந்து கொள்கின்றனர்.

இவர்களது பௌத்த சிங்கள மேலாதிக்க கருத்தியல்கள் நாட்டின் பிரதான அரசியல் நீரோட்டத்தின் அபாயகரமான சுழிகளாகிக் கொண்டதன் விளைவே இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையாகும். இப் பிரச்சினை தனியே சிங்கள தமிழ்த் தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினை மட்டுமல்ல. அது முஸ்லீம் மலையகத் தமிழ்த் தேசிய இனங்களையும் ஏனைய சமூகங்களையும் உள்ளடக்கிய பிரச்சினை என்பது புரிந்து கொள்ளப்படல் வேண்டும். அதே வேளை தமிழ்த் தேசிய இனத்திற்கும் பௌத்த சிங்கள பேரினவாத ஆளும் வர்க்கத்திற்கு மிடையிலான முரண்பாடானனது ராணுவ ஒடுக்குமுறை யுத்தத்தைத் தோற்றுவித்து விரிவடையச் செய்து கொண்டது. அதுவே நாட்டின் பிரதான பிரச்சினையாகவும் இருந்து வருகின்றது. இப் பிரச்சினையில் தமிழ்த் தேசியம் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக முன்னெடுத்து கடந்த கால் நூற்றாண்டாக பேரினவாத ராணுவ ஒடுக்கு முறை யுத்தத்திற்கு முகம் கொடுத்து முன்னேறி வந்துள்ள யதார்த்தத்தை எவ் வகையிலும் மறுக்கவியலாது. இத் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் இலக்கு மார்க்கம் தந்திரோபாயங்கள் நடைமுறைகள் போன்ற விடயங்களின் சாதக பாதக அம்சங்கள் வர்க்க கண்ணோட்ட அடிப்படையில் பரிசீலிக்கப்பட வேண்டியவைகளாகும். அத்தகைய நோக்குகளும் பரிசீலனைகளும் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு சாதகங்களாகவே அமைதல் வேண்டும். ஏனெனில் நம் எல்லோரினதும் பொது எதிரி பேரினவாத ஆளும் வர்க்கமும் அதற்கு அனுசரணை வழங்கும் ஏகாதிபத்தியமும் அந்நிய சக்திகளுமாகும்.

இவ்வாறான தேசிய இன விடுதலைப் போராட்ட சூழலில் ஆளும் வர்க்க பேரினவாத சக்திகளும் அவர்களுக்கு முட்டுக் கொடுத்து வரும் அந்நிய சக்திகளும் போராட்டத்தைப் பலவீனப்படுத்தி அழித்தொழிக்க கையாளும் அரசியல் சூழ்ச்சி தான் தமிழ்- முஸ்லீம் தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாட்டை தோற்றுவித்து வளர்த்துக் கொள்வதாகும். பேரினவாத ஒடுக்கு முறைக்கு தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழர் அனைவருமே ஆட்பட்டு நிற்கின்றனர். எனவே அதனை எதிர்த்து நிற்பதில் இம் மூன்று தேசிய இனங்களுக்கிடையே புரிந்துணர்வும் ஐக்கியமும் அவசியமானதாகும். அந்த வகையில் தமிழ் முஸ்லீம் உறவும் ஐக்கியமும் அவசியமான

**வெகுஜனன்**

தொன்றாகும்.

பௌத்த சிங்களப் பெரும் தேசியவாதம் தமிழ்த் தேசிய இனத்தின் நியாயமான கோரிக்கைகளைத் தட்டிக் கழித்து உதாசீனம் செய்து வந்தது போன்று தமிழ்த் தேசியவாதமானது முஸ்லீம் தேசியவாதம் முன் வைக்கும் நியாயமான எந்தவொரு கோரிக்கையையும் புறந்தள்ளவோ நிராகரிக்கவோ கூடாது. முஸ்லீம் மக்கள் இன்று ஒரு தேசிய இனமாக வளர்ச்சி பெற்றுள்ளனர். அவர்கள் பேசும் மொழி தமிழாக உள்ள போதிலும் அவர்களது பாரம் பரிய வாழ்விடம் வடக்கு கிழக்காக அமைந்துள்ள போதிலும் அவர்களது தனித்துவ அடையாளத்தை துலங்கச் செய்வது இஸ்லாமிய மதமாகவும் அதனோடு இணைந்த பண்பாடாகவுமே காணப்படுகின்றது. வடக்கு கிழக்கு மாகாணத்தை தமது தேசிய இன இருப்புக்குரிய பாரம்பரிய பிரதேசமாக முஸ்லீம் தேசியவாத சக்திகள் அடையாளப்படுத்தி நிற்பதை எவ் வகையிலும் நிராகரிக்கவியலாது. சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசும் அதன் தலைவராக விளங்கிய மறைந்த அஷ்ரவ்பும் கிழக்கைமைய

> பௌத்த சிங்களப் பெரும் தேசியவாதம் தமிழ்த் தேசிய இனத்தின் நியாயமான கோரி க்கைகளைத் தட்டிக் கழித்து உதாசீனம் செய்து வந் தது போன்று தமிழ்த் தேசியவாதமானது முஸ்லீம் தேசியவாதம் முன் வைக்கும் நியாயமான எந்தவொரு கோரிக்கையையும் புறந்தள்ளவோ நிராகரிக்கவோ கூடாது.

படுத்தி வடக்கு மற்றும் அவற்றுக்கு அப்பாலான பிர தேசங்களின் முஸ்லீம்களை தமது அரசியலுக்கு ஊடாக ஐக்கியப்படுத்தினர். இந்த ஐக்கியமும் அவர்களது அரசியலும் எவ்வாறு சீரழிந்து கொண்டது என்பது ஒரு புறமிருப்பி னும் முஸ்லீம் மக்கள் மத்தியில் தேசிய இன உணர்வை தேசியவாதத்தின் ஊடாகத் தோற்று வித்து வளர்த்துக் கொண்டது என்ற உண்மை மறுதலிக்க முடியாது ஒன்றாகும்.

முஸ்லீம் காங்கிரசும் அதன் தலைவர் அஷ்ரவ்பும் முஸ்லீம் மக்களது தேசிய இன உணர்வுகளையும் தேசிய வாத ஆரம்பநிலை ஆர்வத்தையும் அரசியல் மூலதனமாக்கி பாராளுமன்றம் பேரப்பேச்சிலும் பதவிகள் பெறுவதிலும் முனைப்பாக நின்றனர். அதன் மூலம் வர்க்க வளர்ச்சி பெற்ற உயர்வர்க்க முஸ்லீம் குழாத்தை வளர்த்தும் கொண்டனர். அத்தகைய சக்திகளின் பிரதிநிதிகளோ அஷ்ரப்பின் மறைவுக்குப் பின் பல்வேறு பிரிவுகளாகி முஸ்லீம் காங்கிரஸ் பல வீனமடைந்து கொள்ளக் காரணமாகினர். அதே வேளை முஸ்லீம் காங்கிரஸ் உருவாக்கி உத்வேகம் ஊட்டிய முஸ்லீம் தேசிய வாதமானது கணிசமான வளர்ச்சி நிலை காணவும் செய்தது. இத் தேசியவாதம் படித்த நடுத்தர வர்க்க சக்திகளிடையேயும் சிறுமுதலாளித்துவப் பிரிவினரிடையும் வலுப் பெற்று வருவதைக் காணமுடியும். கிழக்கிலே உருவாக்கப்பட்ட தென்கிழக்குப் பல்கலைக் கழகம் கல்வியியல் கல்லூரி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை தொழில் நுட்பக் கல்லூரி போன்றவற்றின் மூலமான கல்வியும் வேலை வாய்ப்பும் பெற்ற முஸ்லீம் இளைஞர்கள் தேசிய வாதநோக்கில் சிந்திப்பதில் தவறு இருக்க முடியாது. அது மட்டுமன்றி வடபுலத்திலிருந்து தொண்நூறாம் ஆண்டில் விரட்டப்பட்ட முஸ்லீம் மக்களின் அவலங்களும் வேதனைகளும் அனைத்து முஸ்லீம் மக்களதும் தேசியவாத உணர்வுகளை மேலும் வளர்த்துக் கொண்டன.

முஸ்லீம் தேசிய இனத்திற்கும் அவர்கள் மத்தியில் உருவாகி நிற்கும் தேசிய வாதத்திற்கும் முன்னால் பல முக்கிய கேள்விகள் எழுந்துள்ளன. நமது பொது எதிரி யார்? நமது உரிமைகளைப் பெறுவதில் நண்பன் யார்? எதிரி யார்? எத்தகைய போராட்டத்தை முன்னெடுப்பது? பாராளுமன்ற அரசியலும் அதன் பேரப்பேச்சு நடைமுறைகளும் முஸ்லீம் தேசிய இனத்தின் உரிமைகளை வென்றெடுக்க உதவுமா? ஒரே பிரதேசத்தில் தமிழ் முஸ்லீம் தேசிய இனங்கள் ஒன்றிணைந்து வாழ்வதற்கான அடிப்படைநிலைப்பாடுகள் எவை? இவற்றுக்கான பதில்கள் பரந்துபட்ட முஸ்லீம் சாதாரண மக்களின் நலன்களில் இருந்து தேடப்பட வேண்டும். ஏனெனில் தேசிய வாதம் என்பது பெரும்பாலும் நடுத்தரவர்க்க சக்திகளினதும் சிறுமுதலாளித்துவப் பிரிவினரதும் நலன்களைமையப்படுத்துவதுடன் உயர் வர்க்க பழைமைவாதக் கருத்தியல்களுடனும் சமரசமாகிக் கொள்ளக் கூடிய ஒன்றுமாகும்.

முஸ்லீம் தேசிய இனத்தை ஒன்றுபடுத்தி அதற்கு அரசியல் அடையாளமும் அந்தஸ்தும் பெற்றுக் கொடுத்தாகப் பெருமை பேசி அதன் மறைவில் நின்றே முஸ்லீம் உயர் வர்க்கத்தினர் மக்கள் பெற்றுக் கொண்டவை என்று கூறப்படுபவற்றை விடத் தாம் பெற்று தம்மை வளப்படுத்திக் கொண்டதே கடந்தகால நிகழ்வுகளாகும்.

ஆதலால் தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டமும் முஸ்லீம் தேசிய இன உரிமைகளுக்கான தேசிய வாதமும் எவ்வாறு தம்முள் புரிந்துணர்வுடன் ஐக்கியப் பட்டு விட்டுக் கொடுப்புகளுடன் முன் செல்வது பற்றி ஆழ்ந்து சிந்தித்து செயல்படல் வேண்டும். தமிழ்த் தேசிய வாதம் முஸ்லீம் தேசியவாதத்தை ஆதிக்க கண்ணோட்டத்துடன் அணுகுவது மிகப் பெரும் தவறாக அமையும். அவ்வாறே முஸ்லீம் தேசியவாதம் குறுகிய நிலை நின்று தமிழ்த் தேசிய வாதத்தைத் தமது பிரதான எதிரியாகக் கொண்டு பேரினவாதத்துடன் இணைந்து அதன் கருவியாகச் செயல்படமுனைவது முஸ்லீம் மக்களுக்குச் செய்யும் துரோகமாகவே அமையும்.

எவ்வாறாயினும் எத்தகைய தேசிய வாதமும் எல்லைக்கு உட்பட்டது என்பதும் வர்க்க நலன்களே இறுதியில் தேசியவாதத்தை விழுங்கிக் கொள்கிறது என்பதும் அடிப்படையில் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியவைகளாகும்.

www.padippakam.com



# இந்திய கம்யூனிஸ்ற் கட்சிகளின் சீரழிவும் புரட்சிகர சக்திகளின் பொறுப்பும்

பாராளுமன்ற சனநாயகம் பற்றி மாக்ஸ், லெனின் ஆகியோர் எந்த விதமான மயக்கத்துக்கும் இடம் வைக்கவில்லை. முதலாளியப் பாராளுமன்ற அரசியல் மூலம் உழைக்கும் மக்கள் சில உரிமைகளை வெல்லலாமே ஒழியச் சமூக அமைப்பையோ உற்பத்தி உறவுகளையோ சுரண்டலையோ சமூக ஒடுக்குமுறைகளையோ இல்லாமற் செய்ய முடியாது. பாராளுமன்றத்தின் மூலம் சோஷலிஸ சமூகம் அமைய இயலும் என்று நம்பியவர்கள் மாக்ஸின் காலத்திலிருந்தார்கள். லெனினின் காலத்தில் இருந்தார்கள். அவர்கட்குப் பின்னும் இருந்து வருகிறார்கள். வரலாறு அவர்களைப் பொய்ப்பித்து விட்டது. எனினும் அவர்கள் அந்த மயக்கத்தை மக்கள் மனங்களில் விதைத்துத் தம் அரசியற் பிழைப்பை நடத்தி வருகிறார்கள்.

ஒரு கம்யூனிஸ்றுக்கு அந்த மயக்கம் இருக்கலாகாது. முதாலாளிய அரசின் அடிப்படை வன்முறை சார்ந்து என்பதை அறிந்தும் அமைதியான முறையில் முதலாளிய ஆட்சியை மாற்றி சோஷலிஸத்தைக் கொண்டு வரலாம் என்று சொன்னவர்களை லெனின் திரிபுவாதிகள் என்று நிராகரித்தார். ஆனாலும் திரிபுவாதம் அவர் நிறுவிய சோவியத் யூனியனிலே அதிகாரத்திற்கு வந்தது. சோவியத் யூனியனில் திரிபுவாதம் அங்கீகாரம் பெற முன்பே அத்தகைய சிந்தனைகள் ஐரோப்பாவிற் சில கம்யூனிஸ்ற் கட்சிகளுக்குள் ஊடுருவி விட்டன.

எல்லாத் திரிபுவாதிகட்கும் பொதுவான ஒரு பண்பு. தமது நாடுகளில் உள்ள ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்கப் போக்குக்களை அனுசரித்துப் போவதாகும். மக்கள் நடுவே அப்படிப்பட்ட போக்குக்களுக்குக் கடும் எதிர்ப்பு உள்ளபோது அவர்கள் எதிர்த்து நிற்பார்கள். ஆளும் வர்க்கத்தின் கை ஓங்கி மக்கள் நடுவே எதிர்ப்புக் குறையும் போது தாங்கள் தேசிய நலன்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்ற விதமாகக் காட்டிக் கொள்ளுவார்கள். தேசத்தின் பேரால் நடக்கும் ஆக்கிரமிப்புக்களையும் போர்களையும் நியாயப்படுத்துவார்கள். இது மக்களுக்குத் தலைமை தாங்கும் போக்கல்ல. மாறாக அரசியல் அலைகளைப் பின்பற்றி வால் பிடிக்கும் போக்காகும்.



இந்தியாவின் கம்யூனிஸ்ற் கட்சிக்கு ஒரு வலிய போராட்ட வரலாறு உண்டு.கொலனி ஆட்சிக்கு எதிராகவும் நிலவுடைமைக்கு எதிராகவும் ஆயுதம் ஏந்திப் போராடிய பெருமை அதற்கு உண்டு. அதெல்லாம் 1950களுடன் சரி. சோவியத் யூனியனில் திரிபுவாதம் நிலைபெற்ற பிறகு இந்தியக் கம்யூனிஸ்ற் கட்சி (சி.பி.ஐ) இது தான் தருணம் என்று போராட்டப்பாதையை நிராகரித்து 1964ல் இந்தியக் கம்யூனிஸ்ற் கட்சியிடமிருந்து இ.க.க.(மாக்ஸிஸ்ற்) என்ற பேரில் பிரிந்த சி.பி.எம். பேரளவில் புரட்சிகர மார்க்கம் என்றாலும் நடைமுறையில் பாராளுமன்றக் கட்சியாகவே இருந்தது. சி.பி.ஐ-சி.பி.எம். முரண்பாடு பாராளுமன்ற அரசியல் தந்திரோபாயம் பற்றியதாகவே இருந்தது. சி.பி.ஐ சோவியத் யூனியனுடன் நல்ல உறவு பேணிய இந்தியக் காங்கிரஸ் ஆட்சிக்கு நெருக்கமாகவே இருந்தது.

இந்த இரண்டு கட்சிகளிலும் தனிப்பட்ட முறையில் நேர்மையான நல்ல மனிதர்கள் தலைமைப் பதவிகளில் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களால் கட்சியின் போக்கைக் கட்டுப்படுத்த இயலவில்லை. இக்கட்சிகளின் பொருளாதாரத் தேவைகட்கு உதவிய தொழிற்சங்கங்களின் செல்வாக்கும் வலுவாக இருந்தது. அதை விடப் பாராளுமன்றப் பதவிகளும் சில மாநிலங்களில் ஆட்சியமைக்கும் வாய்ப்பும் அவற்றில் மூலம் பெறக்கூடிய சமூகச் செல்வாக்கும் போராட்ட அரசியலிலிருந்து இக்கட்சிகளை மேலும் விலக்கி வைத்தது.

காலப்போக்கில் ஆயுதமேந்திய போராட்டத்தைத் தவிர்ப்பது என்ற நிலை அதை வெறுத்து நிராகரிப்பது என்ற நிலைக்கு அவர்களைக் கொண்டு சென்றது. சி.பி.எம்மை நம்பிச் சென்ற மாக்ஸிய - லெனினியவாதிகள் நடுவிலிருந்து 1967ல் உருவான நக்ஸல்பாரி இயக்கம் பல முனைகளில் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருந்ததாலும் அணுகுமுறையில் ஏற்பட்ட சில தவறுகளாலும் தோல்வியடைந்தது. எனினும் இன்று மாக்ஸிய லெனினியவாதிகள் தம்மை வலுவான சக்திகளாகப் பல மாநிலங்களில் உருவாக்கி வந்துள்ளனர்.

1990ம் ஆண்டு சோவியத் யூனியனில் சோஷலிஸம் வீழ்ந்து சோவியத் யூனியன் உடைந்ததோடு சகல திரிபுவாதக் கட்சிகளும் அத்துடன் சோஷலிஸம் முடிந்தது என்ற விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். சில ஐரோப்பியக் கம்யூனிஸ்ற் கட்சிகள் தம்மைச் சோஷலிஸ சனநாயகக் கட்சிகளாகப் பிரகடனம் செய்துகொண்டன. மூன்றாமுலக நாடுகளின் திரிபுவாதக் கட்சிகள் பாராளுமன்றத் தேர்தல்களில் பலவாறான சமரசங்களைச் செய்வதில் மேலும் தீவிரமாகின. கம்யூனிசம் என்ற சொல்லைப் பயன்படுத்தவே இவர்கள் தயங்கினார்கள். ஆனால் மாக்ஸிய லெனினியவாதிகள் மனம் தளரவில்லை. அவர்களது பார்வை இயங்கியல் சார்ந்தது. எனவே புரட்சி எப்போதும் நேர்கோட்டில் நிகழும் என்று அவர்கள் எதிர்பார்த்ததில்லை. வெகுசன அரசியலில் அவர்கள் கூடிய கவனம் செலுத்தினார்கள்.

மறுபுறம் அமெரிக்கா தன்னை உலகின் ஒரே பெருவல்லரசாக்கி உலகமயமாக்கற் கொள்கையைத் துரிதமாக நடைமுறைப்படுத்தியது. இதற்கு எதிரான எழுச்சிகள் பல வேறு திசைகளிலிருந்தும் வந்தன. முதலாளிய நாடுகளிலேயே ஏகாதிபத்திய மேலாதிக்கம் எதிர்ப்பைச் சந்தித்தது. 1997 முடிவில் கிழக்கு ஆசியாவில் ஏற்பட்ட நிதி நெருக்கடியும் அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ் உட்பட்ட நாடுகளின் பொருளாதார நெருக்கடியும் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகட்குப் புதிய தென்பை அளித்தன.

அமெரிக்காவின் உலக ஆதிக்க நோக்கம் யூகோஸ்லாவியாவில் குறுக்கீடு. பயங்கரவாத ஒழிப்புப் போர் என்ற பேரில் ஆஃப்கானிஸ்தானின் மீதான ஆக்கிரமிப்பு. பேரழிவு ஆயுத ஒழிப்பு என்ற பேரில் ஈராக் மீதான போரும் தொடரும் ஆக்கிரமிப்பும் என்று பலவாறாகத் தன்னை வெளிப்படுத்தியது. அமெரிக்கா தனது ஆயுத வலிமை மூலம் பிற நாடுகளைப் பணிய வைக்க எடுத்த ஒவ்வொரு முயற்சியும் அமெரிக்காவின் பலவீனத்தையே வெளிப்படுத்தின. இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் மிகவும் தனிமைப்படுத்தப் பட்டுள்ளது. போராட்டம் ஓய்ந்து ஒழிந்துவிட்டதாகச் சொல்லப்பட்ட ஒவ்வொரு நாட்டிலும் புரட்சிகர இயக்கங்கள் புதிய வலிமையுடன் எழுச்சி பெற்று வருகின்றன. அதை விட அமெரிக்காவுக்கு எதிராக எழுந்து நிற்கக் கூடிய ஆட்சிகள் அமெரிக்காவின் கொல்லைப்புறம் என்று சொல்லப்பட்ட தென்னமெரிக்காவில் உருவாகி வருகின்றன. கியூபாவைத் தனிமைப்படுத்தி நசுக்க அமெரிக்க எடுத்த முயற்சிகள் அமெரிக்காவைத் தனிமைப்படுத்தி. வத்திக்கான் திருச்சபையே கியூபா மீதான வணிகத் தடையைக் கண்டிக்கும் ஒரு நிலையை உண்டாக்கியுள்ளது.

இன்றைய சூழல் மீண்டும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய விடுதலை, சோஷலிஸ மாற்றம் என்பனவற்றுக்குச் சாதகமான நிலைமைகளைக் காட்டி நிற்கிறது. மக்கள் சமூக மாற்றம் பற்றி மிகுந்த உற்சாகத்துடன் உள்ளனர். இப்படிப்பட்ட ஒரு நிலையில் சந்தர்ப்பவாதிகள் மக்களுடைய உற்சாகத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயலுவதும் எதிர்பார்க்க வேண்டியதே. இந்திய அரசியலில் இது தான் நடக்கிறது.

இந்திய இடதுசாரி இயக்கம் என்று சொல்லப்படுவது ஒரு புறம் சி.பி.ஐ, சி.பி.எம்.போன்ற சீரழிந்த பாராளுமன்றக் கட்சிகளையும் மறுபுறம் வெகுசன அரசியலையும் புரட்சிகரமார்க்கத்தையும் வற்புறுத்துகிற கட்சிகளையும் கொண்டது.

சி.பி.ஐ, சி.பி.எம் போன்ற சீரழிந்த பாராளுமன்ற ஆசனங்களை வெல்வதற்காக யாருடனும் கூட்டணி அமைக்கக் கூசாத அரசியல். இந்திய முதலாளியத்தின் பிராந்திய மேலாதிக்கத்தை எதிர்க்கத் தயங்கிய நிலையிலிருந்து இன்று அந்த மேலாதிக்கத்திற்கு உதவ முயலுகிற அரசியல் நடைமுறையில் இந்திய மேலாதிக்க நலன் கட்குப் பாதகமான எந்த விடுதலைப் போராட்டத்தையும் எதிர்க்கத் தயங்காத அரசியல். ஜே.வி.பி யிடம் இக் கட்சிகள் அண்மையில் காட்டியுள்ள நட்புறவும் இந்திய மேலாதிக்க நோக்கங்களுக்கு இணக்கமானதே. இந்தியாவின் பல் வேறு தேசிய இனப்பிரச்சனைகளில் விடுதலை இயக்கங்களைப் பிரிவினைவாதிகள் எனவும் போராளிகளைப் பயங்கரவாதிகள் எனவும் அழைக்கும் தேவையும் இந்திய மேலாதிக்கத்தின் ஒரு பகுதியாகத் தங்களைக் காணுகிறதன் விளைவே. எனவே சர்வதேசப் பிரச்சனைகளில் இந்தியக் காங்கிரஸ் எடுக்கும் நிலைப்பாட்டைவிட முற்போக்கான. விடுதலைக்கு ஆதரவான நிலைப்பாட்டை சி.பி.ஐ.யிடமோ சி.பி.எம் மிடமோ எதிர்பார்க்க நியாயமில்லை.

இப்போது உலக அரசியலில் மறுபடியும் ஒடுக்குமுறைக்கு எதிரான எழுச்சி வலுப் பெற்றுவருகிறது. நாடுகளிற் புரட்சிகரமான சமுதாய மாற்றத்தை இயலுமாக்குவதற்கு நேர்மையான இடதுசாரிகளும் பிற சமூக விடுதலை இயக்கங்களும் முயலுகின்றன. இந்தியாவில் உள்ள மாக்ஸிய. லெனினியக் கட்சிகளும் குழுக்களும் அவை சார்ந்த இயக்கங்களும் ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டி வெகுசன அரசியலை முன்னெடுக்கின்றன. இந்தியாவை அண்டிய நேபாளத்தில் மன்னராட்சியைக் கவிழ்த்துச் சனநாயகத்தை நிறுவ மாஓ வாதிகள் முன்னெடுத்துள்ள போராட்டம் பெற்றுள்ள வெற் றிகள் உலகின் சகல விடுதலை இயக்கங்கட்கும் ஒரு பெரும் ஊக்குவிப்பாகும். இந்தியாவில் அதன் பாதிப்பு மிக வலுவானது. ஆனால் சி.பி.ஐயும் சி.பி.எம்மும் நேபாளப் புரட்சியாளர்களைப் பயங்கரவாதிகளாகக் காட்டி நேபாள முதலாளியக் கட்சிகளும் திரிபுவாதிகளும் இணைந்த ஒரு ஜனநாயக ஆட்சிக்காக ஏங்குகிறார்கள். இது அவர்களது வர்க்க அடையாளத்தின் தெளிவான வெளிப்பாடாகும். சி.பி.ஐயும் சி.பி.எம் மும் முதலாளியக் கட்சிகளை விடச் சிறப்பாக முதலாளியத்தை நிருவாகிக்கத் தம்மால் முடியும் என்று சொல்லிலும் செயலிலும் காட்டமுயல்கிறார்கள். அடிப்படையான சமுதாய மாற்றம் பற்றி அக்கறையற்ற நிலை போய் அஞ்சுகிற நிலைக்கு அவர்கள் வந்துள்ளார்கள். பாராளுமன்றத்தில் சி.பி.எம்மைக் சேர்ந்த சோம்நாத் சட்டர்ஜி சபாநாயகரானது. காங்கிரஸ் சி.பி.எம் முக்குப் போட்ட எலும்புத்துண்டு. பதிலுக்கு இக் கட்சியும் அதன் கூட்டாளிகளும் இந்திய ஆட்சியாளர்கள் உலகமயமாக்கலுக்கு ஏற்றபடி எடுக்கும் நடவடிக்கைகளுடன் இணங்கிப்போகிறார்கள். காங்கிரஸ் தலைமையிலான கூட்டரசாங்கம் தனது குறைந்த பட்ச வேலைத்திட்டத்தை நிறைவேற்றப் பின்னிற்பது பற்றியோ முதலாளிய நலன்களையே பேணுவது பற்றியோ இந்த இடதுசாரிகளுக்கு ஒரு கோபமும் இல்லை. இன்று இந்து மதவெறியாளர்கள் மறுபடியும் அரசியலில் தலை தூக்கத் தொடங்கிவிட்டனர். அவர்களைக் காரணங் காட்டி 'மதச் சார்பின்மை' அரசியல் என்ற பேரில் தேர்தல் கூட்டணிகளைக் கட்டுவதன் மூலம் ஃபாஸிய இந்து மதவெறியர்களை முறியடிக்க இயலாது. மக்கள் நலனுக்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கிற அதே வேளை. வெகுசன அரசியல் மூலம் மதவெறிக்கும் சாதிய ஒடுக்குமுறைக்கும் பிற சமூகக் கொடுமைகட்கும் எதிரான போராட்டங்களை முன்னெ டுப்பதன் மூலமே பாரதிய ஜனதாகட்சியையும் அதன் இந்து த்துவ எசமானர்களையும் முறியடிக்க இயலும். அதற்கு சி.பி.ஐ. சி.பி.எம் தலைவர்கள் ஆயத்தமாக இல்லை. அவர்கட்குப் பாராளுமன்ற, சட்டசபைத் தேர்தல் அரசியல் பழக்கப்பட்டு விட்டது. போராட்ட அரசியல் இரண்டு தலைமுறைக்கு முந்திய, மறக்கப்பட்ட விவகாரமாகி விட்டது.

இந்தியாவின் மாக்ஸிய- லெனினிய இயக்கங்களிடையிலான பகைமை குறைந்துள்ளது. ஒற்றுமைக்கான திசையில் அவை பயணஞ் செய்ய வேண்டும். அவர்களது ஒருங்கிணைவாலும் ஒற்றுமைப்படக் கூடிய சக்திகளுடன் சேர்ந்து போராடுவதாலுமே உலகுதழுவி எழுச்சி பெற்றுவரும் விடுதலைப் போராட்ட அலையால் இந்திய மக்கள் நன்மை பெற முடியும்.

இந்திய மக்களுடைய உற்சாகத்தைப் பாராளுமன்ற அரசியல் லாபத்துக்காக யாரும் பாவித்து மக்கள் சக்தியை விரயமாக்கி மக்களை விரக்திக்குள் தள்ளுவது முற்றாக எதிர்க்கப்பட வேண்டும். எனவே இந்திய மாக்ஸிய-லெனினிய சக்திகள் முன்னால் உள்ள பொறுப்புப் பெரியது. அதை அவர்கள் நிறைவேற்ற உகந்த ஒரு சூழ்நிலை உருவாகி வருகிறது. ஏனைய முற்போக்கு ஜனநாயக சக்திகளும் அதிற் பங்கேற்பார்களாக.

**-நரசிம்மா-**

# யார் இவர்கள் ஏன் இவ்வாறு கூறுகிறார்கள்?

## இஸ்ரேலியரைப் போலத்தான் ஈழத்தமிழரும் (1)

"இந்த இடத்தில் நாம் இஸ்ரேலியரைப் பார்க்க வேண்டும். இஸ்ரேலியரைப் போலத்தான் ஈழத்தமிழரும் என்று சிலர் அவ்வப்போது மேடைகளில் கூறுவதுண்டு. ஆனால் அது சரியான கணிப்பல்ல. மேலைநாடுகளில் வாழ்ந்து ஐரோப்பிய இனத்துவேசத்தில் சிக்குண்டு இலட்சக் கணக்கில் மடிந்து அதன் மூலம் பெற்ற அநுபவம் இஸ்ரேலியர்களுக்கு இருக்கிறது. இஸ்ரேலை அபிவிருத்தி செய்வதற்கான பணியை அவர்கள் இஸ்ரேலில் இருந்து ஆரம்பிக்கவில்லை. வெளிநாடுகளில் இருந்துதான் ஆரம்பித்தார்கள். இதை நாங்கள் உற்று நோக்க வேண்டும்.

வெளிநாடுகளில் உள்ள யூதர்கள் நன்கு திட்ட மிட்டு அமெரிக்கப் பொருளாதாரத்திலும் விஞ்ஞானத்திலும் ஆழமாக வேரூன்றினார்கள். ஜேர்மனியில் அழிக்கப்பட்டது போல் அழிக்க முடியாத வகையில் அவர்கள் கச்சிதமாக வேரூன்றினார்கள். ஐ.நா.மன்றில் அமெரிக்கா அதிகமான தடவைகள் தனது வீற்றோ அதிகாரத்தைப் பாவித்தது இஸ்ரேலைப் பாதுகாக்கத்தான். இதற்கு யார் காரணம்? அமெரிக்கப் பொருளாதாரத்தின் ஈரல்குலையைப் பற்றியுள்ள புலம்பெயர் யூதர்கள் தான் காரணம். அவர்களுக்கும் நமக்குமிடையை ஒப்பீடு காண வேண்டுமானால் நாம் இப்போது நிற்குமிடம் போதிய தல்ல, மேலும் பல படிகளை கடந்தாக வேண்டும்."

**சி.செ.துரை- ஞாயிறு தினக்குரல் 17-04-2005**

குறிப்பு:-ஈழத்தமிழர்கள் இஸ்ரேலைப் பின் பற்ற வேண்டுமென்கின்ற இலட்சியத்தில் மறத்தமிழர் வரிசையில் சி.செ.துரை என்பவரும் இணைகின்றார். இந்த வியாதி இன்று நேற்றுத் தொடங்கியதல்ல. வி.என்.நவரத்தினம் என்பவர் முதல் நிலாந்தன் என இப்பட்டியல் நீளும். பலஸ்தீன விடுதலை பற்றிய அக்கறையீனமும் சியோனிச இஸ்ரேலின் முன்மாதிரியும் அமெரிக்க விசுவாசமும் தமிழ் மக்களின் விடுதலைக்குச் சவக்குழி தோண்டவே உதவும் என்பதை விடுதலை விரும்பிகள் நன்றாகவே தெரிந்து கொள்வர். தினக்குரல் வார இதழின் தமிழ்த் தொண்டு வளர்க!

## உலக நாடுகள் என்பது அமெரிக்காவா? (2)

"பலஸ்தீன முன்னுதாரணத்தின் முக்கியத்துவம் யாதெனில், அமெரிக்காவிற்கே இப்பொழுது ஹமாஸ் போன்ற விடுதலை இயக்கங்களை பயங்கரவாத இயக்கங்கள் என்று காட்ட முனைவதிலும் பார்க்க பலஸ்தீன சுதந்திரத்திற்கு இஸ்ரேலை இணங்க வைப்பது முக்கியமாகியுள்ளது.

உலக பயங்கரவாத தளமாக சித்திரிக்கப் பட்ட இடத்தின் சுதந்திர வேட்கை, அதன் நியாயப்பாடு இப்பொழுது உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன"

**-பீஷ்மர்-ஞாயிறு தினக்குரல்17-04-2005**

குறிப்பு:- பயக்கரவாதம் என முத்திரை குத்துவோர் யார்? எதற்காக? உலக நாடுகள் என எல்லோரும் எதிர்பார்த்து ஒருமையில் எந்த நாட்டை நோக்கி வாயைப் பிளக்கிறார்கள்? எல்லாம் அமெரிக்காவின் ஆசிர்வாதத்துக்கே சலாம் போடுகிறார்கள். சோவியத் நிலைத்திருந்தவரை இத்தமிழறிஞருக்கு அமெரிக்கா ஏகாதிபத்தியமாக இருந்தது. இப்போது சர்வதேசியம் என்பது சரணஞ் சாமி அமெரிக்காவே என்று ஆகிவிட்டது. சாத்தான் வேதம் ஓதுகிறது என்று நம்பி நாம் சரணடையத்தான் முடியுமா?

*தொகுப்பு: -குஞ்சங்கலட்டியான்-*

## வீழ்ப்புடன் எழுகிறது......

1ம் பக்க தொடர்ச்சி...

இன்றைய மலையக நிலைமைகளில் தனி அமைப்பாகவன்றி பல அமைப்பு களின் ஐக்கியப்பட்ட மாற்று அரசியல் சக்தியே மூன்றாவது அரசியல் சக்தியாக வேண்டிய தேவையை சம்பந்தப் பட்ட அமைப்புகள் உணர வேண்டும் மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் அங்கத்துவ அமைப்புகளுக்கு மூன்றாவது அரசியல் சக்தியை கட்டி வளர்க்கும் பொறுப்பு இருப்பதை தட்டிக்கழிக்க முடியாது.

மாற்று அரசியல் என்பது இ. தொ. கா, ம. ம. மு தலைமைக்கு பதிலாக இன்னொரு தனிநபருக்கோ தனி அமைப்பிற்கோ, ஐக்கியப்பட்ட அமைப் பிற்கோ முடிசூடுவதாகாது. மாற்று அரசியல் பாதையை கொண்டிருக்க வேண்டும். பேரினவாத முதலாளித்துவ பிரதான கட்சிகளான ஐ. தே. க. சுதந்திரக்கட்சிக்கு ஆட்சியமை க்க உதவுவதாகவன்றி மலையக மக்களின் சுதந்திரமான அரசில்சக் தியை கட்டி வளர்ப்பதன் மூலமே உரிமைகளை உறுதிசெய்து கொள்ள முடியும்.

ஒரிரு வெகுஜனப்போராட்டங்களுடன் மலையகத்தமிழ் விடுதலை கிடைத்துவிடப்போவதில்லை.

படிப்பகம்

# சமூகமும் சனநாயகமும்

## அரசியல் வரலாற்று விசாரணை (01)

பேராசிரியர் சி.சிவசேகரம்

### சனநாயகம் என்பது என்ன?

மக்களால், மக்களுக்கான, மக்களுடைய அரசு என்ற அழகான சொற்றொடர் சனநாயக அரசை விளக்கப் பயன்படுகிறது. அது எவ்வாறு விளக்கப்பட்டாலும் மக்கள் ஒரு சமூகமாகத் தம்மைத் தாமே ஆளுவது என்ற கருத்தே சனநாயகம் என்பதன் அடிநாதமாக இருக்க இயலும். அரசு என்பது அதிகாரத்தைப் பற்றியது. அது அடக்குமுறையைக் கடைப்பிடிப்பது. எனவே 'சனநாயக அரசு' என்ற சொற்றொடர் தன்னுள் முரண்படுகிறது. எனினும் நாம் சனநாயக அரசுகளையும் ஆட்சிகளையும் பற்றிப் பேசிறோம். அங்கே சனநாயக உரிமைகள் பற்றியும் சனநாயக உரிமை மீறல்கள் பற்றியும் பேசுறோம் எனவே, சனநாயக அடிப்படையில் அமைந்த அரசு பற்றிய ஒரு படிமம் ஆளுக்கு ஒரு விதமாக என்றாலும், எங்கள் மனங்களில் உள்ளது என்பதை ஏற்க வேண்டும்.

சனநாயகம் எனப்படுவது, ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பிற்கு அமைய அந்தச் சமூக அமைப்பின் தன்மையால் வரையறுக்கப்பட்டுக் கடைப்பிடிக்கப்படுகிறது என்று நாம் காணலாம். அரசு எவ்வளவு சனநாயகமானது என்றாலும், அதற்குரிய சமுதாய அமைப்பையும் சமுதாய உறவுமுறைகளையும் பேணுவதிற் காட்டுகிற அக்கறையை விட அதிக அக்கறையைச் சனநாயகத்தைப் பேணுவதில் அது காட்ட இயலுமா என்ற கேள்விக்கான விடையைத் தேடினாற், சமுதாய அமைப்பை மீறிய சர்வ வியாபகமான சனநாயகக் கோட்பாட்டுக்கு இடமில்லை என்று நாம் காண இயலும்.

சனநாயகம் என்ற கருத்து, பதியப்பட்ட வரலாற்றில், முதன் முதலாகக் கிரேக்க சமுதாயத்திலிருந்தே எழுகிறது. அந்தச் சனநாயகம் அடிமைகளின் உழைப்பில் வாழும் நகர் சார்ந்த குடிமக்களுக்குரிய சனநாயகம் மட்டுமே. அந்தச் சனநாயகக் கோட்பாட்டில் அடிமைகட்கு இடமில்லை. தமிழகத்திற்கூட ஒரு காலத்திற் சோழ அரசின் கீழ் ஊராட்சியில் சனநாயகம் இருந்ததாகக் கூறப்படுகிறது. அங்கு "குடவோலை" எனப்படும் வாக்களிப்பு முறையில் ஊர்த்தலைமை தெரியப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனினும் அங்கே எல்லாருக்கும் வாக்குரிமை இருக்கவில்லை. இவ்வாறு, சனநாயகம் என்பது அன்று எவ்வாறு குறைபாடானதாக இருந்ததோ அவ்வாறே இன்றும் சிக்கலான வேறு முறைகளிற், குறைபாடான ஒன்றாகவே இருந்து வருகிறது.

அரசு என்பது அதிகாரம் பற்றியது என்றால், ஏற்றத் தாழ்வான ஒரு சமுதாயத்தையே அது அடையாளப்படுத்துகிறது. எனவே ஏற்கப்பட்ட சமுதாய ஏற்றத் தாழ்வுகளை மறுதலிக்கும் விதமாக அரசின் அதிகாரம் அமைய முடியாது. அதாவது, எங்கேனும் அரசு என ஒன்று இருந்தால், அங்கே சமுதாய ஏற்றத் தாழ்வுகள் ஏதோ வகைகளில் இருந்தே தீரும் என்பதோடு, சமுதாயத்தில் ஆதிக்கத்திலுள்ள பகுதியினரது நலன்களை முதன்மைப்படுத்திப் பேணும் விதத்திலேயே அரசும் அமைகிறது.

மனித சமத்துவம் மறுக்கப்பட்டு அடிமைச் சமூகம் உருவான காலந்தொட்டு அரசு என்ற அமைப்புக்கான தேவை இருந்து வந்தது. அடிமைச் சமுதாயத்திலோ அதன் பின்பு வந்த நிலவுடைமைச் சமூகத்திலோ எல்லாரும் சமமான குடிமக்கள் என்ற மயக்கத்திற்கு இடம் இருக்கவில்லை. எனவே சனநாயக அரசு என்ற கேள்விக்கு இடமிருக்கவில்லை. எனினும் சமுதாயத்தின் வெவ்வேறு மட்டங்களில் சனநாயகப் பண்புடைய நடைமுறைகள் இருந்துள்ளன. அவற்றை நாம் சனநாயக அரசு என்று கருத்துடன் குழப்பிக்கொள்ள இயலாது.

இந்தியாவின் கிராமங்களில் இருந்து வந்த மரபு வழிப் பஞ்சாயத்து முறையில் சனநாயகப் பண்புகளை அடையாளம் காணலாம். ஆயினும் அது சமூக ஏற்றத்தாழ்வுகளை முற்றாகப் புறந்தள்ளிய ஒன்றல்ல. எனினும் கிராமச் சமூகத்தின் முழுமையுமோ ஒரு பகுதியோ பங்கு பற்றக்கூடிய உரிமையை அது கொண்டுள்ளது. எனினும், ஊர் கூடி எடுக்கிற முடிவுகளில் எது "ஊர்" என்று கவனித்தாற் பல இடங்களில் ஊரில் சொத்துடையவர்களது கருத்தே ஊரின் கருத்தாக அமைவதைக் காணலாம்.

அடிமைச் சமூகமோ நிலவுடைமைச் சமூகமோ உழைக்கும் மக்களுக்கு ஆட்சியில் உரிமையோ பங்கோ உண்டா என்ற கேள்விக்கே இடம் வைப்பதில்லை. சமூகத்தில் ஒவ்வொருவருக்கும் அவரவருக்கு விதிக்கப்பட்ட இடம் உள்ளது. அரசு என்பது அந்த அமைப்பைப் பேணும் நோக்கிற் செயற்படுகிறது. சனநாயகம் என்பது நிலவுடைமைச் சமூகத்தின் இறுதி நிலையில் அதனுள்ளிருந்து முதலாளியம் உருவாகி வளர்ச்சி பெற்ற ஒரு சூழ்நிலையில் வடிவு பெற்ற ஒரு கருத்தாக்கமே. நிலக்கிழார்களது நலன் சார்ந்த அரசுக்கு எதிரான முதலாளிய எழுச்சிக்குத் தேவையான விடயங்களுள் மக்களுக்கு அரச

> **சனநாயகம் என்பது நிலவுடைமைச் சமூகத்தின் இறுதி நிலையில் அதனுள்ளிருந்து முதலாளியம் உருவாகி வளர்ச்சி பெற்ற ஒரு சூழ்நிலையில் வடிவு பெற்ற ஒரு கருத்தாக்கமே.**

நிருவாகத்தில் ஒரு குரல் அல்லது ஆட்சியில் ஒரு பங்கு என்கிற கருத்தும் ஒன்றாக இருந்தது.

நிலக்கிழார்களின் கீழ்ப் பண்ணையடிமைகளாக இருந்தவர்களை விடுவிப்பது, முக்கியமாக வட அமெரிக்காவிலும் தென்னமெரிக்காவிலும் அவற்றை அண்டிய தீவுப் பகுதிகளிலும் அடிமை முறையின் ஒழிப்பு என்பன முதலாளிய நலன்களோடு நெருங்கிய தொடர்புடைய விடயங்களாகும். இவ்வாறு சனநாயகத்துடன் தொடர்பு படுத்தக் கூடிய பல் வேறு சமூகச் சீர்திருத்தங்கட்கு முதலாளியத்தின் வருகையே காரணமாயிற்று. முதலாளியம் சமுதாயத்தின் உற்பத்தி வலிமையைப் பெரிதும் அதிகமாக்கும் நோக்கில் சமூக உறவுகளில் இருந்த சில வகையான ஏற்றத்தாழ்வான உறவுகளை ஒழித்ததன் மூலமும் ஒரு முற்போக்கான பங்கை ஆற்றியது.

எனினும், முதலாளியம் சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கவில்லை. மாறாகப் பழைய சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வான அமைப்பின் இடத்தில் இன்னொருவிதமான, உண்மையில் மேலுங் கடுமையாக மனித உழைப்பை உறிஞ்சக்கூடிய, இன்னொரு ஏற்றத் தாழ்வான அமைப்பைக் கொண்டு வந்தது. முதலாளியம் தனது தேசிய எல்லைகட்குள் மட்டுமே இயங்க இயலாதளவுக்கு அதன் உற்பத்தி வலிமையும் லாபத்துக்கான வேட்கையும் அவற்றின் விளைவாகச் சந்தைகட்கான போட்டியும் அதை ஏகாதிபத்தியமாகும் படி முன் தள்ளின. முதலாளியத்தின் இந்த வளர்ச்சிக் கட்டத்தில் அதன் தேசிய அடையாளம் ஒரு முக்கிய பங்கை ஆற்றியது. தேசியவாதத்தை முதன்மைப்படுத்தித் தனக்குப் பின்னால், நாட்டின் நடுத்தர வர்க்கத்தினரது ஆதரவை மட்டுமல்லாமல், தன்னாற் சுரண்டப்படுகிற தொழிலாளி வர்க்கத்தையும் அணிதிரட்ட அதற்குச் சனநாயகம் உதவியது. முதலாளியத்தின் கீழான சனநாயகம், சர்வசன வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்படும் அரசாங்கம் என்ற தோற்றத்தைப் பயன்படுத்தி, ஏகாதிபத்தியத்தின் நலன்களைத் தமது நலன்களாகக் காணுமாறு தொழிலாளி வர்க்கத்தின் ஒரு கணிசமான பகுதியினரையும் தூண்டியது.

இப் போக்கைச் சீர்திருத்தவாதிகளும் சமூக சனநாயகவாதிகளுமான தொழிலாளி வர்க்கத் தலைமைகள் அடையாளப்படுத்தின. அது மட்டுமன்றிச் சீரழிந்த ஒவ்வொரு இடதுசாரி இயக்கமும் இவ்வாறான தேசியவாத மேலாதிக்கப் போக்குக்கட்கு உடந்தையாக நின்றதை இன்றளவும் நாம் காண முடியும்.

எவ்வாறாயினும், முதலாளியம் மக்களுடைய சனநாயக உரிமைகளைச் சுய விருப்பின் பேரில் வழங்கவில்லை என்பதை நாம் மறுக்கலாகாது. பாராளுமன்றச் சனநாயகம் என்பது அதன் தொடக்க நிலையிலிருந்தே எல்லாரும் சமமாகப் பங்கு பற்றக்கூடிய ஒரு அடிப்படையில் அமையவில்லை. நிலமானியச் சமூகத்தின் பல மிச்ச சொச்சங்கள் அங்கு வலிதாக இருந்தன. அமெரிக்காவில் முன்னாள் அடிமைகளான ஆபிரிக்க வம்சாவழிக் கறுப்பினத்தவர்கட்கும் பெண்களுக்கும் சனநாயக உரிமைகள் இருக்கவில்லை. வட அயர்லாந்திற், சில தசாப்தங்கட்கு முன்பு வரை, சொத்துடைமையின் அடிப்படையிலேயே வாக்குரிமை இருந்தது.

ஒரு நூற்றாண்டுக்குச் சில தசாப்தங்கள் முன்பிருந்து தான் மேற்கிற் பெண்கள் வாக்குரிமை பெறத் தொடங்கியதையும் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே சில ஐரோப்பிய நாடுகளிற் பெண்கள் வாக்குரிமை பெற்றனர் என்பதை நாங்கள் மறக்கலாகாது.

சுருங்கச் சொன்னால், முதலாளியமே சனநாயக ஆட்சி முறையைப் புகுத்தியது என்றாலும், ஒவ்வொரு சனநாயக உரிமையும் உழைக்கும் மக்களது போராட்டங்களின் மூலமே வென்றெடுக்கப்பட்டது.

முதலாளியத்தின் தேவை சனநாயக ஆட்சியைப் பேணுவது அல்ல. தனது லாபத்தைப் பெருக்குவதும் பெரும் லாபத்தை நீண்ட காலத்துக்கு உறுதிப்படுத்துமாறு சந்தைகளை விரிவுபடுத்திச் சந்தைகள் மீது தனது மேலாதிக்கத்தை நிறுவுவதுமே அதன் தேவைகள். இத் தேவைகளே ஏகாதிபத்தியமாகவும் இன்று உலக மேலாதிக்கத்திற்காக ஏகாதிபத்திய உலகமயமாதலைத் தீவிரமாக முன்னெடுக்கும் ஒரு மூர்க்கத்தனமான அழிவுச் சக்தியாகவும் அதனை வளர்த்தெடுத்துள்ளன.

எனவே முதலாளியத்தின் கீழான சனநாயகமும் அது இயலுமாக்குகிற பல்வேறு சனநாயக உரிமைகளும் நிலையானவையல்ல என்பதையும் சனநாயகமும் சனநாய உரிமை களும் பற்றிய முதலாளிய நிலைப்பாடு இடத்துக்கு இடம் வேறுபடுவதும் காலத்துக்குக் காலம் மாறும் என்பதையும் நாம் மறக்கலாகாது. அதிலும் முக்கியமாய், பாராளுமன்றத் தேர்தல்முறையும் பாராளுமன்ற அரசாங்கமும் முதலாளிய சனநாயகத்தின் தோற்றப்பாடான அம்சங்களே ஒழிய அவை தம்மளவிற் சன நாயக ஆட்சியைக் குறிப்பன அல்ல என்பதை இங்கு வற்புறுத்த வேண்டும். அத்துடன் நாமறிந்த முதலாளியச் சனநாயக முறைக்குப் புறம்பான சனநாயக ஆட்சி முறைகள் உள்ளன என்பதையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

**வளரும்**

# அமெரிக்க ஆதிக்கமும் வத்திக்கானும்

காலஞ்சென்ற போப்பரசர் இரண்டாவது ஜோண்- போல் பதவியேற்ற போது ஏகாதிபத்தியம் தனது புதிய மூலோபாயத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கி விட்டது. கொலனி யுகம் முடிந்து நவ கொலனி யுகம் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட சூழலில் ஏகாதிபத்தியப் பொருளாதாரத்துடன் மூன்றாமுலகப் பொருளாதாரத்தை நெருக்கமாகப் பிணைத்து முழு உலகின் வளங்களையும் உழைப்பையும் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தின் கீழ் குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கீழ்க் கொண்டுவருகிற திட்டம் 1970களின் பிற்பகுதியில் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படத் தொடங்கியது.

அதே காலத்தில் கொலனியாட்சியிலிருந்து விடுதலை பெற்ற நாடுகளில் ஆட்சியிலிருந்த தேசிய முதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியச் சுரண்டலை எதிர் கொள்வதற்கு வலுவற்றுத் தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கைகளையும் உரிமைப் போராட்டங்களையும் எதிர்கொள்ள முடியாமல் தடுமாறி ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்யத் தொடங்கிய காலமுமாகும். அச் சூழலிலே மூன்றாமுலக நாடுகளில் வலதுசாரிகள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

அணிசேரா நாடுகள் போன்ற அமைப்புக்கள் சர்வதேச மட்டத்திற் பெற்ற வெற்றிகள் 1970களின் பிற்பகுதியுடன் ஓய்ந்து போக மூன்றாம் உலகின் ஒற்றுமைப்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்புப் பற்றிய நம்பிக்கைகள் தளரத் தொடங்கிய காலமும் அது.

கத்தோலிக்கத் திருச்சபை சோஷலிஸ நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்தும் எனவும் நவீன உலகிற்கேற்பத் தனது பழைமைவாத நிலைப்பாடுகளைச் சிறிது நெகிழ விடும் எனவும் நம்பிக்கையூட்டிய ஒரு போப்பரசரான முதலாவது ஜோன்-போலின் மறைவையொட்டி பதவியேற்ற இரண்டாவது ஜோன்-போல் அந்த நம்பிக்கைகட்கு நேரெதிரான திசையில் திருச்சபையை வழிநடத்தத் தொடங்கினார்.

மிக நீண்ட காலத்திற்குப்பின் நான்கு நூற்றாண்டு இடைவெளியின்பின் பதவியேற்ற இத்தாலியரல்லாத இப் போப்பரசரின் தாய்நாடு போலந்து. போலந்து சோஷலிஸ ஆட்சிக்கு கீழ் வந்ததைக் கத்தோலிக்கத் திருச்சபை அறவே வெறுத்தது. எனவே போலந்து கத்தோலிக்க மத பீடம் எப்போதுமே போலந்தின் கம்யூனிஸ்றுக்களுடனும் அரசுடனும் முரண்பட்டு நின்றது. இரண்டாம் உலகப் போரின் போது, கத்தோலிக்கத் திருச்சபையும் குறிப்பாக வத்திக்கானில் உள்ள அதன் அதிகாரபீடமும் போப்பரசரும் ஜேர்மன் ஃபாஸித்தைப் பகைக்காமலே நடந்து கொண்ட காரணத்தால் ஜேர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் திருச்சபையின் செல்வாக்குக் குறைந்தே இருந்தது.

என்றாலும், சோவியத் யூனியனில் க்ருஷ்சொவ் தலைமையில் திரிபுவாதம் அதிகாரத்துக்கு வந்த பின்பு ஏற்பட்ட மாற்றங்கள், கிழக்கு ஐரோப்பாவிலும் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தின. அமெரிக்க சி. ஐ. ஏயும் பிற குழிபறிப்பு அமைப்புக்களும் தீவிரமாக இயங்கின. மறுபுறம் சோவியத் மேலாதிக்கத்தின் கைப்பாவைகள் போலச் செயற்பட்ட கிழக்கு ஐரோப்பியத் திரிபுவாதக் கம்யூனிஸ்றுக்களது ஆட்சிகள் மக்களிடமிருந்தும் குறிப்பாகத் தமது வெகுசனத் தளமான தொழிலாளரிடமிருந்தும் அந்நியப்படத் தொடங்கின. அதைவிட ஒரு வலிய நிருவாக வர்க்கம் உருவாகியது. அது தன்னை நிலைநிறுத்துவதிலும் தன் அதிகாரத்தை வலுப்படுத்துவதிலுமே குறியாயிருந்தது.

இப்படிப்பட்ட சூழலில் இரண்டு வகையான மாற்றங்களே இயலும். ஒன்று தொழிலாளிவர்க்க அதிகாரத்தை வலுவாகக் கட்டியெழுப்புவது. இதற்கான போரா ட்டம் கம்யூனிஸ்ற் கட்சிகட்கு உள்ளும் தேவை யான போது வெளியிலும் இருந்தே முன்னெ டுக்கப்பட வேண்டியதாகும். மற்றது தொழிலாளி வர்க்க அதிகாரம் மறுதலிக்கப்பட்டு முதலாளியத்தை நோக்கிப் போவது, ஏனெனில் தொழிலாளி வர்க்கத் தலைமையும் அதிகாரமும் இல்லாமல் சோஷலிஸம் நிலைக்க முடியாது.

போலந்தில் தொழிலாளரிடையே ஒரு பகுதியினரின் அதிருப்தியைப் பயன்படுத்தி லெஹ் வலெஸா என்ற சோஷலிஸ விரோதத் தொழிலாளி ஒருவரை முன்னிலைப்படுத்தி ஒரு சுயாதீனமான தொழிற் சங்க அமைப்பு (ஸொலிடாறிற்றி என அறியப்பட்டது) உருவானது. இதில் சி. ஐ. ஏ பெரும் பங்களித்தது. இதற்கான ஊக்குவிப்பும் ஆதரவும் போப்பரசரிடமிருந்தே கிடைத்தன. வத்திக்கானும் சி. ஐ. ஏயும் எவ்வளவு தூரம் ஒத்துழைத்தன என்பது இன்னமும் முற்றாகத் தெரியாது.

காலஞ்சென்ற போப்பரசரது கம்யூனிஸ விரோதம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் மிகவும் மெச்சப்பட்டது. எனினும் போப்பரசரது கம்யூனிஸ விரோதத்துக்கும் அமெரிக்காவினது கம்யூனிஸ விரோதத்துக்கும் நோக்கங்கள் வேறுபட்டவை. எனவே சோவியத் யூனியனின் சரிவையடுத்து முரண்பாடுகள் வெளி வெளியாகத் தொடங்கின.

லத்தின் அமெரிக்காவின் நாடுகள் எல்லாமே கிட்டத்தட்ட முழுமையான கத்தோலிக்க நாடுகள் அல்லது வலிய கத்தோலிக்கப் பெரும்பான்மையுள்ள நாடுகள். அவற்றில் கியூபா போக மற்ற நாடுகளிலெல்லாம் அமெரிக்கச் சார்பான ஆட்சிகளே இருந்தன. அவை அமெரிக்க ஏகபோகத்துக்குப் பணிந்து தமது மக்களின் உழைப்பையும் நாட்டின் மூலவளங்களையும் தாரைவார்க்கும் ஆட்சிகள். வறுமையின் கோரப்பிடிக்குள் வாழும் மக்கள் நடுவே செயற்பட்ட கத்தோலிக்கப் பாதிரிமார் பலர் மக்களின் வறுமையிலிருந்து விடுதலைக்கு வழிகாட்டாத ஒரு கிறிஸ்துவம் பயனற்றது என்று உணர்ந்தனர்.

தொடர்ச்சி 10 பக்கம்

# தோழர் சிதம்பரம் அர்த்தமுள்ள வாழ்வு வாழ்ந்து மறைந்தவர்

வடபுலத்து பொதுவுடைமை இயக்கத்தின் முது பெரும் தோழரும் புதிய-ஜனநாயக கட்சியின் மூத்த உறுப்பினரும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முன்னணிப் போராளித் தலைவர்களில் ஒருவருமான தோழர் சின்னத்தம்பி சிதம்பரம் கடந்த 26-03-2005ல் தனது எண்பத்தி ஐந்தாவது வயதில் இயற்கை எய்தினார்.

காங்கேசன்துறைப் பகுதியிலும் வலிவடக்கு பிரதேசத்திலும் தோழர் சிதம்பரம் நன்கு அறியப்பட்ட ஒரு பொதுவுடமை வாதியாக வாழ்ந்து வந்தவர். அவரை தோழர்கள், தோழர் சிதம்பரி என்றே அழைப்பார்கள். அவர் நேர்மையான பொதுவுடைமையாளர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படை அம்சங்களோடு இறுதிவரை வாழ்ந்து வந்திருக்கிறார். வடபுலத்து பொதுவுடைமை இயக்கத்தின் வளர்ச்சியும் எழுச்சியுமுடைய காலக்கட்டத்தில் மட்டுமன்றி தற்காலிகப் பின்னடைவைச் சந்தித்த காலத்திலும் தோழர் சிதம்பரி உறுதி குலையாத உருக்குப் போன்ற கொள்கை நிலைப்பாட்டுடன் நின்று வந்தமை தான் அவருக்குரிய சிறப்பம்சமாகும். அவரது நிலைப்பாடு வெறுமனே உணர்ச்சி நிலை சார்ந்த ஒன்றல்ல. ஆழமான உணர்வுநிலை கொண்டதாகும். அந்த உணர்வானது இன்றைய சமூக அமைப்பு நிலையை பொதுவுடைமைக் கோட்பாடு, கொள்கை, இலட்சியம் என்பனவற்றால் தெளிவுறுத்தப்பட்ட உணர்வாக எப்பொழுதும் அவரிடம் இருந்து வந்திருக்கிறது. மாச்சிஸம் வகுத்தளித்த வர்க்கப் போராட்டம் என்ற அடிப்படை நிலைப்பாட்டை இறுகப்பற்றி அதன் ஊடே சமூக முரண்பாடுகள் ஒவ்வொன்றையும் அவற்றின் பிரத்தியேக சூழலில் வைத்து நோக்கி தெளிவான கொள்கைகளையும் நடைமுறைகளையும் தூர நோக்குடன் முன்னெடுத்து வந்த மாக்ஸிச – லெனினிச கட்சி நிலைப்பாட்டை தோழர் சிதம்பரம் இறுதியான முதுமைக் காலத்திலும் கடைப்பிடித்து வந்தார். அத்தகைய ஒரு பொதுவுடமைப் போராளியின் கடந்த காலம் கற்றறிவதற்கு உரிய ஒன்றாகும்.

தோழர் சிதம்பரி 1920ம் ஆண்டில் பிறந்தவர். நிலவுடைமை வழிவந்த சமூக அமைப்புச் சூழலில் வர்க்க சாதிய ஒடுக்கு முறைக்குள் வாழ்ந்து வந்த தொழிலாளர் குடும்பத்தில் பிறந்தவர். அவரது இளமைக் காலத்தில் கடுமையான உழைப்பில் ஈடுபட்ட போதிலும் எவ்விதமான முன்னேற்றமும் இல்லாத சூழலில் இந்நிலை ஏன் என்ற கேள்வி அவரிடம் எழுந்தது. அத்துடன் சாதிய தீண்டாமை நடைமுறைகள் அவரது இளமை பராயத்தில் தீவிர எதிர்ப்புணர்வை ஏற்படுத்தியது. இக் கால கட்டத்தில் தான் காங்கேசன்துறையில் இரண்டாவது உலக யுத்த காலத்தில் ஒரு வைத்தியசாலை கட்டப்பட்டது. அதில் ஒரு கட்டிடத் தொழிலாளியாக இணைந்து கொண்ட சிதம்பரிக்கு அங்கு சிறிது காலம் மேற்பார்வையாளராக வேலை பார்த்த எம்.சி.சுப்பிரமணியத்தின் பழக்கமும் தொடர்பும் ஏற்பட்டது. எம். சி. அக்காலத்தில் தோழர் மு.கார்த்திகேசனால் 1945ல் தோற்றுவிக்கப்பட்ட வடபுலத்து பொதுவுடைமை இயக்கத்தின் ஆரம்ப உறுப்பினர்களில் ஒருவராகி தீவிரமாக அதற்காக வேலை செய்து வந்தவர்களில் ஒருவர். எம்.சி யின் தொடர்பால் தோழர் சிதம்பரி பொதுவுடைமைக் கொள்கைகளையும் அதன் இலட்சியங்களையும் உள்வாங்கிக் கொண்டார். பின்பு மு.கார்த்திகேசன் டாக்டர் சு.வே.சீனிவா சகம் ஆகியோரின் தொடர்பும் நெருக்கமும் அதிகரிக்கவே வலி. வடக்கு காங்கேசன்துறைப் பிரதேசத்தில் முக்கியமான ஒரு பொதுவுடைமைவாதியாகிக் கொண்டார். அதன் பின்பே காங்கேசன்துறைப் பிரதேசத்தில் சி.கந்தையா, கிருஷ்ண பிள்ளை, சின்னராசா, போன்றவர்கள் பொதுவுடைமை இயக் கத்தில் இணைந்து செயற்பட்டனர். ஐம்பதுகளில் சி.குமார லிங்கம், இ.கா.சூடாமணி, வீ.ரி.செல்வராசா போன்ற தீவிர இளைஞர்கள் தோழர் சிதம்பரியினதும் டாக்டர் சீனிவாசக த்தினதும் வழிகாட்டலில் பொதுவுடைமை இயக்கத்தின் வேகமான வளர்ச்சியில் பங்கேற்றனர்.

தோழர் சிதம்பரி ஆரம்பத்தில் வலி. வடக்கு பொதுவுடைமைக் கட்சிக் கிளையிலும் பின்பு அது விரிவடைந்து காங்கேசன் துறைக் கிளையாகவும் செயற்பட்டு வந்த வேளைகளில் எந்த வொரு பிரச்சினையிலும் தெளிவாகவும் தூர நோக்குடனும் விடயங்களை அணுகிப் பரிசீலித்து முடிவுகளை மேற்கொள்ளும், நிதானமான போக்கைக் கொண்டிருந்தார். அதேவேளை எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் அவர் எத்தகைய தடைகள் கஷ்டங்கள் வந்தாலும் அதற்கு அஞ்சாது முகம் கொடுத்து முன்னேறும் போராட்டக் குணாம்சத்தைக் கொண்டவராகவும் விளங்கினார்.

வரலாற்றுப் புகழ் மிக்க 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 சுன்னாக எழுச்சியில் தோழர் சிதம்பரி கலந்து கொண்டு முன்னணியில் இருந்தவர். "சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற செம்பதாகையின் புரட்சிகர முழக்கத்தில் எழுந்த எழுச்சியின் வீச்சலைகள் வடபுலத்தில் சாதிய அடிமை விலங்குடன் உறங்கிக் கிடந்த பெரும் மக்கள் திரளினரை உலுக்கி விழிப்படையச் செய்தது. அதன் விளைவாகவே வடபுலத்து ஆலய தேனீர்கடைப் பிரவேசப் போராட்டங்கள் இடம்பெற்றன. அப்போராட்டங்களின் மூல விசையாக அமைந்த அன்றைய முன் னணித் தோழர் களில் தோழர் சித ம்பரி ஒருவராவார்.

1967ம் ஆண் டிலேயே பிரசித்தி பெற்ற மாவிட்ட புரம் ஆலயப் பிர வேசம் பற்றிய ஆர ம்பப் பிரச்சினை கள் தோற்றம் பெற்று விட்டன. அவ்வேளை அன் றைய வடபுலத்து பொலீஸ் அதிப ராக இருந்த சுந்த ரலிங்கம் பத்தி ரிகைகளில் ஒரு அறிக்கை வெளி யிட்டார். யாரா வது மாவிட்டபுரம் கோவிலுக்குள்



செல்லத் தயாரானால் தான் பாதுகாப்புத் தருவேன் என்பதே அவ்வறிக்கை. அவரது உள் நோக்கம் எவரும் அதற்கு முன் வர மாட்டார்கள் என்பதாகும். அவ் வேளை தோழர்கள் சிதம்பரி, சின்னராசா ஆகியோரின் பெயர்களில் ஒரு துண்டுப்பிரசுரத்தை வெளியிடனர்.நாங்கள் ஆலயப் பிரவேசத்திற்குத் தயார் என்பதே அப்பிரசுரத்தின் தலைப்பாகும். வலிவடக்கிலும் அப்பாலும் விநியோகிக்கப்பட்ட அப் பிரசுரம் பொலிஸ் அதிபரையும் ஆலய தர்மகர்தாவையும் சாதிவெறியர்களையும் கிலி கொள்ள வைத்தது. ஆனால் அப்பிரசுரம் வெறும் பிரசுரமாக இருந்து விடவில்லை. அதன் அடிப்படையிலேயே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளாக மாவிட்டபுர ஆலயப்பிரவேசப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அவ் வேளை வடபுலத்து சாதியப் பிற்போக்குத் தனங்கள் யாவும் வெளிக் கொணரப்பட்டது. அப்போராட்டங்களில் வடபுலத்து தாழ்த்தப்பட்ட மக்கள் அலையலையாகத் திரண்டு போராடினர். அத்தகைய போராட்டங்களுக்கு முன்னணியில் காங்கேச ன்துறை, பளை, தெல்லிப்பளை, கீரிமலை போன்ற பகுதிகளின் தோழர்களும் மக்களும் முன் நிறுத்தப்பட வேண்டிய தேவை இருந்தது. ஏனெனில் ஆலய தர்மகர்த்தாவும் பொலீசும் ஆலயப் பிரவேசத்தை தடுத்து தலைமை தாங்கிய "அடங்காத் தமிழன்" எனப்பட்ட ஸி. சுந்தரலிங்கமும் வெளியாட்கள் வந்து கோவிலில் குழப்பம் செய்கிறார்கள் என்ற பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டனர். அத்தகைய பிரசாரத்தை முறியடிக்கும் வகையில் இப்பிரதேசத்தைக் சேர்ந்த மக்களுடன் தோழர்கள் முன்ன ணியில் நின்றனர். தோழர்கள் சிதம்பரி, கந்தையா சின்னராசா, வீ.ரி. செல்வராசா பேன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். முதன் முதலில் மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசத்திற்கான முன்னறிவிப்புக் கடிதத்தை அப்பிரதேச மக்கள் சார்பாக கையெழுத்திட்டு ஆலய தர்மகர்த்தா, பொலீஸ் அதிபர், அரசாங்க அதிபர் மற் றும் பிரமுகர்களுக்கு அனுப்பிவைத்த இருவர்களில் தோழர் சிதம்பரி ஒருவராவார். மற்றவர் மறைந்த சின்னராசா ஆவார். முன்வைத்த காலை பின்னெடுக்காது. போராட்டத்தின் முதல் வரிசையில் நின்று வந்த தோழர் சிதம்பரி ஒவ்வொரு சந் தர்ப்பத்திலும் தோழர்கள் கே.ஏ.சுப்பிரமணியம் டாக்டர் சு.வே.சீனிவாசகம். இ.கா.சூடாமணி ஆகியோருடன் மிக நெருக்கமாக இருந்து கலந்துபேசி ஆலோசனைகள் பெற்று செயற்பட்டு வந்த ஒருவராக இருந்து வந்தமை குறிப்பிடத் தக்கது.

பொதுவுடைமைக் கட்சியின் தொழிற்சங்கப் போராட்டங்க ளுக்கு வெளியில் இருந்து ஆதரவு கொடுத்து அவற்றை வெற்றி பெறச் செய்வதில் தோழர் சிதம்பரி முன்னின்று வந் தார். மூட்டை பறிப்புத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை வென்றெடுப்பதில் முக்கிய பங்காற்றினார். பின் சீமெந்து தொழிற்சாலையில் தொழிற்சங்க வேலைநிறுத்தப் போராட்டம் ஒருமாதம் இடம் பெற்ற வேளை அதன் வெற்றிக்கு தொழிலா ளர் பக்கத்தில் நின்று சகல உதவி ஒத்துழைப்பையும் வழங்கு வதில் தோழர் சிதம்பரி பங்காற்றினார். சில சந்தர்ப்பங்களில் தோன்றிய எதிர்ப்புகளை முறியடிக்க எடுக்கப்பட்ட புரட்சிகர நடவடிக்கைகளிலும் தோழர் சிதம்பரி தனது பங்களிப்பை வழ ங்கினார்.

தமிழரசு, தமிழ் காங்கிரஸ் என்பனவற்றின் ஆதிக்கத்திற்கு எதிராகக் காங்கேசன் துறைப் பகுதியில் முகம் கொடுத்து நின்றதில் தோழர் சிதம்பரி முக்கியமான ஒருவராக இருந்தார். அவரைப் போன்ற போராட்டக் குணாம்சமும், கொள்கைப் பிடிப்பும் கொண்ட தோழர்களின் பலத்தாலேயே தோழர் டாக்டர் சு.வே.சீனிவாசகம் காங்கேசன்துறைப் பட்டின சபையில் உறு ப்பினராகி தலைவர் பதவியையும் வகித்து மக்களுக்கும் சேவை யாற்ற முடிந்தது.

தோழர் சிதம்பரி அவர்களை யாழ்ப்பாணத்திலும் காங்கேசன் துறையிலும் அக் காலங்களில் நடைபெற்ற கூட்டங்களில்

**சி.கா. செந்திவேல் பொதுச் செயலாளர்**
**புதிய-ஜனநாயக கட்சி.**

சந்திப்புகளில் கண்டிருக்கின்றேன். அவ் வேளைகளில் அவரது கருத்துக்களை கட்சியின் முக்கிய தலைவர்கள் மிக ஆர்வத்து டனும் அவதானத்துடனும் கேட்பதையும் அவர் கூறும் விடயங் களை மையமாகவைத்து விவாதித்து கலந்துரையாடி முடிவுகள் மேற்கொள்வதையும் அவதானித்திருக்கிறோன். 1969ல் அவ் வருட மாவிட்டபுர ஆலயப் பிரவேசப் போராட்டத்திற்கான தயாரிப்புகள் இடம் பெற்றுக் கொண்டிருந்த நாட்களில் ஒரு நாள் தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்துடன் சிதம்பரியின் வீட்டிற்கு சென்றிருந் தேன். மிகவும் தோழமையுடன் எம்மை வரவேற்று உபசரித்து என்னைப் பற்றி தோழர் மணியத்தின் மூலம் அறிந்து கொண்டார்.

தோழர் சிதம்பரியை போராட்டம் இடம் பெற்ற சந்தர்ப்பங்களில் நேரடியாகக் கண்டிருக்கிறேன். எதற்கும் அஞ்சாது முன்னணி யில் போர்க்குணத்துடன் நிற்கும் அவரது பாங்கு முன்னுதார ணமானதாகும். மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் போராட்ட உச்சநிலையில் நேரடியாகவே சாதிவெறியர்களுடனும் பொலி சாருடனும் மோதல் நிலை ஏற்பட்ட வேளை தோழர் சிதம்பரி ஒரு முன்னணிப் புரட்சிகரப் போராளிக்குரிய நிலைப்பாட்டை வெளிப்படுத்தி நின்றமை இப்பொழுதும் கண்முன்னே பசுமை யானதாக காட்சி தருகின்றது. தோழர் எஸ்.ரி.என். நாகரட்ண த்தையும் ஏனைய தலைமைத் தோழர்களையும் குறிவைத்து சாதிவெறியர்கள் மேற்கொண்ட தாக்குதலை முறியடித்து அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படாவண்ணம் பாதுகாத்து அம்முற்றுகையில் இருந்து வெளியே கொண்டு வந்ததில் ஏனைய முக்கிய போராட்டத் தோழர்களுடன் தோழர் சித ம்பரியும் இணைந்து நின்று போராடினார்.

இன்று சாதியத்தின் உடன் பிறப்பான தீண்டாமை 'பொது இடங்களில் இருந்து இல்லாது ஒழிக்கப்பட்டுள்ளது என்றால் அது காலத்தின் இயல்பான மாற்றங்களோ

தொடாச்சி 10ம் பக்கம்


# மக்கள் தொண்டன் தோழர் சின்னத்தம்பி சிதம்பரம்

புதிய ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினர் தோழர் சி. சிதம்பரம் 26.03.2005 ஆம் திகதி காலமாகிவிட்டார். காங் கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 13.04.1920ல் தொழிலாளி குடும்பத்தில் பிறந்தார். காங்கேசன்துறையைச் சேர்ந்த மீனாட்சியைத் திருமணம் செய்து கொண்டார். அன் னாருக்கு நான்கு பெண் பிள்ளைகளும் இரண்டு ஆண்பிள்ளை களும் உள்ளனர். இவர் எண்பதுகளில் தனது அன்பு மனை வியையும் இளைய மகளையும் இழந்து விட்டார்.

2003ல் நடைபெற்ற புதிய ஜனநாயகக் கட்சியின் 25வது ஆண்டு விழாவில் மூத்த உறுப்பினர் கௌரவிப்பு நிகழ்வில் தோழர் சி. சிதம்பரம் அவர்கள் முதன்மையான மூத்த உறுப் பினர் என்ற வகையில் செஞ்சால்வை போர்த்தி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மறைந்த தோழர் சி. சிதம்பரம் தொழி லாள வர்க்க உணர்வுடன் ஒரு மாக்கிசிஸ்ட் லெனினிஸ்ட்டாக வாழ்ந்தவர். மக்கள் இயக்கங்களிலும் போராட்டங்களிலும் அடிமட்டத் தொண்டனாகவும் தலைமைச் செயற்பாட்டாளரா கவும் இருந்து சொல்லிலும் செயலிலும் மாக்கிஸ்ட் லெனினி ஸ்டாக வாழ்ந்தவர். இவர் எப்போதும் பாட்டாளி வர்க்கத் தினதும் அடக்கப்பட்ட மக்களினதும் உரிமைகளை வென்றெடுப் பதில் கூடிய அக்கறையுடன் செயற்பட்டு வந்தவர். அனைவருக் கும் முன்மாதிரிக்குரிய பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுடன் தனது இறுதிநாள் வரை வாழ்ந்தவர்.

சமூக மாற்றத்திற்கான பொதுவுடமை அரசியலை வாழ்க்கை ஆக்கிக் கொண்டு மக்களின் விடுதலைக்காக பொதுவுடை மைக் கட்சியை வளர்ப்பதில் முன்னின்ற மூத்த தோழராக காணப்பட்டார். இவர் வாழ்ந்த 84 வருடங்களில் அரைநூற் றாண்டு காலம் பொதுவுடைமை அரசியலில் ஈடுபட்டு இறுதி வரை மாக்ஸிய லெனினிசத் தோழராக வாழ்ந்தார். தீண் டாமை ஒழிப்புப் போராட்டங்களில் தீவிர பங்கு கொண்டார். ஆலயப்பிரவேசம், தேனீர்க் கடைப் பிரவேசம் மற்றும் ஏனைய வெகுஜனப் போராட்டங்களிலும் முக்கிய பங்கு வகித்தார். குறிப்பாக மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசம் போராட்டங்களில் முன்னின்றவர்.

பொதுவுடைமைக் கொள்கைகளுக்காகவே தன் வாழ்நா ளையே போராட்டமாக ஆக்கியவர். தமது மூத்தமகள் திருமதி சரஸ்வதி முருகேசுவின் திருமாங்கல்ய தாரண நிகழ்வை எவ்வித சமயச்சடங்குகளும் இன்றி புரட்சிகரமாக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தலைவர் தோழர் எஸ். ரி. என். நாகரத்தினம் தலைமையில் நடாத்தி ஓர் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். சிறுபான்மைத் தமிழர் மாகாணசபையில் ஓர் உறு ப்பினராக இருந்து சகல வெகுஜனப்போராட்டங்களிலும் பங்கு பற்றியவர். 1971 இல் ஏற்பட்ட ஜே. வி. பி. கிளர்ச்சியின் போது வட இலங்கைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பொதுவுடைமைத் தோழர்களின் வரிசையில் தோழர் சிதம்ப ரனின் பெயர் முதன்மையானது. இளவயது முதல் பொதுவுடை மைவாதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தம்மை ஓர் உன் னதமான மாக்ஸ்ட், லெனினிஸ்டாக வளர்த்துக் கொண்டார். மறைந்த தோழர் தர்மகுலசிங்கம் (ஜெயம்) அவர்கள் வாழ்ந்த காலத்தில் காங்கேசன்துறை உணவுக் கட்டுப்பாட்டுத் தொழி லாளர்கள் மூடைப்பறியல் சம்மந்தமான பிரச்சனை ஏற்பட்ட பொழுது தோழர் தர்மகுலசிங்கம் ஊடாக தொழிலாளர்கள் சம்பந்தமான அப்பிரச்சனை தீர்க் கப்பட்டதற்கு காரணமாக இருந்தவர் அமரர் சிதம்பரன் ஆவார்.



அன்னாரது இறுதி நிகழ்வுகள் 27.03. 2005 ஆம் திகதி ஆனந்தபுரம் கிளிநொச்சியில் புதிய ஜனநாயகக்கட்சியின் மூத்த உறுப்பினர் தோழர் கணபதிப் பிள்ளை (சூடாமணி) தலைமையில் சமய, சாதிய, சம்பிரதா யங்கள் எதுவுமின்றி புரட்சிகரமான முறையில் நடைபெற்றது. கட்சியின் வடபிரதேச செயலாளர் கா. கதிர்காமநாதன் அவர்களும் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டார். அன்னாரது முதல்மாத அஞ்சலி நிகழ்வு ஏப்ரல் மாதம் 15ம் திகதி அவர் இறுதியாக வாழ்ந்த ஆனந்தபுரம் கிளிநொச்சியில் நடைபெற்றது. அன்றைய தினம் அஞ்சலி நினைவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

**வ.முருகேசு**
**ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்**

www.padippakam.com



# கழிக்கப்பட்ட கப்பல்கள் அன்பளிப்பு!

அமெரிக்காவிலிருந்து ஐரோப்பிய யூனியன் வரை வளர்ச்சியடைந்த நாடுகள் என முத்திரையிடப்பட்ட முதலாளிய நாடுகள் தத்தம் நாடுகளில் கழிக்கப்பட்ட நிராகரிக்கப்பட்ட பொருள்களை மூன்றாம் உலக நாடுகளுக்கு மனிதாபிமான உதவியென்ற பெயரில் காலங்காலமாக வழங்கி வந்துள்ளன. இதுசம்பந்தப்பட்ட தகவல்களை பகிரங்கப்படுத்துவதில் கம்யூனிஸ்றுகளே முன் நின்று வருகின்றனர். நமது நாட்டில் பாராளுமன்ற ஆசனங்களைக் குறிவைத்து இயங்கும் கட்சிகள் இது பற்றி வாய் திறப்பதேயில்லை. தமிழ்க் கூட்டமைப்பும் இதற்கு விதிவிலக்கல்ல. ஏனெனில் அவற்றுக்கு ஒரு வர்க்க முத்திரை இருந்து வருவதே யாகும்.

பிரான்சில் பதியப்பட்ட அரச சார்பற்ற நிறுவனமொன்று அண்மையில் ஒரு மீன்பிடிக் கப்பலை வழங்கியது. இக்கப்பல் மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன் பிடிப்பில் பயிற்சி வழங்கும் எனக் கூறப்பட்ட போதும் கப்பல் கடல் பயணத்திற்கு உகந்ததா என அத்தாட்சிப் படுத்தும் உரிமை மீன்பிடி அமைச்சுக்கே உள்ளபோதும் இந்தக்கப்பல் சம்பந்தமாகத் தங்களுக்கு ஏதும் தெரியாது என அவர்கள் கூறிவிட்டனர்.

இங்கு வந்துள்ள கப்பல் முப்பது வருட பழமையானது. 55மீட்டர் நீளம். கப்பலின் பெயர் "SIMON KEG HIAN" 500 தொன் பொருள் கொள்ளக்கூடியது. ஐரோப்பிய சமூகத்தின் விதிகளுக்கமைய இந்தக் கப்பல் கடல் பயணத்தை மேற்கொள்ளவதிலிருந்து ஏற்கனவே விடுவிக்கப்பட்டுவிட்டது.

இந்தக்கப்பலை இலங்கையில் புதிதாகப் பதியப்பட்ட அரசசார்பற்ற நிறுவனமான லோறியன்ரீ- மாத்தற நட்புறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் இந்நாட்டிற்கு கொண்டு வந்துள்ளனர்.

இந்த உள்ளூர் அமைப்பின் போசகர்களாக பிரதமர் மகிந்த ராஜபக்சவும் பிரதி அமைச்சர் சந்திரசிரி கஜதீரவும் உள்ளனர். இதைவிட ஒருபெரிய வர்த்தகப் பிரமுகரும் இதன் போசகர். காலித்துறை முகத்திற்கு கப்பலை கையளிக்கும் வைபவத்தில் கலந்து கொண்ட கஜதீர, இந்தக்கப்பல் மூலம் ஆழ்கடலில் சிக்கலான தொழில்நுட்பக் கருவிகளை எப்படிப் பயன்படுத்தி மீன்பிடிப்பதென மீனவருக்கு பயிற்றுவிக்க முடியுமென்றார். இந்தப் பிரதியமைச்சர் கஜதீர பாராளுமன்ற திரிபுவாத சிறி



லங்கா கம்யூனிஸ்ற் கட்சியின் மாத்தறை மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. ஐஸ் கட்டியைத் தயாரித்து ஆழ்கடலிலேயே அதை மீனவருக்கு வழங்க முடியுமாம். வேறு மீன்பிடி கப்பல்களினால் பிடித்த மீன்களை இக்கப்பலில் களஞ்சியப்படுத்த முடியுமாம். இந்தக் கப்பல் மூலம் உல்லாசப் பயணிகளை ஆழ்கடலுக்கு அழைத்துச் செல்லலாமெனவும் அந்தப் பிரதி அமைச்சர்

**கரன்**

விளக்கமளித்தார்.

சுற்றாடல் பாதுகாப்பு அறிஞர்கள் இக்கப்பலைப் பயன்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அத்துடன் பெருமளவிலான மீன்பிடிப்பினால் மீன் வளம் குன்றிப்போய்விடுமென வும் கூறியுள்ளனர்.

மீன்பிடி அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க, "இந்தக் கப்பல் மூலம் மீனவர்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளனர் என்ற விடயம் தனக்குத் தெரியாதென்றார். இந்தக் கப்பல் சம்பந்தமாக ஒருவரும் எங்களுக்கு அறிவிக்கவில்லை. இது சம்பந்தமாக எங்களுடன் கலந்தாலோசித்திருக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

மீன்பிடி அமைச்சின் இயக்குனர் நாயகம் எம். பியசேனா பத்திரிகை மூலமாகவே இந்தக் கப்பல் பற்றித் தான் தெரியவந்ததாகவும் கூறினார். வழமையாக இவ்வாறான கப்பல்கள் கொண்டு வருவதானால் அமைச்சிடமிருந்து முன் அனுமதி பெறவேண்டுமென்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை. ஐரோப்பிய சமூகம் தமது பாவனையில் இருந்து நிராகரித்த கப்பல்களை சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு அனுப்புவதை சுற்றாடல் அக்கறையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

ஐரோப்பிய சமூகத்திடம் சேவைக்கு ஏற்றதல்லவென நிராகரித்த (1100) ஆயிரத்து நூறு கப்பல்களில் சிலவற்றை சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்தியா, இந்தோனியா, மாலைதீவு, மியன்மார், சோமாலியா, இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு அனுப்பத்திட்டமிட்டுள்ளதாக ஜனவரி மாதத்தில் ஐரோப்பிய யூனியன் அறிவித்தது.

இங்கு வேறு ஒருவிடயமும் கவனிக்கத்தக்கது. இந்தக் கழிவுக் கப்பல்களை ஐரோப்பிய சமூகத்திற்குள்ளே அழித்தால் அந்த நாடுகளில் சூழல் மாசடைந்து விடும். இந்தக் கழிவுக் கப்பல்களை வளர்ச்சியடையாத நாடுகளின் தலையில் சுமத்திவிட்டால் அந்த நாடுகளிலே சூழல் மாசடையும். வளர்ச்சியடையாத மூன்றாம் உலக நாடுகளை வளர்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் கழிவுப் பொருட்களைக் கொட்டும் குப்பைக் கிடங்குகளாகவும் சாக்கடைகளாகவுமே பயன்படுத்திவருகின்றன என்பதற்கு மேற்படி கப்பல் வழங்கி உதவுவது என்ற பிரச்சாரமும் வழங்கல்களும் ஒரு தகுந்த உதாரணமாகும்.

# குத்துக் கரணங்கள்

பட்டணத்தடிகள்

## அவலை நினைத்து உரலை இடிக்கும் கதை

திடீரென ஒரு நாள் புறக்கோட்டை வர்த்தகர்கள் கடையடைப்பில் இறங்கிவிட்டனர். அது சாய்ப்புச் சட்டத்திற்காக உரிமை கோரி தொழிலாளர்கள் போராடுகிறார்களா? என்று பார்த்தால் இல்லை. அது முதலாளிகளின் போராட்டம். அவர்கள் இறக்குமதி செய்யும் உருளைக்கிழங்கு வெங்காயம் அடங்கிய கொள்கலன்களை சுங்கப்பகுதியில் வைத்து கடற்படையினர் (கட்டாயம்) பரிசோதிக்க வேண்டும் என்று கூறி தடுத்து வைப்பதால் ஒரு புறம் பொருள் பழுதடைகிறது. மறுபுறம் சுங்க- குத வாடகை அதிகமாகச் செலுத்த வேண்டி வருகின்றது என்பது அவர்களது பிரச்சினை.

அந்த ஒரு நாளிலேயே உயர் மட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு மறுநாள் கடைகள் திறக்கப்பட்டன. ஆனால் ஒரு வாரகாலம் முடிவதற்குள் மீண்டும் கடற்படையினர் தங்கள் கரங்களை கொள்கலன்களுக்குள் நுழைக்க முற்பட்டபோது சுங்க அதிகாரிகள் வேலை பகிஷ்கரிப்பில் இறங்க முற்பட்டனர்.

துறைமுகப்பகுதி சுங்கப்பகுதி எல்லாம் கடற்படையினரின் பாதுகாப்பில் உள்ளது உண்மை. நாட்டின் பாதுகாப்பிலும் அவர்களுக்கு அக்கறை உண்டு உண்மை. ஆனால் சுங்க அதிகாரிகள் ஏன் கடமையில் இருக்கிறார்கள்? அவர்களுக்கு தேசியக் கடமை இல்லையா? என்ற சந்தேகம் சாதாரண மனுசருக்கு எழுவது தவிர்க்க முடியாததுதான்.

இந்த இழுபறிகளின் பின்னணியில் ஏதோ ஒன்று இருந்து உறுத்துவது மட்டும் உண்மை. அதாவது சில காவி உடை போர்த்தி தர்மம் பேசுபவர்களுக்குள்ளும், சமதர்ம செவ்வுடை துறந்த அரசியலாளர்களுக்கும் ஒரு பொதுவான ஒற்றுமை உண்டு. அதுதான் இனவாத அரசியல் தாகம். அதன் ஒரு சூட்சம வடிவமே புறக்கோட்டை வர்த்தக சமூகம் மீதான அழுத்தம் ஆகும்.

அதாவது அன்று முதல் இன்று வரை புறக்கோட்டை வர்த்தக சமூகத்தின் ஆதிக்கம் தமிழர்களிடமே உள்ளது. இன்னும் இலகுபடுத்திக் கூறுவதானால் இன்றைய இறக்குமதிப் பொருளாதாரத்தின் ஏகபோக உரிமைகளை பெரும்பாலும் 'தமிழ்' முதலாளிமார்களே தங்கள் கைப்பிடிக்குள் வைத்திருக்கின்றனர்.

நேரடியாக இந்தக் கைப்பிடியை சிதைப்பது என்பது கல்லில் நார் உரிக்கும் விடயம் என்பது இனவாத அரசியலாளருக்கு நன்கு தெரியும். காரணம் சில தேர்தல் முடிவுகளையே தீர்மானிக்க வல்லவர்கள் இந்த புறக்கோட்டை வர்த்தக சமூகத்தினர்.

எனவே அவர்களுக்கு மறைமுமான நெருக்கடியைக் கொடுத்து அவர்களின் தொழில் துறைகளைச் சிதைத்து, மொத்த நட்டக்கப்பலில் ஏற்றி இல்லா தொழித்து விடலாம் என்பது அவர்களின் இனவாத வியூகம்.

அதற்காக தமது கட்சி சார்ந்த அல்லது ஏற்கனவே இனவாத நஞ்சூட்டப்பட்ட கடற்படையினரை ஆயுதமாக்கி கொள்கலன்களில் கைவைக்க திட்டமிட்டனர். திட்டம் நடைமுறைக்கு வந்த போதே பிரச்சனை விசுவரூபம் எடுத்த விடயம் தெரிய வந்தது.

முதலாளிமார் கடையடைத்தது மட்டுமல்லாமல் அரிசி, பருப்பு, சீனி, உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்று அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் திடீர் விலை ஏற்றம் காணும் நிலையைக் காட்டி மிரட்டினர்.

முதலில் மிரண்டது - இறக்குமதியில் உலகை காணும் அமைச்சர்கள் தான். அடுத்து மிரண்டது பொதுசனம். மிரண்டால் என்ன நடக்கும் என்பதை சூழ்ச்சிக்காரர்கள் புரிந்து கொண்டார்கள். ஆனாலும் சுங்கத்துறையின் அதிகாரத்தை தம் கைக்குள் வைத்திருக்கும் நப்பாசையில் கடற்படையினர் மீளவும் கொள்கலன்களுள் கைவிட முயல்கின்றனர்.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்காமல், அல்லது அதற்கான முன்னெடுப்புகளை சரியாக மேற்கொள்ளாமல் இறக்குமதி வியாபாரத்தை நொந்து கொள்வதில் என்ன பயன் இருக்கிறது.

மலையக தோட்டங்களில் விளையும் உருளைக் கிழங்குகளின் உற்பத்தியாளர்களுக்கு தேவையான மானிய உதவிகள் தரப்படுவதில்லை, இடைத்தரகு வர்த்தகர்களின் சுரண்டல்களில் இருந்து விடுதலை அளிக்கப்படுவதில்லை. அதேபோல் வடபகுதியில் உற்பத்தியாகும் வெங்காயத்துக்கு சரியான சந்தை வாய்ப்புகள் தரப்படுவதில்லை.

இத்தகு அரசியல் பொருளாதார நெருக்கடிகளை உள்ளூரில் குடியிருக்க விட்டுவிட்டு அப்பாவி நுகர்வோரின் தலையில் இறக்குமதிப் பொருள்களைக் கட்டியடிப்பது என்பது யார் செய்யும் தவறு?

எனவே ஆளும் கட்சியில் அங்கம் வகித்தால் மட்டும் போதாது. உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான திட்டம் இருப்பதாக தண்டோரா போட்டாலும் போதாது. அவற்றை செயல் வடிவம் ஆக்க வேண்டும். அதற்கு இனவெறி உதவாது.

# சமஷ்டியா தனிநாடா?


**நூல் விமர்சனக் கண்ணோட்டம்**

அரசியல் வரலாறு, மு.திருநாவுக்கரசு, அறிவமுது பதிப்பகம், கிளிநொச்சி, சனவரி 2005 ப.234 ஒ ஒ, விலை குறிப்பிடப்படவில்லை.

தமிழ்த் தேசியவாதக் கண்ணோட்டத்திலிருந்து தேசிய இனப் பிரச்சனை தொடர்பாக சமஷ்டி ஆட்சி முறை, சுயநிர்ணய உரிமை என்பன பற்றிய விரிவான ஆய்வுகளை உள்ளடக்கி எழுதப்பட்ட இந்த நூல், நமக்குப் பழக்கப்பட்ட தமிழ்த் தேசியவாத அணுகுமுறையிலிருந்து பெருமளவும் வேறுபடுகிறது. அவருடைய பார்வைத் தெளிவு நூலின் முன்னுரையிற் சிறப்பாக வெளிப்படுகிறது. விஞ்ஞானரீதியான, பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்தில் அவர் தேசிய இனப்பிரச்சனைக்கான ஒரு தீர்வாகச் சமஷ்டி முறையை நோக்குகிறார்.

சமஷ்டி முறைக்கு ஏதுவான சூழல் பேரசுகளின் தோற்றத்தின் பின்பு எவ்வாறு உருவாகியது என்பதையும் அவை எவ்வாறு இன்று நாமறியும் சமகாலச் சமஷ்டி முறையை வந்தடைந்து எனநூலின் முதலாம் அத்தியாயக் தொகுத்தும் கூறுகிறது. கூடவே சமஷ்டி முறைகள் வேறுபடுவதும் அவற்றின் உருவாக்கத்துக்கான சூழ்நிலைகளின் வேறுபாடும் இலங்கையில் அந்தக் கோட்பாட்டின் வருகையும் வளர்ச்சியும் அது தவறாகவே விளக்கப்படுகிற சூழ் நிலையும் விவரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது அத்தியாயம், அரசின் தன்மையையும் ஒரு சமஷ்டி ஆட்சி முறையில் மத்திய அரசுக்கும் சமஷ்டிக்குமிடையிலான உறவின் தன்மை எப்படிப்பட்டது என்பதை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகையான சமஷ்டி அமைப்புக்களைக்




கோட்பாட்டு முறையில் அடையாளங் காட்டுகிறது. இத் தொடர்பில், தேசியத்துக்கும் சனநாயகத்துக்கும் முள்ள உறவு வரலாற்று நோக்கிலும் சமூகத்தினுள் மனித ஆளுமையை முன்னிறுத்தியும் விவரிக்கப்படுகிறது.

மூன்றாம் அத்தியாயம் பிரிந்துசெல்வதற்கான உரிமையை உள்ளடக்கிய சுய நிர்ணய உரிமையைப் பற்றிய ஒரு விரிவான விளக்கமாக உள்ளது. லெனின் தெட்டத் தெளிவாகப் பிரித்து போவதற்கான உரிமை என்று வரையறுத்த சுயநிர்ணய உரிமை இன்று அகச்சுயநிர்ணய உரிமை, புறச்சுய நிர்ணய உரிமை என்று இரண்டு வகைப்படுத்தப்பட்டு இரண்டுமே கலங்கலான வடிவம் பெற்றுள்ளதையும் ஐ.நா.சபையின் சுயநிர்ணயக் கொள்கை நிறுவப்பட்ட அரசுகட்கே சாதகமாயுள்ளதா என்பதையும் விரிவாக விளக்குகிறது.

நான்காம் அத்தியாயம் இரண்டு சமஷ்டி யாப்புக்கள் பற்றிய விரிவான விவரணமும் மதிப்பீடுமாகும். அமெரிக்க, சுவிற்சர்லாந்து யாப்புக்கள் ஆய்வுக்கு எடுக்கப்பட்டுள்ளன.

ஐந்தாம் அத்தியாயம் இலங்கையில் சமஷ்டிக் கோரிக்கை பற்றிய வரலாற்று வழி விவரணம். இன்று சமஷ்டி பற்றிய சிந்தனை உருவான சூழ்நிலை மிகவும் தெளிவாகப் பழைய சமஷ்டிக் கோரிக்கைகளது சூழ்நிலையின்றும் வேறு படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

இறுதி அத்தியாயம் நூலிக் கூறப்பட்ட கருத்துக்களின் தொகுப்பாகவும் அவற்றை இலங்கையின் அரை நூற்றாண்டு அரசியல் வரலாற்றுச் சூழலில் வைத்து நோக்கி தேசிய இனப்பிரச்சனையின் தீர்வு சமஷ்டியாக அமையாத இடத்துப் பிரிவினை யாகவே அமையலாம் என்ற முடிவுக்கு வருகிறது. தமிழ்த் தேசிய வாதக் கண்ணோட்டத்திற் தமிழில் வெளி யான தேசிய இனப்பிரச்சனை பற்றிய நூல்களில் உள்ள அகச்சார் பான பண்பு இந்நூலில் அரிதாகவே உள்ளமை மெச்சத்தக்கது தகவல்கள் கவனமாகத் திரட்டப்பட்டுத் தெளிவாக வழங்கப்பட்டுள்ளன. அமெரிக்க, சுவிஸ் சமஷ்டி அமைப்புக்கள் பற்றிய விவரணம் தன்னளவிற் பயனுள்ள தாயினும் நூலின் பொதுப்பட்ட அமைப்புடனும் நோக்குடனும் பொருந்தவில்லை. அவ் விவரணம் ஒரு பின்னிணைப்பாகத் தரப்பட்டிருக்கலாம்.

உலக வரலாறு பற்றிய தகவல்கட்கு நாம் பெருமளவும் மேலை முதலாளிய ஊடகங்களையும் முதலாளிய வரலாற்றுப் பதிவுகளையும் விளக்கங்களையும் நம்பியிருக்கிறோம். நூலாசிரியர் சோவியத் யூனியனில் ஸ்தாலினின் ஆட்சிக் காலத்தில் நேர்ந்த தவறுகளை அவை எத்தகைய சூழல்களின் நெருக்குவாரங்களின் கீழ் நிகழ்ந்தன என்பதைப் பற்றிய மதிப்பீடின்றி அவை லெனினின் கொள்கைகளின் மறுதலிப்பு என்று நோக்க முற்படுகிறார். சோவியத்தின் தேசிய இனப்பிரச்சனை பற்றிய அறிக்கை தயாரிக்கும் பொறுப்பை லெனின் ஸ்தாலினிடம் ஒப்படைத்தார் என்பதும் ஸ்தாலின் ரஷ்யப் பேரினவாதியாக இருக்க நியாயமில்லை என்பதும் நூலிற் கவனிக்கப்படவில்லை.

தொடர்ச்சி 11ம் பக்கம்

www.padippakam.com



# வீற்றோ அதிகாரமும் ஐ.நாவும்

தற்போது ஐ. நா. சபையின் பாதுகாப்புச் சபையில் ஐந்து நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாவர். அத்துடன் அவை தடைவாக்கு- அதாவது வீற்றோ- அதிகாரத்தைக் கொண்டுள்ளன. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, ரசியா ஆகியவையே அந்த நாடுகளாகும். இந்த நாடுகள் தமது நாடுகளின் சொந்த நலனுக்கு ஏற்புடையதல்லவெனக் கருதும் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை தடைவாக்கு மூலம் தடுத்து நிறுத்திய சம்பவங்கள் ஏராளம். இஸ்ரேலுக்கு எதிரான பல தீர்மானங்களை அமெரிக்கா தனது தடைவாக்குகள் மூலம் நிறைவேறாவண்ணம் பார்த்துக் கொண்டுள்ளது.

ஆங்கிலம், பிரென்சு, அரபு, சீனம், ஸ்பானிஷ் ஆகிய மொழிகள் ஐநாவின் நடவடிக்கை மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஐ. நா. பாதுகாப்புச் சபையில் மேலும் பதினொரு நாடுகள் நிரந்தரமற்ற நாடுகளாக இரண்டு வருடத்திற்கொரு தடவை பிராந்திய அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றன. இந்த நிரந்தரமற்ற நாடுகளால் நிரந்தர நாடுகளின் ஆசீர்வாதமிருந்தால் மட்டுமே ஏதாவது தீர்மானத்தை நிறைவேற்ற முடியும். பதினொரு நாடுகளும் ஒருமித்த தீர்மானமாயிருந்தாலும் நிரந்தர உறுப்பு நாடுகளின் சம்மதத்துடனேயே அதை நிறைவேற்ற முடியும். ஐ. நாவின் செயலாளராகத் தெரிவு செய்யப்படுபவர் பிரென்சு மொழி பேசக்கூடியவராக இருக்க வேண்டுமென்பது எழுதப்படாத விதியாக பிரான்ஸ் கொண்டுள்ளது. ஐ. நா செயலாளாராகத் தெரிவு செய்யப்படுபவர் பிரென்சு மொழி தெரியாத விடத்து அவரின் பெயரை பிரான்ஸ் வீற்றோ செய்து விடும். பிரான்சின் இந்த மாதிரி நடவடிக்கை பற்றி குறிப்பிடும் போது முன்னாள் செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் ஹாலி "பிரென்சு மொழிபேசினால் மட்டும் போதாது. ஆங்கிலத்தையும் பிரென்சு மொழி தொனியுடன் பேசுபவராக இருக்கவேண்டும்{ எனக் கிண்டலாகத் தெரிவித்தார்.

இது ஒரு புறமிருக்க 1994ல் இருந்து ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அமைப்பை பாரிய மாற்றத்திற்குள்ளாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த பத்துவருடங்களாக எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. நிரந்தர நாடுகள் எந்த ஒரு மாற்றத்தையும் விரும்பவில்லை.

191 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐ. நாவில் அங்கத்துவ நாடுகள் பெரிதோ சிறிதோ ஒரு நாட்டிற்கு ஒருவாக்கு என்ற அடிப்படை இருந்தாலும் பாதுகாப்பு சபைக்கு மாத்திரம் ஐந்து நிரந்தர நாடுகளுக்கு தன்னிச்சையாக நடந்து கொள்ளும் வகையில் விசேட அதிகாரம் இருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

சென்ற மாதம் செயலாளர்நாயகம் கொபிஅனான் அறிக்கை ஒன் றைச் சமர்ப்பித்து ஐ. நாவைச் சீரமை ப்பு செய்வதற்கான மாற்றுத் திட்டம் இரண்டை சிபார்சு செய்தார். செப்டம்பர் மாதத்தில் நியூயோக்கில் கூடும் 150 நாட்டுத் தலைவர்களின் உச்சி மகாநாட்டில் இத் திட்டம் பரிசீலிக்கப்பட வேண்டுமெனவும் ஆலோசனை கூறினார்.

எந்தளவொரு நாட்டினதும் அதிகாரம் பாராளுமன்றங்களில் இருப்பதில்லை அங்கு வீண்வம்பு பேசி மக்களை திசை திருப்புவது போலவே ஐ. நாவும் வெறும் விவாத அரங்கே தவிர அதற்கு எந்த வித அதிகாரமும் இல்லை. அண்மைக் காலங்களில் பாதுகாப்புச் சபையின் அங்கீகாரமின்றியே ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்து அந்த நாட்டின் அரசாங்கத்தை கவிழ்த்தது. முழு உலகமுமே இஸ்ரேலின் அடாவடித் தனத்தைக் கண்டிக்கின்ற போதும் அமெரிக்காவிடம் தடைவாக்கு இருப்பதால் பாதுகாப்புச் சபையால் இஸ்ரேலைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்ற முடியாதுள்ளது.

# நேபாளம் முதல் இலங்கை வரை இந்திய மேலாதிக்கத்தின் செயற்பாடுகள்

இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முக்கர்ஜி முடிக்குரிய நேபாள இராணுவத்துடன் இந்தியா அதன் நீண்டகாலப் பிணைப்பைத் தொடருமெனத் தெரிவித்துள்ளார். "நேபாளத்தில் ஏற்படக்கூடிய நிலைமைகளைக் அடிப்படையாகக் கொண்டே புது டெல்லியின் இராணுவ உறவுகள் அமையுமென" முகர்ஜி இந்திய நகரமான பங்களூரில் தெரிவித்ததாக காத்மாண்டு போஸ்ற்" என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டது.

"நேபாளத்தின் அமைப்பு அண்மைய விளைவுகளால் பாதிக்கப்பட்டுள்ளது" எனவும் இரண்டு. நாட்டு எல்லைகளில் "ஓட்டைகள்" ஏற்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

அரசுக்கு எதிராக நேபாளத்தில் இடம் பெற்றுவரும் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டும் அல்லாவிடில் அது இந்தியாமீது பாதகமான விளைவை ஏற்படுத்தும்.

நேபாளத்தில் அரச எதிர்ப்பு கொரில்லாக்களில் செல்வாக்கால் நிலைமை மோசமடைந்தால் இந்தியா அதன் உள் நாட்டுப் பாதுகாப்பை வலுப்படுத்தும். முடிக்குரிய நேபாள இராணுவம் இந்திய இராணுவத்திடமிருந்து தொடர்ந்து குறிப்பான உதவி எதனையும் கோரவில்லை.

நேபாளத்தின் இராணுவத் தளபதி பியார் யுங் தாப்பா நேபாளத் தலைநகர் காத்மாண்டுவில் உள்ள இந்திய தூதுவர் சிவசங்கர் முக்கா்ஜியைச் சந்தித்த மறுதினமே மேற்கண்டவாறு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் தெரித்தார்.

இது இவ்வாறிருக்க நேபாளமன்னர் ஞானேந்திராவை இந்திய தூதுவர் சந்தித்து அரைமணி நேரம் நேபாள நிலைமை குறித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தியா படிப்படியாக தென்னாசியப் பிராந்தியத்தின் பொலீஸ்காரனாகச் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடியும். சீனாவுடன் எல்லையில் சீண்டி முன்பு மூக்குடைபட்டது. எவ்வாறாயினும் சீனாவை ஆக்கிரமிப்பாளனாகவே இந்திய ஆளும் வர்கமும் ஊடகமும் "அ" தொடக்கம் "ஃ" வரையான அரசியற் கட்சிகள் (நேர்மையான இடது சாரிகளைத் தவிர) அனைத்தும் சாடிவந்தன. நமது ஊடகங்களும் தமிழ் அரசியல்வாதிகளும் இதே பல்லவிதான் அன்றும் இன்றும் பாடிவருகின்றனர். அதைத் தொடர்ந்து தனது பாதுகாப்பிற்காக பங்களாதேஷ் பிரிவினைக்கு உத்வேக மூட்டியது. பங்களாதேசில் கம்யூனிஸ்ட்டுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றும் சாத்தியம் அதிகரித்த வேளையில் தனது படைகளை அனுப்பி கல்கத்தாவில் ஒழிந்து கொண்டிருந்த முஜீபுர்ர குமானை பங்களாதேசின் பிரதமராக்கியது. பங்களாதேஷில் இந்தியப்படையினர் வங்காளப் பெண் களைச் சூறையாடினர் அதனாலேயே இத்தனை வருடங்களின் பின்பும் வங்காளப் பெண்கள் இந்தியாவை பரம எதிரியாக (பாக்கிஸ்தானை விட) கருதுகின்றனர்.

இதன்பின் ஒரு தனிசுதந்திர நாடாகவிருந்த சிக்கிம் விழுங்கப்பட்டு இந்திய மாநிலமாக்கப்பட்டது. தமிழ்மக்களுக்கு உதவுவதாகப் பாசாங்கு செய்து இயக்கங்களுக்கு ஆதரவு வழங்கி பின்னர் இயக்கங்களை மோதவிட்டது.

பொட்டலம் போட்டு அப்பட்டமாக இலங்கையை ஆக்கிரமித்து. வடக்கு கிழக்கிற்கு படை அனுப்பி இலங்கை இராணுவம் பரவாயில்லை என்னும் அளவிற்கு தமிழ் மக்களை ஒடுக்கியது. அதன் பின் தமிழர்கள் மத்தியில் செல்வாக்கிழந்ததால் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளுடன் ஐக்கியம் பூண்டு நிற்கிறது இந்திய ஆளும் வர்க்கம். இப்போது சுனாமி அனர்த்தத்திலி ருந்து மீள்வதற்கு உதவுவதாக கூறி படைகளை அனுப்பியது. வந்தவர்கள் இலங்கையின் துறை முகங்களின் நீருக்கடி நில அமைப்பை ஒருவரும் கேட்காமலே படம் பிடித்து வரை படம் கீறியுள்ளனர். காங்கேசன் துறை, திருகோணமலை, கொழும்புத் துறை முகங்களின் நீருக்கடி அமைப்பு தற்போது இந்தியாவின் கையில். சென்ற தடவை ஆகாயத் தால் வந்திறங்கியவர்கள் அடுத்த தடவை நீர் மூழ்கிக் கப்பல்கள் மூலமாக புலியை அடக்க வந்து முழு நாட்டையும் இந்தியாவின் மாநில மாக்கப் போகிறார்கள். ஆனால் நாட்டின் சுயாதிபத்தியம், இறைமை பற்றிப் பேசும் ஜே. வி. பியினர் இதே இந்திய ஆளும் வர்க்கத்திற்கு சாமரை வீசி வருகின்றார்கள்.

இத்தனைக்கும் மத்தியில் ஊடகங்களும் தமிழ்த் தலைவர்களும் அடக்கி வாசிக்கிறார்கள். அன்று தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவின் விஸ்தரிப்புவாதக் கைப்பொம்மைகள் எனக் கூறிய ஜே. வி. பியினர் இன்று எமது மண்ணில் இந்திய அமெரிக்க படைகள் வந்திறங்கியமைக்கு நன்றி தெரிவிக்கிறார்கள்.

இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தொழிற்துறைகள் இந்தியாவின் கைக்குள் வந்த பின் சுனாமியின் புண்ணியத்தில் எதிர்பார்த்ததை விட விரைவாக இலங்கைக்குள் கால் பதித்துள்ளது. இவை அனைத்தும் இந்தியா இப் பிராந்தியத்தின் தனிக்காட்டு ராசாவாக வளர்ச்சியடைவதேயே காட்டுகிறது.

## தோழர் சிதம்பரி ......

8ம் பக்க தொடர்ச்சி.

அல்லது வேறு காரணங்களோ அல்ல என்பதை இன்றைய இளைய தலைமுறையினர் விளங்கிக் கொள்வது அவசியம். தோழர் சிதம்பரி போன்ற பல முன்னணிப் போராளிகள் மாக்ஸிச லெனினிசப் பொதுவுடைமைக் கட்சியின் வழிகாட்டலில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயகத்தின் முன்னின்று முன்னெடுத்த போராட்டங்களால்தான் என்ற உண்மை வரலாறாகவே இருந்து வருகின்றது. அப் போராட்டம் முதல் ஆயுதம் ஏந்திப் போராடி உயிர்களையும் இரத்தத்தையும் விலைகளாகக் கொடுத்தது வரையான புரட்சிகரப் போராட்டங்களாலேயேயாகும். அதேவேளை இன்னொரு முக்கிய அம்சத்தையும் காணுதல் வேண்டும். சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான அன்றைய போராட்டங்கள் பின்னைய வருடங்களில் தமிழ்த் தேசிய இனப் போரட்டங்களுக்கு முன்னுதாரணமாகிக் கொண்டது.இன்று தமிழ்த் தேசிய இனம் தமிழ்த் தேசியம் என்று கூறக் கூடிய நிலைக்கு தமிழர்களிடையே ஒரு ஜனநாயகப் போராட்டமாகவும் அன்று அமைந்திருந்தமை மறுப்பதற்கற்ற உண்மையாகும்.

எனவே தான் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கின்ற போது தமிழர் சமூகப் பரப்பிலே காணப்பட்ட சாதிய ஒடுக்குமுறை தீண்டாமைக்கு எதிராகப் போராடி வந்த ஒவ்வொருவரும் இன்று கௌரவத்துடன் நினைவு கொள்ளப்பட வேண்டியவர்களாவர்.

அந்தவகையில் தோழர் சிதம்பரி ஒரு புரட்சிகரப் பொதுவுடைமைவாதியாகவும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமைத்துவத்தில் ஒருவராகவும் வாழ்ந்து வந்தவர். அவர் இறுதிவரை புதிய- ஜனநாயக கட்சியின் மூத்த உறுப்பினராக இருந்து புதிய தலைமுறையினருக்கு முன்னுதாரணம் காட்டிச் சென்ற அவருக்குரிய கௌரவத்தையும் மதிப்பையும் கட்சியும் தோழர்களும் மட்டுமன்றி அவரது பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினவினர் வழங்கி வந்துள்ளனர். அவரது முதுமைக் காலத்திலும் அவருக்கு வழங்க வேண்டிய சகலவற்றையும் குடும்பத்தினர் வழங்கினர். இது வெறும் உறவு நிலை மட்டுமன்றி அவர் ஒரு அர்த்தமுள்ள சமூக வாழ்வு வாழ்ந்து இதுவரை ஒரு மாக்ஸிச லெனினிச அடையாளத்தைப் பேணி வந்தமைக்கு அவர்கள் கொடுத்த மதிப்புமாகும்.

மறைந்த தோழர் சிதம்பரிக்கு புதிய ஜனநாயக கட்சியின் மத்திய குழுவும் சகல கட்சித் தோழர்களும் புரட்சிகர நினைவஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றனர். அவரது நினைவு மக்கள் மத்தியிலும் கட்சியிடமும் நிலைத்து நின்று வரும்.

## அமெரிக்க ஆதிக்கம்.......

7ஆம் பக்க தொடர்ச்சி..

எனவே அவர்களிற் பலர் கம்யூனிஸ்ற்றுகள் உட்பட்ட பல வேறு விடுதலை அமைப்புக்களின் போராட்டங்களை ஆதரிக்க முற்பட்டனர். அவர்களது அனுபவங்களை அடிப்படையாக வைத்து பிறேஸிலில் ஃபிறெய் என்ற பாதிரியார் விடுதலைக்கான இறையியல் என்ற கோட்பாட்டை முன்வைத்தார்.

முதலில் அதை வரவேற்பது போலச் சாடைகாட்டிய போப்பரசர் வெகு விரைவிலேயே கத்தோலிக்கத் திருச்சபையின் மேல்மட்டத்தினருக்கும் அவர்கட்கு ஆதரவான பெருமுதலாளிகட்கும் சர்வாதிகார ஆட்சியாளர்கட்கும் சாதகமான விதமாகத் தன் நிலைப்பாட்டை மாற்றி விடுதலைக்கான இறையியலை நிராகரித்தார். இது பற்றிய கடும் விவாதம் 1980களின் போது நடந்தது. எனினும், சமூக உணர்வு மிக்க கத்தோலிக்கப் பாதிரிமார் பலர் இடதுசாரிகளுடனும் விடுதலை இயக்கங்களுடனும் சேர்ந்தே நிற்கின்றனர். அவர்களால் வத்திக்கானின் நிலைப்பாட்டை மாற்ற இயலாது.

விடுதலைக்கான இறையியல் கம்யூனிஸ ஆதிக்கத்திற்கும் அதன் மூலம் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆளுமையின் தேய்வுக்கும் வழிவகுக்குமென்று அஞ்சிய போப்பரசர், உண்மையில் கத்தோலிக்க மதத்திற்கு கேடான காரியங்கள் அமெரிக்க ஆட்சியாளர்களது ஆதரவுடன் கிறிஸ்தவ அடிப்படை வாதிகளால் மேற்கொள்ளப்பட்டதையம் அறிவார். அதை நேரடியாக எதிர்ப்பது இயலாதிருந்தது. ஏனெனிற் பணவசதியும் மக்களைக் கவருவதற்கான பல வேறு தந்திரங்களும் இந்த அடிப்படைவாதிகளிடமிருந்தன. பணம், வேலைவாய்ப்பு போன்றவற்றைக் காட்டியும் அவை மக்களை மதம் மாற்றுவதை நாம் அறிவோம். கத்தோலிக்க நாடுகளின் அமெரிக்க ஆதிக்கத்தை வலுப்படுத்துகிற ஒரு காரியமாக அவற்றின் மதமாற்ற வேலைகள் அமைந்தன.

கம்யூனிஸத்தை விட அமெரிக்க ஏகாதிபத்தியமே கத்தோலிக்க மதத்திற்கெதிரான பெரிய மிரட்டல் என்பது தெளிவான பின்னரே போப்பரசர் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் பேசத் துணிந்தார். லத்தின் அமெரிக்க நாடுகளில் சர்வாதிகார ஆட்சிகள் கவிழ்ந்து இடதுசாரிகள் சிறிது வலிமைபெறத் தொடங்கிய காலத்திலேயே போப்பரசரது பார்வையும் தெளிவு பெற்றது குறிப்பிடத்தக்கது.

1990களில் பிற்பகுதியில் போப்பரசர் அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டார். அவருக்குக் கியூபாவும் வரவேற்பளித்தது. அங்கு சென்ற போது அவர் கியூபாவின் "கம்யூனிச சர்வாதிகார" ஆட்சியைக் கண்டிக்கத் தவறவில்லை. அத்துடன் அமெரிக்கா கியூபாமீது விதித்த வணிகத் தடையையும் பிற குறுக்கீடுகளையும் அவர் கண்டித்தார். இது கியூபா மீதான அமெரிக்க நெருக்குவாரத்திற்குக் கிடைத்த ஒரு வலுவான அடி என்று அரசியல் அவதானிகள் கூறினர்.

கியூபா அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புக்கான தனது சர்வதேச ஐக்கிய முன்னணியில் ஒரு நேச சக்தியாகவே கியூபா போப்பாண்டவரைக் கருதுகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கடும்போக்குத் தொடரும் வரை, கியூபா லத்தின் அமெரிக்காவிலும் கத்தோலிக்க உலகிலும் மூன்றாமுலக நாடுகளிடையிலும் பலவாறான ஐக்கிய முன்னணிகளை அமைக்க வேண்டியிருக்கும். அதே வேளை சோஷலிஸத்திற்குக் குழிபறிக்கிற முயற்சிகட்கெதிராக மிகுந்த விழிப்புடனும் இருக்கும்.

போப்பரசருக்குக் கியூபா செலுத்திய மரியாதைக்கு இரண்டு அடிப்படைகள் உள்ளன. ஒன்று கடந்த பத்தாண்டுகளில் போப்பரசர் கியூபா மீதான அமெரிக்கத் தடைகட்குக் காட்டிய எதிர்ப்புக்கான நன்றி தெரிவித்தல். மற்றது கியூபாவின் கத்தோலிக்க மக்கள் மதிக்கும் மதத் தலைவரைக் கவுரவிப்பதன் மூலம் கியூபா மத விரோதமான ஆட்சியையுடையதல்ல என்று தெளிவுபடுத்துவது. உண்மையான கம்யூனிஸ்றுக்களுக்கு மத நம்பிக்கை இல்லை. ஆனால் அவர்கள் எந்த மத நம்பிக்கையையும் மதிப்பவர்கள், மதச் சுதந்திரத்தை ஏற்பவர்கள்.

போப்பரசர் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சில நிலைப்பாடுகளை மேற்கொண்டதால் அவர் முழுமையாக மாறிவிட்டாரென்று கூற இயலாது. கருத்தடை, மணமுறிவு, பெண்களின் சமூக நிலை என்பன பற்றிய அவரது பழமைவாதக் கடும் போக்கு எவ்வகையிலும் நெகிழவில்லை.

அடுத்த போப்பரசரது நிலைப்பாடுகள் எப்படி அமையும் என்று கூறுவது கடினம். ஏனெனில் கத்தோலிக்கத் திருச்சபை என்பது கிறிஸ்துவின் போதனைகள் மீது கட்டியெழுப்பப்பட்டாலும் அது ஒரு அரசியல் நிறுவனமாகவே செயற்பட்டு வந்துள்ளது. வத்திக்கானுக்குள் பலவாறான அரசியல் இழுபறிகள் உள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களை வலியுறுத்துவோரும் அங்கு உள்ளனர்.

எப்படியிருந்தாலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தொடர்பாகக் கத்தோலிக்கத் திருச்சபை எதிர்காலத்தில் எடுக்கும் நிலைப்பாடு உலக மக்களின் ஏகாதிபத்திய விரோதப் போராட்டத்தில் ஒரு முக்கியமான பங்கு வகிக்கும். அதை விடப் பெரிய அளவில் கத்தோலிக்கத் திருச்சபையின் எதிர்காலத்தையும் அது தீர்மானிக்கும்.

-சிறீ-

www.padippakam.com



## மு.பொன்னம்பலம் பார்வையில்

# கம்யூனிசம் அல்லாத யாவும் களிப்பூட்டும் விடயங்களேயாகும்

தேசிய இனப்பிரச்சனை, விவசாயிகள் பிரச்சனை, புரட்சியை 'ஏற்றுமதி செய்வது' சூழல்கட்கமையப் புரட்சியை வெவ்வேறு கட்டங்களாக வகுத்துப் படிப்படியாக முன்னெடுப்பது போன்ற விடயங்களில் த்ரொத்ஸ்கி லெனினுக்கும் ஸ்தாலினுக்கும் எதிர்மாறான விறைப்பான ஒரு நிலைப்பாட்டையே எடுத்தார். இதனாலேயே, கம்யூனிஸ்ற்றுக்கள் தமிழரை ஒரு தேசிய இனமாக ஏற்ற போதும், பழைய சமசமாஜக் கட்சியால் அத்தகைய நிலைப்பாட்டை எடுக்க இயலவில்லை.

ஸ்தாலின் தன் பதவியைக் காப்பாற்ற ஜேர்மனியில் சோசலிசப் புரட்சி ஏற்படாமல் தடுத்தார் என்பதுபோல இன்னும் பல வேறு அவதூறுகளையும் பல் வேறு இடங்களில் பொன்னம்பலம் குவிப்பது ஏன்? அவருடைய தேவை, வரலாற்றை அறிவதல்ல, மாறாகத் தனக்கு வசதியான கருத்துக்களை மட்டுமே பொறுக்கி எடுத்து பிறவற்றைப் புறக்கணிப்பது தான். ஜோஜ் புஷ், ற்றோணி ப்ளெயர் போன்றவர்கள் சோவியத் யூனியன் இரண்டாம் உலகப் போரில் ஆற்றிய பெரும் பங்கை மறுத்து விகாரப்படுத்துவது நம்மை வியக்கச் செய்வதில்லை. அமெரிக்க அதிகார நிறுவனத்தின் ஸ்தாலின் விரோத, சோவியத் விரோதப் பிரசாரம் எல்லாம் ஒரு ஆன்மிக வாதிக்கு இனிக்கிறதென்றால், அவரது ஆன்மா எங்கே நிழல் தேடுகிறது என்று நாம் ஊகிப்பது கடினமல்ல.

சி.ஐ.ஏ என்று ஒன்று தீவிரமாகச் செயற்பட்டு வந்ததைக் கூடப் பொன்னம்பலம் ஏற்கக் கூசுகிறார். இதற்கு நல்ல ஆன்மிக நியாயம் இருக்கலாம். 1950 களிலும் 60களிலும் தூய இலக்கியவாதத்தின் கலங்கரை விளக்கமாக இயங்கிய "என்கௌண்டர்" சஞ்சிகை சி.ஐ.ஏ. நிதி கொண்டு நடத்தப்பட்டது. தனது பழைய தோழர்களைக் காட்டிக்கொடுத்த ஜோஜ் ஒர்வெல் சி.ஐ.ஏ. கூலிப் படைகளுள் ஒருவராக மாறிச் செயற்பட்டார். இவை இன்று உலகறிந்த உண்மைகள். எனினும் என் கௌண்டரிலிருந்து மாக்ஸிய விரோதக் கருத்துக்களைக் கடன் வாங்கிய தளையசிங்கமும் தென் இந்தியத் தூய இலக்கியவாதிகள் கூட்டமொன்றும் அந்த உண்மையை ஏற்க விரும்பவில்லை. இன்றும் ஜோஜ் ஓாவெல் கம்யூனிஸ விரோதிகளது இலக்கியச் சிகரமாகத் தெரிவது வியப்புக்குரியதல்ல.

பொன்னம்பலத்தின் நேர்மையீனம் திரும்பத்திரும்பத் தன்னை வெளிக்காட்டத் தவறவில்லை. காந்தியத்தின் வாரிசு என்று அவர் ஜெயப்பிரகாஷ் நாராயணனை மெச்சுகிறார் (ப.59). இந்த ஜெயப்பிரகாஷ் நாராயணன் இந்திராகாந்தியை 1976ல் எதிர்த்து நின்றது பெரிதாகத் தெரிகிற நூலாசிரியருக்கு, மொரார்ஜி தேசாயிடம், 'தான் வென்றெடுத்த' ஆட்சியதிகாரத்தை ஒப்படைத்தது ஒரு 'பிழை' என்று தெரிகிறது. ஜெயப்பிரகாஷ் நாராயணன், 1960களிலேயே தனது காந்திய சோஷலிஸத்திலிருந்து வழுவி வலதுசாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து விட்டார். அது போக, இந்திரா காந்தியின் தோல்விக்கு இந்தியாவின் எத்தனையோ அரசியற்சக்திகள் பங்களித்தன. அரசியற் பச்சோந்தியான கருணாநிதி கூட உறுதியான ஒரு நிலைப்பாட்டை எடுத்தார். மாறாக சோவியத் சார்பு திரிபுவாதக் கம்யூனிஸ்ற் கட்சி தவறான நிலைப்பாட்டை மேற்கொண்டது.

**பொன்னம்பலத்தின் இலக்கியப் பார்வை மிகவும் ஒடுக்கமானதும் மங்கலானதுமாகும். அதனை வலுப்படுத்து விதமாகவே அவரது இலக்கியம் பற்றிய கட்டுரைகள் அமைந்துள்ளன.**

காந்தியின் அனுட்டானங்களை எல்லாம் மெச்சுகிற பொன்னம் பலத்துக்கு விளங்கத் தவறுகிற ஒரு உண்மை என்னவென்றால் எளிமையான வாழ்வின் அடையாளங்களை காந்தி சடங்குத் தனமாகக் கடைப்பிடித்ததன் விளைவாக, அவர் எளிமையான வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்க எவ்வளவு பொருள் விரயம் ஏற்பட்டது என்பது தான். இது பற்றிக் கவிஞை சரோஜினி நாயுடு நகைச் சுவையாகக் குறிப்பிட்டுள்ளார்.

காந்தி தனது தனிப்பட்ட வாழ்க்கைக்கு அளித்த முக்கியத்துவமும் அவரது தனிமனிதவாதப் பிடிவாதமும் மற்றவர்கள் தனக்கு இணங்கி நடக்க வேண்டும் என்பதற்காகக் கைக்கொண்ட நடை முறைகளும் மிகவும் சனநாயக விரோதமானவை. "மஹாத்மா" என்கிற ஒரு படிமத்தை அவர் தனக்கு வசதியாகப் பயன்படுத்திக் கொண்டார். காந்தியத்தின் வர்க்க அடிப்படையோ அதன் இந்து மேலாதிக்க உள்ளடக்கமோ சாதியமோ நூலாசிரியர் காண விரும்பாதவை. அம்பேத்கார், ஈ.வெ.ரா, ஜின்னா ஆகியோர் காந்தியுடன் முரண்பட்டது ஏன் என்ற கேள்விக்குக், காந்தியின் சர்வோதயம் பற்றிப் பேசுகிறவர்களால் பதில் கூற இயலாது. இலங்கையின் சர்வவோதய இயக்கம் எத்தனை ஊழல் பெருச்சாளிகளைக் கொழுக்க வைத்திருக்கிறது என்று நமது ஆன்மிகவாதிகள் அறியாதவர்களல்ல. அவர்களது பார்வையில், கொடிய வர்க்க ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுத மேந்தாமல் போரிடலாம், ஆனால் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆயுதமேந்திப் போராடவேண்டும்.

பெண்மை, கற்பு போன்ற விடயங்களிலே பொன்னம்பலத்தின் பழமைவாதம் அவரை அறியாமலே தலையை நீட்டி விடுகிறது. அவர் யார் யாரை ஏன் மெச்சுகிறார் என்பதைக் கவனிக்கிற எவருக்கும் ஒன்று தெளிவாகும். கம்யூனிசம் அல்லாத எது வென்றாலும் அது நிச்சயமாக அவருக்குக் களிப்பூட்டும். கம்யூனிஸ்ற்றுகள் பற்றிய தனது பார்வையின் கடுமையின் சிறு பகுதியைத் தான் கொண்டாடுகிறவர்களின் திசையில் திருப்பினாரரானால், தமையன் தளையசிங்கமும் தானும் உட்பட, மெச்சுவதற்கு அவருக்கு எதுவுமே மிஞ்சாது.

பொன்னம்பலத்தின் இலக்கியப் பார்வை மிகவும் ஒடுக்கமானதும் மங்கலானதும் என்பதே எனது மதிப்பீடாக இருந்து வந்துள்ளது. அந்த எண்ணத்தை வலுப்படுத்துகிறவிதமாகவே அவரது இலக்கியம் பற்றிய கட்டுரைகள் அமைந்துள்ளன. அதற்கும் மேலாக, அவர் தன்னையும் தனது தமையனையும் விட்டால், வேறெந்த ஈழத் தமிழ்ப் படைப்பாளியையும் உயர்வாகக் கருத மறுக்கிறார் என்றே அவரது கட்டுரைகளும் (அண்மைக்கால உரைகள் சிலவும்) உணர்த்துகின்றன. மரபுக் கவிதை பற்றிய அவரது மதிப்பீடு, அடிப்டையில் கவிதை பற்றிய அவரது பார்வைக் குறைபாட்டின் விளைவான தாகவே தெரிகிறது. முருகையன் யாப்பினின்று விலகிக் கவிதை எழுதுவது தனக்குக் கடினம் என்று சொல்வதை அவர் ஒரு பலவீனமாகக் காட்ட முனைவதும் மஹாகவியின் "அகலிகை"யிற் கவித்துவம் குறைவு என்ற விதமாக அவர் எழுதுவதும் (ப.92, ப.111), கவிதை உருவாகிற விதமும் அது செயற்படுகிற விதங்களும் பற்றிய அறியாமையின் வெளிப்பாடுகளே.

பொன்னம்பலத்துக்குத் தெரிந்த விதமாக எழுதினால் அது கவிதை, அவருக்குக் கைவராத விதமாக எழுதினால் அது கவிதையல்ல என்பதை ஒரு எளிமையான விதியாக அவர் கடைப்பிடிக்கிறார்.

கம்பரின் சொற்பிரயோகத்தில் "வலிந்து" எதுகை மோனைக்காகச் சொற்களைத் தெரிந்ததாகக் குற்றஞ்சுமத்துகிற பொன்னம்பலம், அவ்விதமான நிர்ப்பந்தம் எதுவும் இல்லாமலே தான் எழுதுகிற போது, சொற்களை அறிந்து அளந்து தான் பயன்படுத்துகிறாரா? 'புரட்சி க்க', 'இன்கமழ்' என்பனவெல்லாம் (ப.129) கவித்துவமான சொல்லாக்கங்களா அல்லது சோலைக் கிளிப் பாரம் பரியத்தில் எழுதுகிறவர்களது பாணியில் பெயர்ச்சித்தல் துயரித்தல் என்ற வாறு வருகிற ஒரு 'மொழி ஆளுமைக்கு' உரியனவா?

கவிதை பற்றிப் பொன்னம்பலத்தின் குழப்பமான கருத்துக்களை விமர்ச்சிபதை விட இவ்விடத்து தவிர்ப்பது அவர் உட்பட எல்லாருக்கும் கனிவானது.

~சிவா~

## ஐயையோ யாழ்ப்பாணம் அழியுது (2)

ஐயையோ யாழ்ப்பாணம் அழியுது!
ஐயையோ யாழ்ப்பாணம் அழியுது!
சொல்லிக்கொள்ளவும் மனசில்லை
சொல்லாமல் இருக்கவும் முடியலை
ஐயையோ யாழ்ப்பாணம் அழியுது!
ஐயையோ யாழ்ப்பாணம் அழியுது!
ஆன்மீகக் கொலை இங்கு நடக்குது
நித்தம் ஆன்மீகக்கொலை இங்குநடக்குது

காவி ஒன்று கட்டிவிட்டார்
கழுத்தில் ஒரு கொட்டை இட்டார்
சீவி நல்ல கொண்டையிட்டார்
சிங்காரமாய் பொட்டும்வைத்தார்
நெற்றியிலே நீற்றுப்பட்டை
நல்ல நீளமுள்ள ஒரு சால்வை
தன்னை அங்கீகாரம் பண்ணிக்கொள்ள
தனக்குத்தானே பட்டம் இட்டார்.

ஐயையோ யாழ்ப்பாணம் அழியுது........

திருமண ஒன்று செய்திடவே
மணவறை நாடிச் சென்றிடவே
மணவறை கொடுத்த மன்னவன்
கதிரைபெறும் இடம் காட்டி விட்டான்
கதிரை கொடுத்த கதிரவனோ
நயமாய் நான்கு வார்த்தை பேசி
நாதஸ்வரத்திற்கு தூதுவிட்டான்
இப்படிச்செய்வது தப்பில்லை
இது ஒரு வியாபார உடன்பாடு
இப்படி இது இருப்பது போல்
இங்குள்ள பல பெரியார்கள்
ஆசிச் செய்தி கேட்டு ஆள் அனுப்ப
ஆசி வார்த்தைகள் ஆற்றி விட்டு
அழைத்தார் தனது நண்பரையே
பொன்னாடை ஒன்று போர்த்தி
பொற்கிளி தானும் வழங்கிவிட்டு
கொடுத்தார் ஒரு பட்டத்தை
பெற்றார் அவரும் மகிழ்வுடனே
பட்டத்தை பெற்ற பண்பாளனை
பலரும் அழைத்தனர் பண்புடனே
செய்நன்றி மறவா திருந்திடவே
செய்தார் அவரும் இச் செயலை
தனக்கு பட்டம் தந்த வித்தகரை
விரைவாய் அழைத்தார் விழாவிற்கு
என்ன பட்டம் வேணும் என்று தானே
ஏற்கனவே கேட்டிருந்தார்
பிரம்மரிஷி என்றே கூறிவிட்டார்
கொடுத்தார் பிரம்மரிஷி பட்டம்
ஆனால் கலியுக வஷிட்டராய்.

ஐயையோ யாழ்ப்பாணம் அழியுது........

தன்னை நாடிவரும் அன்பருக்கு
தயவுடன் திருநீறு அளித்துவந்தார்
ஆத்ம ஞானம் பெற்றிடாமல்
ஆத்ம குருவாக ஆகிக்கொண்டார்
தன்னைத்தான் குருவாகச்
சொல்லிக்கொண்டார்.
தனக்குப்பின் வரவேண்டும் என்று
சொன்னரர்
தான் செய்யும் தவறுகள் அத்தனையும்
மூடிமறைக்க சித்தம் கொண்டார்
எடுத்தார் பகவத்கீதையினை
கொடுத்தார் தமது சீடரிடம்
பகவத்கீதை பயின்றிடவே
பலரும் விரைந்தனர் அவரிடமே
இவர்களை நம்பி ஏமாறும்
எம்மில் பலர் இங்குண்டு

ஐயையோ யாழ்ப்பாணம் அழியுது...
ஐயையோ யாழ்ப்பாணம் அழியுது...

உள்ளக்குமுறலுடன்
கலியுகவாதன்

### சமஷ்டியா தனிநாடா?.....

9ம் பக்க தொடர்ச்சி

நேரடியான பிரித்தானிய அதிகாரத்திற்குட்படாத இந்தியப் பிரதேசங்கள் பல உட்பட, தென்னிந்திய கிழக்கிந்திய, மேற்கிந்திய மாநிலங்கள் எவையும் இன்று இந்தியா எனக் கூறப்படும் நாட்டின் பகுதியாயிருந்த காலத்தை விட மிக நீண்டகாலமாக திபெத் சீனாவின் பகுதியாக இருந்தது.

சீனா யப்பானிய ஆக்கிரமிப்புக்குட்பட்ட காலத்திலும் அதற்கு முன்பு சீனாவின் ஆட்சி பலவீனமாக இருந்த கட்டங்களிலும் திபெத் மீதான நேரடியான கட்டுப்பாடு தளர்வாக இருந்ததே யொழிய திபெத் சீனாவிலிருந்து சுதந்திரமான தனிநாடாக மற்ற நாடுகளுடன் ராஜதந்திர உறவுகளைக் கொண்டிருக்கவில்லை, பிரித்தானிய கொலனி ஆட்சிக்கும் திபெத் மீது ஒரு கண் இருந்தது. கம்யூனிஸ்ற்றுக்கள் திபெத்தை விடுவிக்கு முன்பு நாட்டில் தமது அதிகாரத்தை முழுமையாக நிலை நிறுத்தும் தேவை இருந்தது.

திபெத் பிரதேசத்தைக் கம்யூனிஸ்றுக்கள் தமது ஆளுமைக்குக் கீழ்க் கொண்டுவர வன்முறை பயன்படவில்லை. 1958ல் நிலச் சீர்திருத்தம் அறிமுகப் படுத்தப்பட்டு அடிமைகள் விடுதலை செய்யப்பட்ட சூழ்நிலையிலேயே தலாய்லாமாவும் நிலப்பிரபுக்களும் கிளர்ச்சி செய்தனர். அது வரை திபெத்தின் சுதந்திரம் பற்றிப் பேசப்படவுமில்லை. அமெரிக்காவின் கூட்டாளியாக தலாய்லாமா மாறிய பின்பே திபெத் பிரச்சனை இந்தப் பரிமாணத்தைப் பெற்றது.

சீனா திபெத்தை ஆக்கிரமித்தது என்றால் இந்தியாவில் இருந்த எத்தனையோ சமஸ்தானங்கள் அதை விடமோசமாக ஆக்கிரமிக்கப்பட்டன என வேண்டும். (காஷ்மிர் பற்றியோ சிக்கிம் பற்றியோ கூட நான் குறிப்பிட வேண்டியதில்லை).

நூலாசிரியர் பண்டார நாயக்கவின் அரசியல் பற்றி முன்வைக்கும் விமர்சனங்களில் பண்டாரநாயக்கவின் அரசியலை அவரது தனிப்பட்ட நிலைப்பாடு பற்றிய மதிப்பீடாக நோக்குகிறார். பண்டாரநாயக்க என்ற தனி மனிதர் தென்னிலங்கையில் உருவான, முற்போக்கானதும் பிற்போக்கானதுமான அரசியற் பண்புகள் உட்பட்ட ஒரு போக்கின் பிரதிநிதியாகவும் கருவியாகவும் அமைந்தார் ஏகாதிபத்திய எதிர்ப்பில் மட்டுமன்றிப் பலவேறு சமூக விடயங்களிலும் 1956க்கும் பின்பான மாற்றங்கள் யூஎன்.பி ஆட்சியினின்று ஸ்ரீ.ல.சு. கட்சியை வேறுபடுத்திக் காட்டின. பண்டாரநாயக்க நாட்டைச் சீரழித்தார் என்றும் வேறு வகைகளிலும் வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் பண்டாரநாயக்கவின் முக்கியத்துவத்தை இன்னொரு திசையிலிருந்து மிகைப்படுத்துகிறது. இதன் விளைவாகத் தேசிய முதலாளிய, சிறு முதலாளிய வர்க்கங்களது நலன் பேணும் நோக்கில் சிங்களத் தேசியவாதம் உருவாகி வளர்ந்ததைத் தவறவிட நேருகிறது.

இடதுசாரி அரசியலின் மதிப்பீட்டை அவர் விரிவாக எடுத்ததால் (இடதுசாரிகள் எல்லாரையும் பகைவர்களாகவும் துரோகிகளாகவும் அவர் பார்க்காதது போக) நூலாசிரியர் தமிழ்ப்பாராளுமன்ற அரசியல் தலைமைகள் செய்த விஷமப் பிரசாரங்களை மறுக்கத் தவறிவிடுகிறார். சிங்களப் பேரினவாதமும் தமிழ்ப் தேசியவாதமும் தலைமை தாங்கித் தத்தமது அதிகார வர்க்க நலன்கள் சார்ந்து செயற் பட்ட சூழ்நிலையில் தேசிய இனப்பிரச்சனை பெரும்பாலும் இனப் பகைக்கே இட்டுச் சென்றுள்ளது. இன்றும் தேசிய சுயநிர்ணயம் பற்றி மாக்ஸிய லெனினியவாதிகளிடமே கூடுதலான தெளிவையும் உறுதியையும் நாம் காணுகிறோம்.

நூலின் உசாத்துணைகளில் இலங்கையில் தேசிய இப்பிரச்சனை பற்றிய இடதுசாரி, குறிப்பிட்ட மாக்ஸிய லெனினிய ஆய்வுகள் காணப்படாமை நூலாசிரியரின் சூழலின் வரையறைகளுக்குட்பட்ட தாயிருக்கலாம். எவ்வாறாயினும் தேசிய இனப்பிரச்சனை மட்டுமன்றித் தேசங்களின் விடுதலை பற்றியும் நூலாசிரியரது பார்வை அடிப்படையில் முற்போக்கானதும் வரவேற்கத்தக்கதும் என்பேன். இந்தியா பற்றிய மயக்கங்களைக் களையும் வகையில் இந்தியக் குறுக்கீடு பற்றிய மதிப்பீடுகள் அமைத்துள்ளதும் இன்றைய சூழலிற் பயனுள்ளது.

எவ்வறாயினும் இன்றைய உலகச் சூழலில், தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு சுமுகமான தீர்வு ஏற்படாதளவில், இலங்கையின் சகல தேசிய இனங்களும் ஒரு அந்நிய ஆதிக்கத்தினதோ இன்னொரு அந்நிய ஆதிக்கத்தினதோ அடிமைகளாகவே நேரும் என்ற உண்மையையும் நூலாசிரியர் மேலும் வற்புறுத்தியிருப்பின் அது நூலிற்கு, முழுமை சேர்த்திருக்கும்.

~மோகன்~

www.padippakam.com



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
புதிய பூமி Puthiya Poomi
சுற்று 12 | மே,யூன் 2005 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 80

போலியான "அபிவிருத்தி திட்டங்களை" வாபஸ்பெறு ! மேல் கொத்மலை திட்டத்தை உடனே நிறுத்து !
ஆர்ப்பாட்டம்
ஜூன் 03 பி.ப 4.30
கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால்
ජූනි 03 ප.ව. 4.30
மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம்

## புதிய- ஜனநாயக கட்சியின் மே தின ஊர்வலம் கூட்டங்கள் யாழ்ப்பாணம், மலையகத்தில் நடைபெற்றன










## யாழ்ப்பாணத்தில் புரட்சிகர மேதினம்

உலகத் தொழிலாளர்களின் போராட்டத்தினமான மேதினம் வழமை போன்று யாழ்ப்பாணத்தில் இம்முறையும் புரட்சிகரமாக புதிய-ஜனநாயக கட்சியினால் நினைவு கூரப்பட்டது. திருநேல்வேலிச் சந்தியிலிருந்து மேதின ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்த முடிவும் தயாரிப்புகளும் இடம் பெற்ற போதிலும் சில நிர்ப்பந்த சூழல் காரணமாக இறுதியில் அம் முடிவு மாற்றப்பட்டது. அதன் பின் யாழ் நகர் சத்திரச் சந்தியிலிருந்து ஆர்ப்பாட்ட ஊர் வலம் ஆரம்பமாகி கூட்ட மண்டபத்தை சென்றடைந்தது. பெரும் தொகையான உழைக்கும் மக்களும் இளை ஞர் யுவதிகளும் புத்திஜீவிகளும் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டு ஆளும் வர்க்கம் ஏகாதிபத்தியம், இந்திய மேலாதிக்கம் என்பன வற்றுக்கு எதிராகவும் தொழிலாளர்கள் விவசாயிகள் மீனவர்கள் உரிமைகளுக்காகவும் முழக்கமிட்டனர். உழைக்கும் வர்க்கமே ஒன்று சேர்வீர் சுயநிர்ணய உரிமை என்பனவற்றைத் தாங்கிய செம்பதாகையின் கீழ் ஊர்வலமும் பின் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. மேதினக் கூட்டத்திற்கு கட்சியின் வடபிரதேச செயலாளர் தோழர் கா..கதிர்காமநாதன் தலைமை தாங்கினார். கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் அரசியல் குழு உறுப்பினர் சோ.தேவராஜா, அரசியல் குழு உறுப்பினர். கா.தணிகாசலம் வாலிபர் இயக்கம் சார்பாக பொ.முருகேசு தொழிற்சங்க பிரதிநிதி கா.பஞ்சலிங்கம். இலங்கை ஆசிரியர்சங்க முன்னாள் வடபுலத் தலைவர் மு.தியாகராசா ஆகியோர் உரையாற்றினார். சில்லாலை சாந்தையைச் சேர்ந்த தொழிலாளி திரவியம் வர்க்க உணர்வு மிக்க இரண்டு கவிதைகளை வாசித்தளித்து கூட்டத்தினரை உணர்வூட்டினார். இம் முறை யாழ்ப்பாண மேதின ஆர்ப்பட்ட ஊர்வலமும் பொதுக் கூட்டமும் தொழிலாளி வர்க்க உணர்வு கொண்டதாக அமைந்திருந்தது

**பாலன்**

## மலையகத்தில் புரட்சிகர மே தினம்

புதிய ஜனநாயக கட்சியின் புரட்சிகர மே தினம் ஊர்வலம் மே 1 ஆம் திகதி காலை 11 மணிக்கு இராகலை நடுக்கணக்கு பஜாரிலிருந்து ஆரம்பமாகி ந.ப 12 மணிக்கு இராகலை நகருக்கு வந்தடைந்தது. அங்கு கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ. தம்பையா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

ஊர்வலத்தில் கார்ல்மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ சேதுங், சேகுவேரா ஆகியோரின் உருவப்படங்கள் கொண்டு செல்லப்பட்டதுடன் புரட்சிகர கோஷங்களும் எழுப்பப்பட்டன. இதில் தொழிலாளர்கள், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பெண்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேல் கொத்மலைத்திட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்பதையும் தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தையின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் வற்புறுத்து வதையும் ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கான எதிர்ப்பையும் பிரதான கருப்பொருட்களாக கொண்டு இப்புரட்சிகர மேதினம் நினைவு கூரப்பட்டது.

இம்மேதினக்கூட்டத்தில் 'மவுண்டன் மொசாட்ஸ்' இசைக்குழுவினரின் புரட்சிகர இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. மலையகப்பிரதேச செயலாளர் ச. பன்னீர்செல்வம், குயில்தோப்பு மகேந்திரன், புதிய மலையகம் மகேந்திரன், தேசிய அமைப்பாளர் இ.தம்பையா, கல்வியியலாளர் எஸ். இராஜேந்திரன் செல்வன் சில்வஸ்டர் உட்பட பலர் உரையாற்றினர். கூட்ட நிகழ்ச்சிகளை தோழர் ந. வரதராஜ் தொகுத் தளித்தார்.

அங்கு உரையாற்றிய தோழர் இ. தம்பையா மலையக பிற்போக்குத் தலைமைகளை நிராகரித்து மேல் கொத்மலைதிட்டத்திற்கு எதிரான எதிர்ப்பைக் காட்டுமுகமாக மே 15 ஆம் திகதி வேண்டும் என்று மக்கள் அணிதிரள வேண்டுகோள் விடுத்தார். தொழிலாளர்வர்க்க அடிப்படையிலான மாற்று அரசியல் தலைமைத்துவத்தை கட்டி வளர்ப்பதற்கான அவசியத்தை இம்மேதினம் வலியுறுத்தியது.

**நவம்**

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3 மடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A.K.சிறில் சி.பெரரேரா மாவத்தை, கொழும்பு 13.